REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஜூலை 31 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 92 இல. 181 | Wednesday 31, July, 2024 | 24 பக்கங்கள் | 50/-

## SLPP அமைச்சர்கள், எம்பிக்கள் பலர், ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

**நேரில் சந்தித்து ஆதரவு தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க முன் வந்துள்ளனர். பொதுஜன பெரமுனவின் அரசியல் சபையினால்

06

# ஜனாதிபதி ரணிலுக்கு 92 எம்.பிக்கள் ஆதரவு



## நேரில் சந்தித்து உறுதிமொழியளிப்பு

■ மேலும் பல எம்.பிக்களும் நாட்டின் எதிர்காலத்திற்காக ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க முன்வருகை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் உள்ளிட்ட 92 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவதாக நேற்று தெரிவித்தனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்துள்ள 92 பாராளுமன்ற உறுப்பினர்களும், அவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பான உறுதிமொழியை வழங்கியுள்ளதுடன் அவரது வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படப்போவதாகவும் தெரிவித்தனர்.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பாலானோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்குவதுடன் மேலும் சில கட்சிகள் ஓரிரு தினங்களில் ஜனாதிபதிக்கான ஆதரவை வெளிப்படுத்தும் என்றும்

06

## எல்ல Nine Arches Bridge சூழலில் சுற்றுலா முகாமைத்துவ திட்டம்

**பிரதமர் தலைமையில் உடன்படிக்கை கைச்சாத்து**



எல்ல, ஒன்பது வளைவு பாலத்தை (Nine Arches Bridge) சூழவுள்ள பிரதேசத்தின் சுற்றுலா முகாமைத்துவ திட்டம் தொடர்பில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கும் மத்திய கலாசார நிதியத்துக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நேற்று முன்தினம் (29) பிரதமர் அலுவலகத்தில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இலங்கையில் முதன் முறையாக தேசிய பாரம்பரிய தளம், தொடர்பில் ஆம்புலன்ஸ் சேவையொன்று இங்கு

06

## இலங்கை கிரிக்கட்டுக்கு புதிய யாப்பு உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம்




இலங்கை கிரிக்கட்டுக்கான புதிய யாப்பை சட்டமாக்குவதற்கு ஏதுவாக சட்டமூலத்தை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வெளிநாட்டமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர, தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை கிரிக்கட் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக விடயங்களை ஆராய்ந்து அமைச்சரவைக்கு விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அமைச்சரவை உபகுழுவின் இந்த அறிக்கைக்கமைய இலங்கை கிரிக்கட்டுக்கான

06

**2024ஆம் ஆண்டின் முதல் 05 மாதங்களில்**

## வரவு செலவில் துண்டுவிழும் தொகை 64 வீதமாக குறைவு



2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் வரவு செலவுத் திட்ட துண்டுவிழும் தொகை 63.8 வீதம் குறைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டு மே 31ஆம் திகதிக்கிடையில் (1,014 பில்லியன்) 1,01,400 கோடி ரூபா வரவு செலவுத் திட்ட இடைவெளி காணப்பட்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். மேலும் இவ்வருடத்தின் இதே காலப்பகுதியில் வரவு செலவுத்

06



## குரோத, வன்முறை அரசியலை JVPயினர் கைவிட வேண்டும்

**ஹோமாகம கூட்டத்தில் அமைச்சர் பந்துல குணவர்தன**

விரிவான செய்திகள் 06ஆம் பக்கத்தில்

## இ.தே.தோ. தொழிலாளர் சங்கத்துடன் இ.விவசாயிகள் சங்கம் சங்கமம்

**நுவரெலியாவில் வடிவேல் சுரேஷ் எம்.பி தெரிவிப்பு**

**ஹற்றன் சுழற்சி நிருபர்**



இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும், இலங்கை விவசாயிகள் சங்கமும் இன்று ஒன்றாக சங்கமித்துள்ளன. எனவே, இனிவரும் காலப்பகுதியில் அரசியல் மற்றும் தொழிற்சங்க ரீதியில் இந்த கூட்டணி தீர்மானிக்கும் சக்தியாக விளங்குமென இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார். நுவரெலியாவில் நேற்று (30) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர்

06

## தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடாதவாறு இடமாற்றங்கள்

**தேர்தல் ஆணைக்குழு பொது நிர்வாக அமைச்சுக்கு தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**




நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளில் தலையிடாத வகையில் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்ற நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த முடியுமென, தேர்தல்கள் ஆணைக்குழு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு தெரிவித்துள்ளது.

இவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளில் தலையிடாதவாறு அந்த செயற்பாடுகளை மேற்கொள்வதில், தேர்தல் ஆணைக்குழுவுக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்

06

## கேரளாவில் அடுத்தடுத்து மண்சரிவு

## 120 பேர் பலி: 1000 பேர் புதைந்து தவிப்பு



திருச்சி சாஹுல் ஹமீது

**500 வீடுகளுக்கு மேல் கடும் சேதம்**

இந்தியாவின் கேரளாவில் ஏற்பட்ட மண்சரிவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 120 ஆக அதிகரித்துள்ளது.

கேரளாவில் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்து வருகிறது. தொடர்ச்சியாக திங்கட்கிழமை இரவு பெய்த கடும் மழையின்

06

## மைத்திரியின் தீர்மானம் மீதான தடை உத்தரவு மேலும் நீடிப்பு



மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோரை கட்சி பொறுப்புகளிலிருந்து நீக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவர் மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட தீர்மானத்தின் மீது, பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை மேலும் நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்குகள் நேற்று (30) மீள அழைக்கப்பட்டது. இதையடுத்து கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதானவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

06

## நாட்டில் வேகமாகப் பரவும் இன்ஃப்ளுவன்ஸா வைரஸ்

**எச்சரிக்கை விடுக்கிறார் டொக்கர் லக்குமார்**

நாட்டில் இன்ஃப்ளுவன்ஸா வைரஸ் தொற்றுக்குள்ளானவர் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் கொவிட் 19 தொற்றின் போது கடைப்பிடிக்கப்பட்ட சுகாதார பாதுகாப்பு வழிகாட்டுதல்களை பின்பற்றுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. குழந்தைகள், முதியவர் மற்றும் நோயெதிர்ப்பு குறைபாடுள்ள நபர்கள் மத்தியில் இன்ஃப்ளுவன்ஸா வைரஸ் பரவும் வேகம் அதிகரித்துக் காணப்படுவதாக குழந்தை நல மருத்துவ ஆலோசகர் வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

06

## கெஹலியவின் பிணை மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் 09 இல்.



தனக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள நீதிமன்ற உத்தரவை நீக்கி, தன்னை பிணையில் விடுவிக்குமாறு கோரி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் ஆகஸ்ட் 09 இல், அறிவிக்கப்படுமென மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை (30) உத்தரவிட்டுள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள

06

## தோட்ட பாடசாலை அபிவிருத்தி நிதியை அதிகரிக்கிறது இந்தியா

**ரூ. 300 மில்லியன் 600 ஆக அதிகரிப்பு**

தோட்டப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக இந்திய அரசு ஏற்கனவே வழங்குவதற்கு தீர்மானித்த (300 மில்லியன்) 30 கோடி ரூபாவை இரட்டிப்பாக (600 மில்லியன்) 60 கோடி ரூபாவாக வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஏற்புடைய ஆவணங்களில் கையொப்பமிடுவதற்காக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை

06

## ஜனாதிபதித் தேர்தலில் SLFP யாருக்கு ஆதரவு?

**இன்று தீர்மானம் வெளியீடு**



ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கவுள்ள ஜனாதிபதி வேட்பாளர் யார்? என்பதை இன்று புதன்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளதாக கட்சியின் பிரதித் தலைவர் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். சுதந்திரக் கட்சிக்குள்ளிருக்கும் உறுப்பினர்கள் மூன்று

06

## பொலிஸ் மாஅதிபர் பதவி: சபாநாயகர் நாடு திரும்பியதும் ஜனாதிபதி பேச்சு

பொலிஸ் மாஅதிபர் பதவி தொடர்பில் ஏற்பட்டிருக்கும் சர்ச்சைகள் பற்றி சபாநாயகர் நாடு திரும்பியதும் விசேட கூட்டமொன்றை நடத்த, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரானின் புதிய ஜனாதிபதியின் பதவிப் பிரமாண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன ஈரானுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

பொலிஸ் மாஅதிபர் பதவி தொடர்பில் எழுந்துள்ள நெருக்கடி குறித்து சபாநாயகரும், பிரதம நீதியரசரும் ஒரு தீர்வுக்கு வரவேண்டுமென முன்னர்

06

# அமைச்சரவை முடிவுகள்




**01. களனி வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபத்தை இயங்கு நிலைக்கு கொண்டு வரல்**

களனி வித்யாலங்கார பிரிவெனா வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபம், கடந்த காலங்களில் நிலவிய வெளியகக் காரணிகளால் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டு இயங்கு நிலைக்கு கொண்டுவர முடியாது போயுள்ளது. கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியொதுக்கீட்டை 2025 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்வதற்காக பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரான பிரதமர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. சீதுவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்துக்கு சொந்தமான கட்டடத் தொகுதி**

**1000 மில்லியன் ரூபாய்கள் அடிப்படைச் செலவு மதிப்பீட்டில் சீதுவ பிரதேசத்தில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக 2016.07.26 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.**

தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழுவின் விதந்துரைகளுக்கமைய அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு குறித்த விலைமாற்றத்தின் பெறுமதியான 63.68 மில்லியன் ரூபாய்களைச் செலுத்துவதற்காக மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தேயிலை விற்பனைக் கடைகளை நடத்திச் செல்வதற்கான பெறுகை**

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்படும் விமானங்களின் வருகைக்காக பயணிகள் காத்திருக்கின்ற பிரதேசத்தில் தேயிலை விற்பனை செய்வதற்கான ஐந்து விற்பனை நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றன. தொழில்நுட்பமதிப்பீட்டுக் குழு மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைக்கமைய கம்பனிகளுக்கு ஒப்பந்தங்களை வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. CD அயனிக் கன்ட்ராஸ்ட் மீடியா (Non Ionic Contrast Media) விநியோகிப்பதற்கான பெறுகை**

CD மற்றும் X கதிரியக்கப்பட முறைமைக்காக பயன்படுத்தப்படும் Non Ionic Contrast Media கொள்வனவு செய்வதற்கான சர்வதேச போட்டி விலைமனு முறையின் கீழ் விலைமுறி கோரப்பட்டுள்ளது. பெறுகைக் குழுவின் விதந்துரையின் பிரகாரம், விபரங்களுடன் கூடிய பதிலளிப்புகளை வழங்கியுள்ள குறைந்த விலைமனுதாரரான யுனிக் ஃபாமசூட்டிக்கல்ஸ் லபோட்டறீஸ் இற்கு வழங்குவதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. டேன் (TAN) இம்ப்ளான்ட்ஸ் உடன் கூடிய டிஸ்டல் ஃபிமோரல் நேலின் தொகுதிகள் 45 இனை விநியோகிப்பதற்கான பெறுகை**

மோசமான என்பு முறிவுகளின் போது என்புகளைச் சுகப்படுத்தல் மற்றும் நேர்த்திப்படுத்தலுக்கு மேற்கொள்ளப்படுகின்ற என்பு முறிவு சிகிச்சைகளின் போது பயன்படுத்தப்படுகின்ற டேன் (TAN) இம்ப்ளான்ட்ஸ் உடன் கூடிய டிஸ்டல் ஃபிமோரல் நேலின் தொகுதிகள் 45 இன் பெறுகைக்காக சர்வதேச போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளது. அதற்காக, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைகளின் பிரகாரம், விபரங்களும் கூடிய பதிலளிப்புக்களை சமர்ப்பித்துள்ள குறைந்த விலைமுறிதாரரான இந்தியாவின் M/s Medisurge Internatiional, இற்கு குறித்த பெறுகையை வழங்குவதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. (393 ஆம் அத்தியாயம்) 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்பட்டுள்ள ஆணைக் குழுக்களின் அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

மனித உரிமைகள் மீறல்கள் பற்றி விசாரணை செய்வதற்காக முற்கூட்டியே நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு மற்றும் குழுக்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விசாரணை அறிக்கைகளை ஆராய்ந்து நடைமுறையிலுள்ள சட்டங்களின் பிரகாரம் இதுவரை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள விதம் பற்றியும், சமகால அரசின் கொள்கைகளுக்கமைய தொடர்ந்தும் இவ் விதந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய படிமுறைகள் தொடர்பான விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக (393 ஆம் அத்தியாயம்) 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டீ. நவாஸ் தலைமையிலான விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2022.09.22 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.இச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. இலங்கை உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுச் சட்டமூலம்**

சட்டவரைஞரால் வரைவாக்கம் செய்யப்பட்டுள்ள உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுச் சட்டமூலம் தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களைக் கருத்தில் கொண்டு, குறித்த சட்டமூலத்தைத் திருத்தம் செய்து புதிய சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2024.07.15 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி, வெளிநாட்டலுவல்கள் அமைச்சரும், நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

கொழும்பு துறைமுக நகரத்தில் வணிகங்களில் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கின்ற முதலீட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ள வணிக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக தற்போதுள்ள தடைகளை அகற்றி, உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மையான பொருளாதார வலயமாக கொழும்புத் துறைமுக நகரத்தின் ஆற்றல்வளத்தை அதிகரிப்பதற்கு இயலுமை கிட்டும் வகையில் கொழும்புத் துறைமுக நகரத்தின் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக கௌரவ ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. அரச – தனியார் பங்குடமை தேசிய முகவராண்மைக்கான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தல்**

அரச – தனியார் பங்குடமை தேசிய முகவராண்மை நிறுவனத்தால் அரச – தனியார் பங்குடமை வேலைத்திட்டங்கள்/ கருத்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் முகாமைத்துவம் பற்றிய சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து ஒருங்கிணைந்து செயலாற்றுவதற்கும், அவ்வாறான வேலைத்திட்டங்களை அடையாளங்கண்டு அரச நிறுவனங்களுடன் இணைந்து, குறித்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, அப்பணிகளுக்கான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# யாழ்.பல்கலைக்கழக பொருளியல் மாணவரின் போட்டித் திறனை மேம்படுத்துவது அவசியம்

இலங்கையில் அரசுக்கு சொந்தமான மற்றும் அரசாங்கத்தால் இயக்கப்படும் பொதுத்துறை பல்கலைக்கழகங்களில் உள்ள கலை, மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் பீடங்கள் 'வேலையில்லா பட்டதாரிகளை' உருவாக்குவதாக நீண்ட காலமாக அரசு (தொடர்ந்து வந்த அரசாங்கங்கள், உயர் கல்வி நிர்வாகிகள் மற்றும் கணக்காய்வாளர் திணைக்களம்) மற்றும் சமூகத்தில் இருந்து கடுமையான விமர்சனங்கள் எதிர்கொள்ளப்படுகின்றன.

இங்கே எங்கள் இலக்கு இந்த விமர்சனங்களை மறுப்பது அல்ல, மாறாக முன்னாள் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ் வளாகமாக, ஒகஸ்ட் 1, 1974 இல் நிறுவப்பட்டதிலிருந்து அதன் பொன்விழா ஆண்டைக் கொண்டாடும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் (UOJ) பொருளியல் துறை மாணவர்களின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கான ஒரு சிறுமுயற்சியை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

நாகலிங்கம் பாலகிருஷ்ணன்_கற்றறிவாளர்:

யாழ் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் ஆரம்பகால ஆசிரியர்களில் ஒருவரான மறைந்த நாகலிங்கம் பாலகிருஷ்ணன் (சுருக்கமாக N. பாலகிருஷ்ணன்), 1974 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்திலிருந்து வந்து சேர்ந்தார். பாலகிருஷ்ணன், பருத்தித்துறையின் புலோலி தெற்கைச் சேர்ந்தவர். பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரியின் புகழ்பெற்ற பழைய மாணவர் ஆவார். 1950 களில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் தனது இளங்கலைக் கல்வியை முடித்த அவர் 1970 களின் நடுப்பகுதி வரை அங்கேயே பல்கலைக்கழக ஆசிரியராக இருந்தார். நாம் அறிந்த வரையில், யாழ் பல்கலைக்கழகத்தின் பொருளியற்துறையில் இற்றைவரை பணியாற்றிய குறிப்பிடத்தக்க கற்றறிவாளர் (Scholar) பாலகிருஷ்ணன் மட்டுமே.

ஒரு கற்றறிவாளர் என்பது நம்பகமான மற்றும் புகழ்பெற்ற கல்வி இதழ்களில் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளின் கணிசமான சாதனைப் பதிவைக் கொண்ட ஒரு நபராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட கல்வி வெளியீடுகளினால் வெளியிடப்பட்ட படைப்புகளில் புத்தகங்கள் அல்லது புத்தக அத்தியாயங்களை வெளியிடும் நபராகவும் வரையறுக்கப்படுகிறது. உதாரணமாக, நாகலிங்கம் பாலகிருஷ்ணன் 1970களின் நடுப்பகுதியில் கலிபோர்னியா பல்கலைகழக அச்சகத்தால் வெளியிடப்பட்ட 'Asian Survey' (the successor to the Far Eastern Survey) இதழில் பல கட்டுரைகளை வெளியிட்டார்.

மேலும், 1970கள் மற்றும் 1980களில் இலங்கையின் பொருளாதாரம், வரலாறு மற்றும் சமூகம் தொடர்பான சர்வதேச அளவில் வெளியிடப்பட்ட தொகுதிகளுக்கு அவர் பல புத்தக அத்தியாயங்களை எழுதி பங்களித்தார். 1981 இல் கலிபோர்னியா பல்கலைக்கழக அச்சகத்தால் வெளியிடப்பட்ட 'இலங்கையின் வரலாறு' மற்றும் 1977 இல் ஹவாய் பல்கலைக்கழக அச்சகத்தால் வெளியிடப்பட்ட 'இலங்கை: ஒரு மதிப்பாய்வு' ஆகியவை அதில் அடங்கும்.

ஒரு கற்றறிவாளர் என்பதற்கு அப்பால், பாலகிருஷ்ணன் பேராதனைப் பல்கலைக் கழகம் மற்றும் யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள அவரது முன்னாள் கல்விச் சகாக்கள் மற்றும் மாணவர்களால் நற்பண்புகள் கொண்டவர் என்றும் கருதப்பட்டார். பாலகிருஷ்ணனின் புகழ்பெற்ற மாணவர்களில் ஒருவரான டாக்டர் சரத் ராஜபத்திரன (ஓய்வு பெற்ற உலக வங்கி ஊழியர்) ஒருமுறை பாலகிருஷ்ணன் ஒரு பணிவான நபர் என்றும், 1960களில் பேராதனையில் அவரது மாணவர்களில் ஒருவராக இருந்ததை பாக்கியமாக உணர்ந்ததாகவும் குறிப்பிட்டார்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் பொருளியல் பேராசிரியரான காலஞ்சென்ற கலாநிதி புத்ததாச ஹேவாவிதாரண, பாலகிருஷ்ணனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தியதுடன், 'அவர் பரந்த தோள்களைக் கொண்ட ஒரு சாந்தகுணமுள்ள மென்மையுள்ள மனிதர், அதன் மூலம் அவர் எவருக்கும் தங்கள் குறைகளைத் தெரிவிக்க இடமளித்தார்' எனக் கூறினார்.

சுருக்கமாக, நாகலிங்கம் பாலகிருஷ்ணன் நற்குடியாளர் மற்றும் கற்றறிவாளர் [Gentleman and a Scholar] என்ற சொற்றொடரின் உண்மையான அர்த்தத்தை வெளிப்படுத்தினார். சமகால இலங்கை கல்வித்துறையில் அவர் போன்ற ஆகிருதி கொண்ட ஒரு கல்விமான் கிடைப்பது மிகவும் அரிது.

குடிவழி மற்றம் கல்வியியல் [Pedigree and Pedagogy] பாலகிருஷ்ணனின் புகழ்பெற்ற கல்வி வாழ்க்கை, குடிவழிக்கும கல்வியியலுக்கும் இடையே உள்ள பிரிக்க முடியாத உறவை எடுத்துக்காட்டுகிறது. புலோலி குடிவழி பேராதனை கல்வியியல். யாழ்.பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டு நிறைவை முன்னிட்டு பொருளியல் துறையானது, மாணவர்களின் ஆராய்ச்சி மற்றும் பாண்டித்தியம் மூலம் கடந்த கால கல்வியியலை மீட்டெடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த 50 ஆண்டுகளில் கல்விசார் ஊழியர்களின் குடிவழியில் ஏற்பட்ட மாற்றங்களால் கடந்த காலத்தை முழுமையாக மீட்டெடுப்பது சாத்தியமில்லை என்றாலும், அதிநவீன ஆராய்ச்சி மூலம் கல்வியியலை மேம்படுத்த கூடுதல் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். ஆராய்ச்சி கல்வியியலை ஊட்டுகிறதே ஒழிய மாறாக அல்ல.




research feeds/informs pedagogy> not vice versa ஆராய்ச்சியின் இன்றியமையாமை ஆராய்ச்சி ஒருவரின் வாழ்நாளுக்கு மேலாக நீடிக்கிறது என்பதை எனது மாணவர்களுக்கு நான் அடிக்கடி நினைவூட்டுகிறேன். ஒருவரின் உடல் மறைவுக்குப் பிறகும் அவரது ஆராய்ச்சி வெளியீடுகளை மக்கள் குறிப்பிடலாம் அல்லது மேற்கோள் காட்டலாம். நாகலிங்கம் பாலகிருஷ்ணன் இறந்து பதினோரு வருடங்கள் ஆன பின்னரும் அவருடைய புலமைப் பிரசுரங்களை எமது மாணவர்களில் சிலர் தொடர்ந்து குறிப்பிட்டு மேற்கோள்காட்டி வருகின்றனர்.

பொருளாதாரத் துறையின் வரலாற்றில் முதன்முறையாக, ஏன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் கூட முதன்முறையாக, இறுதியாண்டு பொருளியல் மாணவர்களின் ஒரு சிறு குழுவினர் ஒன்றிணைந்து, BMJ Global Health [British Medical Journal] இதழில் இலங்கையில் கொவிட் 19 மேலாண்மை பற்றிய ஒரு சக மதிப்பாய்வு செய்யப்பட்ட கட்டுரைக்கு ஒரு மறுதளிப்பை வெளியிட்டனர்

மூலமுதலான கட்டுரை மற்றும் 'Unveiling Oversights and Underreporting: A Rebuttal of Sri Lanka's COVID19 Response Analysis' மறுதலிப்புக் கட்டுரை ஆகியன இரண்டும் இலவசமாக பதிவிறக்கம் செய்யப்படலாம்.

மறுப்புகள் மற்றும் மறுபரிசீலனைகள் போன்ற அறிவியல் பதிவின் திருத்தங்கள், அறிவியல் அறிவு உருவாக்கம் மற்றும் பரப்புதலின் இன்றியமையாத பகுதியாகும். இது விமர்சன சிந்தனையை பிரதிபலிக்கிறது, உயர்கல்வியில் பயிலும் மாணவர்களுக்கு இது ஒரு முக்கியமான அறிவாற்றல் திறன். கூடுதலாக, பரந்த பொது நுகர்வுக்காக ,இலங்கையில் பிரபலமான ஊடகங்களில் நீண்ட துண்டு பரப்பப்பட்டது.

மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் இறுதியாண்டு படிக்கும் மாணவர் ஒருவர் 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உலகப் பொருளியல்[World Economics] [indexed in Scopus https://www.scopus.com/sources.uri] என்ற புலோக ரீதியில் அட்டவணைப்படுத்தப்பட்ட இதழில் முதல் முதலாக ஒரு கட்டுரையை இணைந்து எழுதியுள்ளார். இது கலைப்பீடத்தில் முன்னோடியில்லாத ஒரு சாதனையாகும்.



திறன் மேன்மைக்கான உள்ளகப்பயிற்சி [Internship for Upskilling]:

மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் இறுதியாண்டு மாணவர்களுக்கு தொழில் அனுபவத்தைப் பெறும் நோக்குடன் கட்டாய உள்ளகப்பயிற்சியை [Internship] அறிமுகப்படுத்தியுள்ளது, ,து பல ஆண்டுகளுக்கு முன்பு பிற பீடங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களால் பின்பற்றப்பட்ட நடைமுறையாகும். இந்த உள்ளகப்பயிற்சி மாணவர்களுக்கு மென் திறன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தற்போது, பொருளியல் துறையை சேர்ந்த ஏழு மா ண வர்கள் கொழும்பில் உள்ள முன் ன ணி சமூக விஞ்ஞான சிந்தனைக் களஞ்சியங்களில் முதன்முறையாக உள்ளகப்பயிற்சி பெற்று வருகின்றனர்.

முன்னோக்கிய பாதை:

புலோகரீதியில் அதிநவீன ஆராய்ச்சி மற்றும் பரப்புதல் மற்றும் தேசிய அளவில் தொழில்த் திறனை பெறுதல் ஆகியவற்றின் மூலம் தொழிற் சந்தையில் மாணவர்களின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கு மாணவர்களின் செயல் நோக்கம் மற்றும் ஊக்குவிப்பினை ஏற்படுத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை மேற்கொண்ட உறுதியான முயற்சிகளை இந்த எடுத்துக்காட்டுகள் விளக்குகின்றன. இலங்கை இறையாண்மை திவால்நிலையின் கீழ் தொடர்ந்து தள்ளாடிக்கொண்டிருக்கும் அதே வேளையில், தொழிற் சந்தை வாய்ப்புகள் தாழ்த்தப்பட்ட நிலையில் கலை, மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் பீடங்களில் கற்று வருகின்ற இளங்கலை மாணவர்களின் போட்டித்திறனை உயர்த்துவதற்கு குறுகிய எல்லைக்கு வெளியே சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

_முத்துகிருஷ்ணா சர்வானந்தன்
தமிழாக்கம்: – தவராசா சுஜந்தினி

# இன, மத, சாதி அடிப்படையில் பிரிந்து வாக்களிக்க வேண்டாம்

## நாட்டின் வளர்ச்சியை சிந்திக்கும் ஜனாதிபதித் தேர்தலிது



ஜனாதிபதித் தேர்தலில் இன, மத மற்றும் சாதி அடிப்படையில் பிரிந்து வாக்களிக்க வேண்டாமென ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் , பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (29) நடைபெற்ற ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் பொது சம்மேளனத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு பிரியாமல் இலங்கையர்களாக ஒன்றிணைந்து நின்றால் ஆசியாவின் சக்திவாய்ந்த நாடாக இலங்கையை மாற்ற முடியும் என்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்காலத்தை காணக்கூடிய தொலைநோக்கு பார்வை கொண்ட உலகின் மிக சக்திவாய்ந்த தலைவர்களில் ஒருவரென சுட்டிக்காட்ட முடியும்

06

# ஜனாதிபதி ரணிலுக்கே முழுமையாக ஆதரவு

## பொருளாதாரத்தை வலுப்படுத்த பொருத்தமானவர்



பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானோர் தொடர்ச்சியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தி வருகின்ற நிலையில், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் பதிவொன்றை செய்து இதனைத் தெரிவித்துள்ளார்.

06

ரமழான், நத்தார் காலத்துக்காக

# முட்டைகள் இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

ரமழான் மற்றும் நத்தார் காலத்துக்கு நுகர்வோர் மற்றும் பேக்கரி உற்பத்திக்கு தேவையான முட்டைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறிப்பாக எதிர்வரும் ரமழான் மற்றும் நத்தார் கொண்டாட்ட காலங்களில் சந்தையில் முட்டை விலையை நிலைப்படுத்தவும், மற்றும் கேக் உள்ளிட்ட

06

# ISTRM செயலக உத்தியோகப்பூர்வ இணையத்தளம் அங்குரார்ப்பணம்

உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் (ISTRM) உத்தியோகப்பூர்வ இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வு, அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் நடைபெற்றது.

இடைக்கால செயலகத்தின் முன்னேற்றம் குறித்து அக்கறை காட்டுவோருக்கான பிரதான தகவல் மூலமாக இந்த இணையத்தளம் செயற்படும். இது குறித்த அறிக்கையை இந்த இணையத்தளத்தில் அறிந்துகொள்ள முடியும்.



1983 2009 ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற மோதல் நிலைமைகள் தொடர்பில், நிலைமாறுகால நீதியை செயற்படுத்தல் மற்றும் இதன்போதான நீண்டகால பாதிப்புக்களுக்கு தீர்வுகளை வலியுறுத்தும் அறிக்கையும் இணைய பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்களை வர்த்தமானியில் அறிவித்து பாராளுமன்றத்தில் சமர்பிக்கும் முன்னர் இது குறித்து சகல தரப்பினரதும் இணக்கப்பாடுகள் மற்றும் திருத்தங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

06

# ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவிக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம்

## IGP விவகாரத்துக்கு விரைவில் தீர்வு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

பொலிஸ் மாஅதிபர் விவகாரத்துக்கு விரைவான தீர்வை பெற்றுக் கொடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுத்து மூலம் அறிவிக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

பொலிஸ் மாஅதிபர் அல்லது பதில் பொலிஸ் மாஅதிபரை நியமிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி, ஜனாதிபதியின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ. எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

ராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் நேற்றைய தினம் தேர்தல்கள் ஆணைக்குழு விசேட கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தது. அந்த பதிவில்,

''பொருளாதாரத்துக்கே நாம் முன்னுரிமையளிக்கிறோம் ஜனாதிபதி ஊடக மையத்தில்

06

# வாக்கு சீட்டு விநியோகத்தில் 8,000 ஊழியர்கள் ஈடுபடுவர்

## பிரதித் தபால் மா அதிபர் தெரிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுகளை விநியோகிப்பதற்காக 8,000 அதிகாரிகளை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதித் தபால் மா அதிபர் ராஜித கே. ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தபால் மூல வாக்குகளுக்கான அட்டைகள் மற்றும் விசேட கடிதங்களை விரைவாக விநியோகிக்கும் விசேட வேலைத் திட்டமொன்றை, திணைக்களம் நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஐந்தாம் திகதி நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இந்த விண்ணப்பங்கள் எதிர்வரும் (05) தபாலில் இடப்பட்டால்

06

# நாட்டைப் பற்றி சிந்திக்கும் அனைவரும் ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவளிப்பர்

அரசியலுக்கு முன் நாட்டைப் பற்றி சிந்திக்கும் அனைவரும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பார்கள் என விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்தார்.

உலகின் சக்திவாய்ந்த தலைவர்கள் இக்கட்டான காலங்களில் உறுவாவதாக சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், கடந்தகாலத்தில் நிலவிய கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதில் வலுவான தலைமைத்துவத்தின் பண்புகளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளிப்படுத்தியதாகவும் தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் (30) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர்

06

எக்ஸ்பிரஸ் பேர்ள் தீ சம்பவம்

# விசாரணை அறிக்கை அனைத்தையும் சமர்ப்பிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு துறைமுக கடல் பகுதியில் எக்ஸ்பிரஸ் பேர்ள்ஸ் கப்பல் தீ விபத்துக்குள்ளானதினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக, இதுவரை நடந்த அனைத்து விசாரணை அறிக்கைகளையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உயர் நீதி மன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

06



கொழும்பு துறைமுக செயற்பாடு

# 2024 முதல் காலாண்டில் 05 கோடி டொ.வருவாய்

கொழும்பு துறைமுகம் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் (50 மில்லியன்) 05 கோடி அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கே. டி. எஸ். ருவன்சந்திரதெரிவித்துள்ளார்.

06


# Dialog Suraksha, உங்கள் கண்ணான செல்வங்களை இமை போல் காத்திடும் இலவச சேவை

இலங்கையின் #1 இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, 'Dialog Suraksha'-வை அறிமுகப்படுத்துகிறது. இணையவெளியில் உங்கள் பிள்ளையை பாதுகாத்திடும் ஒரு இலவச சேவையே இது. இதில் உங்கள் பிள்ளை இணையவெளியில் கற்கையிலும் விளையாடுகையிலும் அவர்களை காத்திடும் வகையில் இச்சேவைகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

Dialog Suraksha பெற்றோருக்கு நிம்மதியையும் சிறார்களுக்கு ஆரோக்கியமான முறையில் டிஜிட்டலை பாவிக்கும் பழக்கத்தையும் அளிக்கிறது. நிகழ்நிலையில் (Online) அவர்கள் செய்யும் அத்தனை நடவடிக்கைகளையும் ஒரே இடத்தில் கண்காணிக்க இது இடமளிக்கிறது. சிறார்கள் கல்விக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் அதிக நேரத்தை நிகழ்நிலையில் செலவிடுவதிலிருந்து காக்க இது உதவுகிறது. Dialog Suraksha பெற்றோருக்கும் பாதுகாவலர்களுக்கும் முழுமையாக இணையத்தை முடக்குதல், பாதுகாப்பற்ற வலைத்தளங்களை முடக்குதல், கற்றல் மற்றும் வேலை சார்ந்த உள்ளடக்கங்களை மட்டும் அணுக அனுமதித்தல், திரையிடும் நேரவரையறைகள் இணையப்பாவனையை மட்டுப்படுத்தல் ஆகிய வசதிகளை அளிக்கிறது. மேலும் பிள்ளையின் இருப்பிடத்தை நிகழ்நேரத்தில் (Real-time) அறிந்து கொள்ளும் அம்சமும் இதில் உண்டு.

உங்கள் பிள்ளைக்கு ஒரு மொபைல் இணைப்பை வழங்குவதாயின் அஞ்சாமல் டயலொக்கை தெரிவு செய்யலாம். Dialog Suraksha இணையப் பாதுகாப்பு சேவை உங்கள் பிள்ளையை எங்கிருந்தும் எந்நேரத்திலும் காக்கும்.




உங்கள் பிள்ளையின் உலகை பாதுகாப்பானதாக்கிட விரும்பும் அவர்களோடு இணைந்திருங்கள். அனைத்து டயலொக் மொபைல் மற்றும் Home Broadband வாடிக்கையாளர்களும் www.dialog.lk மூலம் இச்சேவையை இலவசமாக செயற்படுத்த முடியும்.



தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 15ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 24

### குறள் தரும் சிந்தனை



ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்

ஒரு குடம் பாலில் துளி நஞ்சுபோல், பேசும் சொற்களில் ஒரு சொல் தீய சொல்லாக இருந்து துன்பம் விளைவிக்குமானாலும், அந்தப் பேச்சில் உள்ள நல்ல சொற்கள் அனைத்தும் தீயனவாகிவிடும்.

# நாட்டை மீட்கும் திட்டங்களுக்கு மக்கள் பிரதிநிதிகளின் ஆதரவு

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியும் இத்தேர்தலுக்கு வேட்பு மனுவை ஏற்றுக்கொள்வதற்கான திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து இத்தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதன் முதலில் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார். அதனைத் தொடர்ந்து மேலும் சிலர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காகவும் தேர்தலை எதிர்கொள்வதற்காகவும் அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன.

இந்தச் சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்படும் அரசியல் கட்சியினரும் மக்கள் பிரதிநிதிகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தங்களது ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றனர். இதன் பயனாக ஜனாதிபதிக்கான ஆதரவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பெரும்பாலான அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது ஆதரவை ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளனர்.

இத்தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தனியாக தம் அபேட்சகரை நிறுத்தும் என்று அக்கட்சி நேற்றுமுன்தினம் அறிவித்தத்தைத் தொடர்ந்து அக்கட்சியை சேர்ந்த பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகள் இத்தீர்மானத்தை எடுத்துள்ளனர். அத்தோடு இக்கட்சியின் அநுராதபுர மாவட்டக்குழுவும் ஜனாதிபதிக்கு முழுமையான ஆதரவு நல்கப் போவதாக நேற்று அறிவித்தது.

மேலும் ஜனாதிபதியின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரதிநிதிகளும் ஜனாதிபதிக்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட பட்டியலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மானும் ஜனாதிபதிக்கு தமது ஆதரவை அறிவித்துள்ளார்.

வாக்காள மக்களின் விருப்பத்தையும் எதிர்பார்ப்பையும் அறிந்துள்ள ஒவ்வொரு மக்கள் பிரதிநிதியும் ஜனாதிபதிக்கே ஆதரவு அளிப்பர் என்பதற்கு இவை நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

ஏனெனில் இத்தேர்தல் நடாத்தப்படக்கூடிய காலம் கடந்த காலங்களைப் போன்ற ஒன்றல்ல. கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி மீட்சி பெற்று மறுமலர்ச்சி பாதையில் பிரவேசித்திருக்கும் சூழலிலும் வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுள்ள காலகட்டத்திலும்தான் நாடு இத்தேர்தலை எதிர்நோக்கியுள்ளது.

அதனால் கடந்த காலங்களைப் போலல்லாமல் மிகவும் பொறுப்புணர்வுடனும் தூரநோக்குடனும் செயற்பட வேண்டிய காலம் இது. இந்நிலைமையைக் கருத்தில் கொள்ளாது செயற்படும் போது நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் யாவும் பாதிப்படைந்து விடும். அது நாட்டில் மீண்டும் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டிட வழிவகுக்கும்.

ஆனால் 2022 ஆம் ஆண்டில் நாடு எதிர்கொண்டது போன்ற பொருளாதார நெருக்கடி மீண்டும் நாட்டில் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதே மக்களின் ஒரே விருப்பமாகும். அதனால் மக்களின் விருப்பதற்கு ஏற்ப செயற்பட வேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு முன்பாக உள்ளது.

பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த போது நாட்டின் தலைமையை ஏற்கவோ பொருளததார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெ்டுத்து மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்கவோ எவரும் முன்வராத இக்கட்டான நிலைமை 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்டது. அந்த துரதிர்ஷ்டமான நிலையில் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி நாட்டின் தலைமையை துணிந்து ஏற்றவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே ஆவார்.

ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அந்த சூழலில் நாட்டின் தலைமையை ஏற்பதைத் தவிர்த்துக் கொண்டனர். ஆபிரிக்க நாடுகளைப் போன்று வன்முறைகளும் வழிப்பறிக் கொள்ளைகளும் நாட்டில் தோற்றம் பெறும். சர்வாதிகாரம் தலைதூக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். நாட்டினதோ மக்களினதோ நலன்களை முன்னிலைப்படுத்தி அன்றைய சூழலில் தீர்மானங்களை எடுக்கத் தவறியவர்கள் தற்போதைய தேர்தலில் போட்டியிடுவதற்காக முண்டியடித்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறானவர்களின் எதிர்பார்ப்புப்படி நா ட்டில் ஆபிரிக்க நாடுகளைப் போன்று வன்முறைகள் தலைவிரித்தாடி, சர்வாதிகாரம் தலைதூக்கி இருந்தால் இவர்கள் இன்று இத்தேர்தலை எதிர்பார்த்திருக்க முடியாது.

நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை அன்று ஏற்று பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்ப ஆரம்பித்த பொருளாதார வேலைத்திட்டங்களின் பயனாக நாட்டில் சட்டம் ஒழுங்கு பேணிப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இத்தேர்தலையும் உரிய நேரகாலத்தில் நடத்தக் கூடியதாக இருக்கிறது. இவை அனைத்தையும் மக்கள் நன்கறிந்தவர்களாக உள்ளனர்.

ஆகவே பொருளாதார வீழ்ச்சியில் இருந்தும் வங்குரோத்து நிலையில் இருந்தும் குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டை மீட்டெடுத்து பல்வேறு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுத்துள்ள ஜனாதிபதிக்கு முழு நாட்டு மக்களும் நன்றிகடன்பட்டவர்களாவர் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# தமிழ், முஸ்லிம் மக்கள் பேதமின்றி இணைந்து செல்வது மிக அவசியம்

## முஸ்லிம்களின் வாக்குகளாலேயே பதுளை மாவட்டத்தில் இரு தமிழர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு –வடிவேல் சுரேஷ்

பதுளை மாவட்டத்தில் முஸ்லிம்களின் வாக்குகள் இல்லை என்றால் இரண்டு தமிழ்ப் பிரதிநிதிகள் பாராளுமன்றம் சென்றிருக்க முடியாது என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளருமாகிய வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்தில் உள்ள மத வழிபாட்டுத்தலங்களுக்கு நிதி உதவிகளை வழங்கி வைக்கும் நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் . அவர் மேலும் பேசியதாவது:

கடந்த தேர்தலின் போது முஸ்லிம் மக்கள் பூரண ஆதரவை எமக்குத் தந்தனர். குறிப்பாக வெலிமடை மற்றும் ஊவா பறணகமையில் 4000 தமிழ் வாக்குகள் உள்ளன. அப்பிரதேசத்தில் 12000 முஸ்லிம் வாக்குகளும் ஏனைய பிரதேச முஸ்லிம் மக்களின் வாக்குகளால்தான் தமிழர்களாகிய நானும் இராஜாங்க அமைச்சர் அரவிந்தக் குமாரும் பாராளுமன்றம் சென்றோம். இதனை மறைக்கவோ மறுக்கவோ முடியாது.எனவே நாம் இனி மேலும் பேரினவாதிகளின் வலைக்குள் சிக்க முடியாது.

நான் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் போன்றோருடன் கதைத்து, வார்வீக் தோட்ட மக்களுடன் கலந்துரையாடி சில்மியாபுர முஸ்லிம் கிராமத்திற்கு குடிநீர் விநியோகத் திட்டமொன்றினை மேற்கொண்டோம் ஆனால் பெரும்பான்மை அரசியல்வாதி ஒருவர் அந்த நீர் விநியோகத்தை வேறொரு கிராமத்திற்கு திசைதிருப்பியுள்ளார். இன்று சில்மியாபுர முஸ்லிம் கிராமத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுகின்றது.

நான் பாராளுமன்றத்தில் முஸ்லிம்களுக்கு சார்பாக உரையாற்றுகையில் செவிடன் காதில் சங்கு ஊதியது போன்று அவர்கள் எழுந்து சென்றதையும் நான் அவதானித்தேன். நாம் இனி தமிழ் வேறு முஸ்லிம் வேறு என பிரிந்து செல்ல முடியாது. மதத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட்டவர்கள். எனவே தமிழ், முஸ்லிம் மக்கள் பேதம் இன்றி நாம் இணைந்து செல்வதே காலத்தின் கட்டாயம்".





இம் மாவட்டத்தில் ஹக்கல வார்வீக் தொடக்கம் எலமான வரை 68 பெருந் தோட்டங்கள், 365 டிவிசன்கள், 202 தமிழ்மொழி மூல பாடசாலைகள், 184 இந்து ஆலயங்கள், 72 முஸ்லிம் பள்ளிவாசல்கள், 54 பௌத்த ஆலயங்கள், 42 கிறிஸ்தவ ஆலயங்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கென நிதி உதவிக்கான கடிதங்களை வழங்கி வைத்து வடிவேல் சுரேஷ் எம்.பி உரையாற்றினார்.

சாம ஸ்ரீ தேசமான்ய
எம்.ஏ.எம்.ஹசனார்...

# வயநாடு மண்சரிவில் பலியானோர் எண்ணிக்கை 80 ஆக உயர்வு



கேரளா மாநிலம் வயநாடு அருகே சூரல்மலைப் பகுதியில் நேற்று அதிகாலை அடுத்தடுத்து பயங்கர மண்சரிவுகள் ஏற்பட்டன. இந்த மண்சரிவுகளில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 80ஆக அதிகரித்துள்ளது. மேலும் நிலச்சரிவில் சிக்கிய 150 இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மண்சரிவில் சிக்கிய 500 குடும்பங்களைச் சேர்ந்த 700 பேரை மீட்கும் பணியில் பேரிடர் மீட்புக் குழுக்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. வயநாடு சூரல்மலை மீட்புப் பணியில் விமானப் படை ஹெலிகொப்டர்களும் ஈடுபட்டு வருகின்றன.

கேரளாவின் வயநாடு ப குதியில் தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. அப்பகுதியில் காட்டாறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. மேலும் வயநாடு சூரல்மலை பகுதியில் கேரளா மின்சார வாரியம் கட்டிய அணையும் நிரம்பி இருக்கிறது.

வயநாடு சூரல்மலை பகுதியில் இடைவிடாது கொட்டிய கனமழையால் நேற்றுமுன்தினம் காலை முதலே சிறிய மண்சரிவுகள் சில இடங்களில் ஏற்பட்டன. பெரும் எண்ணிக்கையிலான கட்டடங்களை வெள்ளம் சூழ்ந்திருந்தது. ஏராளமான வாகனங்கள் மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இதனால் முன்னெச்சரிக்கை அறிவிப்புகள் வெளியிடப்பட்டு வந்தன.

இந்த நிலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் சூரல்மலை பகுதியில் முதலில் பயங்கரமான மண்சரிவு ஏற்பட்டது.

இதனையடுத்து அதிகாலை 4.30 மணிக்கு இரண்டாவதாக மற்றொரு பெரும் மண்சரிவு ஏற்பட்டது. அடுத்தடுத்து ஏற்பட்ட நிலச்சரிவுகளால் வைத்திரி, வெள்ளேரிமலை, மேப்பாடி உள்ளிட்ட பகுதிகளில் பயங்கர பாதிப்பு ஏற்பட்டது. அட்டமலையில் இருந்து முண்டகை வரையிலான ஒரேயொரு பாலம் காட்டாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. வயநாடு சூரல்மலை மண்சரிவில் 500 வீடுகள் சிக்கி இருக்கின்றன.

பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதால் மண்சரிவில் சிக்கியவர்களையும் படுகாயமடைந்தவர்களையும் மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்வது பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது.

# தனிநபரின் சமூகமயமாக்கத்தில் கல்வி என்பது ஒரு திறவுகோல்



சமூகமயமாதலானது மனித நடத்தையோடும் சமூக நடத்தையோடும் தொடர்புடைய ஒரு செயன்முறையாகும். எனவேதான் காலமாற்றத்திற்கு ஏற்ப புதிய பரிமாணங்களையும் பல புதிய விடயங்களையும் உள்வாங்கிக் கொள்கின்றது.

கல்வியானது தனியாளை சமூகத்திற்குப் பொருத்தமான ஆக்கத்திறனுள்ள பூரண மனிதனாக மாற்றுவதில் பிரதான இடம் வகிக்கிறது. பாலர் பள்ளியில் வழங்கப்படும் கல்வி மூலம் தனியொரு பிள்ளையின் வாழ்க்கையில் முதல் தடவையாக சகபாடிக் குழுவினருடன் பழகுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இங்கே குழந்தை தனது ஒத்த வயதுக் குழந்தைகளுடன் தாம் வாழும் உலகம் பற்றிய பல விடயங்களை அறியவும் விவாதிக்கவும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

தனியாளின் ஆளுமையை வளர்த்தெடுத்து அதன் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு இட்டுச் சென்று, சமூகமானது அழியாமல் பாதுகாக்கும் கருவியாக கல்வி உள்ளது. தனியாளின் விருத்தி ஏற்படும் போதே சமுதாய விருத்தியும் ஏற்படுகின்றது. பிள்ளைகளை வளப்படுத்தி அவர்களை நற்பிரஜைகளாக சமூகத்தினுள் புகுத்த வேண்டிய பொறுப்பு பாடசாலையுடையதாகும். கல்வியினால் வாழ்க்கை முறைகள், செயற்பாடுகள் ஆகியன குறுகியகால இடைவெளியில் மாறிவிடுகின்றன. நாம் கற்றவற்றில் சில விடயங்கள் நமது வாழ்க்கைக்கு பயன்படாத அளவிற்கு, இன்றைய சமூகம் விரைவில் மாறிக்கொண்டு வருகின்றது.

தனிமனித வளர்ச்சி ஏற்படுவதற்கு அறிவு, திறன், உள இயக்கப் பரப்புக்களில் விருத்தி ஏற்பட வேண்டும். இதற்குக் கல்வி அவசியம். அதாவது மனிதனது அறிவு திறன் வளர்ச்சிக்கான பயிற்சியினைக் கல்வி வழங்க வேண்டும். இதற்காக எண்கணிதச் செயற்பாடுகள், தொழில்நுட்பப் பயிற்சிகள் போன்றவை கல்வியின் வாயிலாக வழங்கப்படுகின்றது.

சமூகமானது காலத்திற்குக் காலம் வேறுபாடுகளையும் மாற்றங்களையும் சந்தித்துக்கொண்டே இயங்குகின்றது. இவ்வாறான மாற்றங்களின் தன்மைகளை அதிகமாக உள்ளடக்கிய நிலையங்கள் கல்வி வழங்கும் நிறுவனங்களே. குடும்பப் பின்னணியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு பாடசாலையில் அனுமதிக்கப்படும் பிள்ளையானது பாடசாலையை விட்டு வெளியே செல்லும் போது நடத்தை மாற்றங்களை உள்வாங்கியவனாக சமூகத்திற்கு ஏற்றாற்போல் இசைவாக்கம் மிக்கவனாக சமூகத்தில் கால்தடம் பதிக்கிறான்.

சமூகத்தையும் மனிதனையும் இணைக்கும் செயற்பாட்டில் கல்வி பெரும் பங்கினை பெறுகிறது. கற்பதனால் மனிதன் பண்பாடடைகின்றான். சாதி, மத பேதமின்றி ஒன்றிணையத் தூண்டுவது கல்வி. சமூகமயமாக்கலை ஏற்படுத்தும் தலைசிறந்த நிறுவனம் பாடசாலை ஆகும். பாடசாலையானது குடும்பத்திற்கு அடுத்தபடியாக தனியாளின் சமூகமயமாக்கல் செயற்பாட்டில் பிரதான நிறுனமாக அமைகின்றது.

மேலும் கல்வியின் அடிப்படை அம்சமான பாடங்களின் ஊடாக சமூகவியல் அம்சங்கள் உள்ளடங்கி இருப்பதை அவதானிக்கலாம். கல்வி நிலையங்கள் எவ்வழியோ சமூகமும் அவ்வழி என்பது நடப்பியலாகும். இங்கு சமூக இயல்புக்கு ஏற்றவாறு மாணவர்களை தயார்படுத்தவும். இசைவு மிக்கவர்களாக உருவாக்கவும் தேவையான பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பபடுகின்றன. அவ்வகையில் சமூக உணர்வை வளர்த்தல், சமூக நடத்தைகளுடன் இசைவுபடுத்தல், சமூக கட்டுபாடுகளுக்கு கீழ்ப்படியச் செய்தல், சமூக விழுமியங்களை புகட்டல், புதிய தொழில்நுட்ப அறிவுக்கு இசைவுபட வைத்தல், சமூகத் தொடர்பாடலை வளமாக்கிக் கொள்ள உதவுதல் போன்றன அவற்றில் முக்கியமானவையாகும். சமூக உறவினை 'கற்றல்' என்ற கட்டமைப்புக்குள் கொண்டு வரும் பணியினை பாடசாலை செய்வதுடன் என்றுமே முதல் தர கல்வி நிறுவனமாகவும் இது தொழிற்படுகின்றது.

நமது நாடு அபிவிருத்தியடைந்துவரும் நாடு, இதில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றில் வளர்ச்சி ஏற்பட்டால் தான் நாடு முன்னேற்றமடையும். ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாடு அந்நாட்டின் தனிமனித சக்தியைச் சார்ந்துள்ளது. அந்நாட்டின் செல்வம் அந்நாட்டு மக்களிடம் கல்வித் தரத்தில் இருக்கின்றது. எனவே அம்மக்களில் ஒவ்வொரு தனிமனிதனதும் திறமைகளையும், ஆற்றல்களையும் வளர்த்து நாட்டில் ஒரு விருத்தி ஏற்பட வேண்டுமாயின் அது தொழிற்கல்வியின் மூலமே சாத்தியமாகும் என்பதை அறிந்திருக்க வேண்டும். இத்தகைய தொழிற்கல்வி என்பது கல்வி மூலமே கிடைக்கின்றது எனலாம். இத்தகைய தொழிற்கல்வியினைப் பெற்றுக்கொள்ளும் தனியாள் தனது சமூகத்தின் அபிவிருத்திக்காகச் செயற்படுகின்றான். இதற்கான வழிகாட்டுதலைத் தனியாள் கல்வியின் மூலமே பெற்றுக்கொள்கின்றான். ஆகவே தனியாளை சமூகத்திற்குப் பொருத்தமான ஆக்கத்திறனுள்ள பூரண மனிதனாக வடிவமைப்பதில் கல்வி பெரும் பங்கினை வகிக்கின்றது.

பாலச்சந்திரன் தர்சினி...
கல்வியியல் சிறப்பு கற்கை மாணவி
கல்வி, பிள்ளைநலத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

# புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை

சங்கர ஐயர் கதிர்காம ஐயர் அவர்களால் 1846 ஆம் ஆண்டில் ஆயக்கடவை சித்தி விநாயகருக்கு முன்பாகத் தோற்றுவிக்கப்பட்டு, 1927 இல் சேர் பொன். இராமநாதன் அவர்களால் அடிக்கல் நடப்பட்டு கட்டிஎழுப்பப்பட்ட புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை செயற்பாடுகள் இப்பாடசாலை சமூகத்தினரின் முன்னிலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இரட்னம் பவுண்டேசன் ஸ்தாபகர் வைத்திய கலாநிதி இரட்னம் நித்தியானந்தம் வழிகாட்டலில் லண்டனைச் சேர்ந்த பாரத கலாலயத்தின் திரு, திருமதி ஐங்கரன் அனைத்துலக மருத்துவநல அமைப்புடன் இணைந்து திறன் பலகை ஒன்றை வழங்கியதன் மூலம் இப்பாடசாலை ஆசிரியர்_ மாணவர்களின் இடைவினை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பாடசாலையின் அதிபர் சி.சிவகுமார் மற்றும் அழகியல் பாட ஆசிரியர் திருமதி கருணரூபினி குணநிதி ஆகியோரின் வேண்டுதலில் வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தினரின் நேரடிப் பங்களிப்பில் இது நிறைவேறியுள்ளது.





இதன் ஆரம்ப வைபவத்தில் அனைத்துலக மருத்துவநல அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், முன்னாள் பணிப்பாளர் கிருஷ்ணகுமார், வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சஞ்சீவன் ஆகியோருடன் இப்பாடசாலைமயின் கல்விச்சமூகத்தினரும் இணைந்து சிறப்பித்திருந்தார்கள்.

ஆசிரியர்கள் தம் வகுப்பு மாணவர்களை இணைத்து இடைவினையுடனான கற்றல் செயற்பாடுகளை நிகழ்த்தியமை சிறப்பான அம்சம். மற்றும் இவ்வைபவத்தில் அனைவருக்கும் ஆடிக்கூழ் மற்றும் மோதகம், பலகார வகைகள் பரிமாறப்பட்டன.




# மாத்தளை நந்தமித்ர ஹொக்கி விளையாட்டுத்திடல் விரைவில் திறப்பு

அக்குறணை குறூப் நிருபர்

மாத்தளை நந்தமித்ர ஹொக்கி விளையாட்டுத்திடல் அடுத்தமாதம் திறந்து வைக்கப்படவுள்ளதாக விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்கா தெரிவித்தார்.

மாத்தளை பேனார்ட் அலுவிகார மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹொக்கி விளையாட்டின் தாய்மடி எனக் கூறப்படும் மாத்தளை ஹொக்கி விளையாட்டை அபிவிருத்தி செய்ய தன்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளவுள்ளோம். இது எமது கடமைகளில் ஒன்றாகும் என்றும் அவர் தெரிவித்தார்.



இலங்கையில் பிரபல ஹொக்கி வீரர்கள் பலரை உருவாக்கியது மட்டுமல்லாது இலங்கை தேசிய ஹொக்கி அணிக்கு அதிகளவு ஹொக்கி வீரர்களை வழங்கிய ஒரு மண்ணாக மாத்தளை மண் உள்ளது.

மாத்தளை நந்தமித்ர ஹொக்கி விளையாட்டுத்திடல் நவீனமயப்படுத்தப்பட்டு, அதன் பணிகள் பூரணமடையும் நிலையில் உள்ளது. பேர்னாட் அலுவிகார மைதானத்தின் அபிவிருத்திப்பணிகள் பூரணமடைந்துள்ளன. அதே போல் மாத்தளை மாவட்டத்தில் பாடசாலை ஹொக்கி மற்றும் உதைப்பந்தாட்டப் போட்டிகள் வருடா வருடம் ஒழுங்காக இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.




அகில இலங்கை தமிழ்மொழித்தினப் போட்டியின் பசறை வலய மட்டப்போட்டிகளில் யூரி தமிழ் வித்தியாலய ஆரம்பப் பாடசாலை வரலாற்று சாதனை படைத்துள்ளது. பசறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற முதலாம் பிரிவுக்கான வாசிப்பு, இசை, பாவோதல், பேச்சு ஆகிய போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய ஜெ.மோனிஷ், வி.விதுர்ஷிகா, நி.தனன்யா, ச.பபிஷான் ஆகிய மாணவர்கள் முதலிடங்களைப்பெற்று மாகாண மட்டப்போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளனர். (படம் :லுணுகல நிருபர்)

## எனசல்கொல்ல ஆரம்ப பாடசாலைக்கான புதிய கட்டட அடிக்கல் நாட்டு விழா

கண்டி, தெல்தோட்டை எனசல்கொல்ல ஆரம்ப பாடசாலைக்கான புதிய கட்டட அடிக்கல் நடும் விழா நாளை காலை 10.00 மணிக்கு வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே கலந்து சிறப்பிக்கவுள்ளார். மத்திய மாகாண ஆளுநரின் தலையீட்டில் மத்திய மாகாண கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 03 கோடியே 60 இலட்சம் ரூபா மதிப்பீட்டில் இக்கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி சி.எம்.எப். சிமாரா (SLPS) தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக மத்திய மாகாணத்தின் பிரதம செயலாளர் ஜி.எச். எம்.ஏ. பிரேமசிறி கலந்து கொள்ளவுள்ளதுடன், விசேட அதிதிகளாக மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.எம்.யூ.பி. ஹேரத், திட்ட உதவிச் செயலாளர் கே.ஜி. நிசாந்த, மாகாணப் பணிப்பாளர் எம்.பி. அமரசிங்க பியதாஸ, வலயக் கல்வி பணிப்பாளர் டி.சி.ஐ. அந்தரகே ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு பாடசாலை சமூகத்தினர் அனைவரையும் அன்போடு அழைக்கின்றனர்.





பதுளை, சரஸ்வதி தேசிய கல்லூரி தனது 90 வருட பூர்த்தி விழாவை வெகுவிமரிசையாக கொண்டாடியது. இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து சிறப்பித்தார். இதன்போது, நூல் வெளியீடு, ஓய்வு பெறும் அதிபர் திருலோகசங்கருக்கான கலையம்சங்கள், சொற்பொழிவுகள் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் நோக்கில் மாத்தளை நகரிலுள்ள பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் ஆகிய மத வழிபாட்டுத் தலங்களுக்கான விஜயமொன்றை மாத்தளை சர்வ மத அறநெறி பாடசாலை மாணவர்கள் குழு நேற்றுமுன்தினம் மேற்கொண்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## வை.எம்.எம்.ஏ. பணிப்பாளராக மீண்டும் லுக்மான் தெரிவு

சப்ரகமுவ மாகாணத்தில் வை.எம்.எம்.ஏ.பணிப்பாளராக அரநாயக்க எம்.கே.அஹமட் லுக்மான் எட்டாவது தடவையாக, மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அண்மையில் இவருக்கான நியமனக் கடிதத்தை அகில இலங்கை வை.எம். எம்.ஏ. தலைமையகத்தில் வைத்து வை.எம்.எம்.ஏ. இன் தேசிய தலைவர் சட்டத்தரணி அம்ஹர் ஷரீப் வழங்கிவைத்தார். இவர் அரநாயக்கவை பிறப்பிடமாகவும் மாவனல்லையை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

# ரூ.1700 சம்பள விடயத்தில் ஜனாதிபதி முன்வைத்த காலை பின்வைக்க மாட்டார்

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன் வைத்த காலை பின் வைக்க மாட்டார் என்ற நம்பிக்கை எமக்குள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் கொத்மலை வலய அமைப்பாளரும்,கொத்மலை பிரதேச அரசியல் அதிகார சபை உப தலைவருமான சண்முகம் திருச்செல்வம் உறுதியாக தெரிவித்தார்.

கொத்மலை தவலன்தன்னை நகரில் ஐக்கிய தேசிய கட்சியின் செயற்பாட்டு அலுவலகத்தை திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான ரூ.1700 சம்பளம் தொடர்பில் தொழிற்சங்கங்கள் யாரும் அன்று அழுத்தம் கொடுக்கவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கு அமைவாக அரசாங்க ஊழியர்களுக்கும், தனியார் ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்ட போது பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் சம்பளத்தை உயர்த்தி கொடுக்க வேண்டுமென முதலில் பெருந்தோட்ட முகாமைத்துவ கம்பனி நிர்வாகத்தினரை அழைத்து கேட்டறிந்தார்.



கடந்த 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் மக்கள், ஐக்கிய தேசிய கட்சியை நிராகரித்தார்கள். இதன் போது நாடளாவிய ரீதியில் சுமார் இரண்டரை இலட்சம் வாக்குகள் மாத்திரம் எமது கட்சிக்கு கிடைத்தது.

இதன் மூலம் ஒரே ஒரு பாராளுமன்ற ஆசனம் கிடைத்தது. அதுவும் போனஸ் ஆசனம். இந்த ஆசனத்தில் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற உறுப்பினராக சென்றார். இந்த சமயத்தில் அவரை பலர் விமர்சித்தார்கள்.

ஆனால் அன்று கிடைத்த ஒரே ஒரு ஆசனம்தான் இன்று நாட்டில் இரண்டு கோடியே 20 இலட்சம் மக்களை வாழ வைத்து பாதுகாக்கிறது.

2022 ஆம் ஆண்டு முதல் நமது நாடு பொருளாதாரத்தில் வங்குரோத்து அடைந்து மக்கள் வரிசை நீண்டு அத்தியாவசிய தேவைகளை கூட பூர்த்தி செய்யமுடியாத நிலையில் அவதிப்பட்டனர்.

இந்த காலக்கட்டத்தில் ஆட்சியிலிருந்த அரசாங்கத்தை நாட்டு மக்கள் விரட்டினர். இந்நிலையில் நாட்டையும், மக்களையும் பாதுகாக்க எந்தவோர் தலைவரும் முன்வராது பின்வாங்கிய போது நாட்டு மக்களின் நன் மதிப்பை பெற்ற பழமையான கட்சி என்ற வகையில் பொறுப்புமிக்க தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீட்டு மக்களை பாதுகாக்க இக்கட்டான சூழ்நிலையில் முன்வந்தார். அன்று மீண்டும் நாட்டு மக்கள் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து அவரை நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டதன் காரணமாக அவரின் சாணக்கிய அரசியலால் தற்போது இரண்டு வருட காலத்தில் நாட்டு மக்கள் வரிசை யுகத்திலிருந்து மீண்டு நிம்மதியாக வாழக்கூடிய நிலையை உருவாக்கியுள்ளார்.

பொருளாதாரமும் அபிவிருத்தியடைந்து வரும் சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளார். இதை யாரும் மறுக்கவோ மறக்கவோ முடியாது.

இதேசமயத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்கள் இந்நாட்டு பொருளாதாரத்திற்கு பெரும் பங்காளிகளாக திகழ்வதாக அவர் தெரிவித்தார்.

(ஆ.ரமேஷ்)



வன்னியோப் அமைப்பினரின் கல்வி திறன் மேம்பாட்டு செயற்றிட்டத்தின் கீழ் பசறை, கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையில் நேற்று கணித செயற்பாட்டு வகுப்பறை திறந்துவைக்கப்பட்டது. இதன்போது அமைப்பினரால் பெறுமதிமிக்க கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பசறை வலய கல்வி பணிப்பாளர் ஸரீனா பேகம், உதவி கல்வி பணிப்பாளர் கவிதாஞ்சலி, வன்னியோப் அமைப்பின் பணிப்பாளர்கள், ரஞ்சன் சிவஞானசுந்தரம், தில்லைராஜ் வள்ளுவன், செயலாளர் மாலதி, இணைப்பாளர் காண்டிபன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (படம்: லுணுகல நிருபர்)

## சடலம் மீட்பு

வில்பத்துவ தேசிய பூங்காவிற்கு அருகில் ஓடும் கலாஓயாவில் மிதந்துக் கொண்டிருந்த நிலையில், சடலமொன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

வனாத்தவில்லுவ பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவர் அண்மையில் கலாஓயாவில் நீராடச் சென்ற போது சிலருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தில் கொல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வனாத்தவில்லுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு – ஐவர் கைது

ஹற்றன் சுழற்சி நிருபர்

சட்டவிரோதமான முறையில் மரக்கறி தோட்டப்பகுதியில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுப்பட்ட ஐந்து சந்தேகநபர்கள் பொகவந்தலாவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மரக்கறி தோட்டத்தில் சிலர் பாரிய குழிகள் தோண்டி சுற்றுச்சூழலை நாசம் செய்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பொகவந்தலாவ பொலிஸார் சுற்றிவளைத்து சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பலாங்கொடை, எல்பிட்டிய மற்றும் அனுராதபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட 34 - 45 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன், பொகவந்தலாவ பிரதேசத்தைச் சேர்ந்த மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடும் ஒருவரின் பின்புலத்திலேயே இந்த சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மற்றும் இரத்தினக்கல் அகழ்வதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# குரோத அரசியலை கைவிட்டு வன்முறை அரசியல் கலாசாரத்தை JVP கைவிட வேண்டும்

## ஹோமாகம கூட்டத்தில் அமைச்சர் பந்துல குணவர்தன

குரோத அரசியலை கைவிட்டு வன்முறை அரசியல் கலாசாரத்தை ஜே. வி. பியினர் கைவிட வேண்டும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். ஜே.வி.பி. தம்பிமார் வன்முறை அரசியலிலிருந்து விடுபடுவது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹோமாகம நகரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றியுள்ள அவர்,

1989இல், முதலாவதாக கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட போது நாடெங்கிலும் வன்முறை அரசியல் கலாசாரமே இருந்தது. அன்று ஜேவிபி யின் கோஷமானது "திருட்டுப் பாராளுமன்றத்தை பகிஷ்கரிப்போம்" " பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவோருக்கு மரண தண்டனை" என்பதே.

அவர்கள் எனக்கும் மரண அச்சுறுத்தல் விடுத்து கடிதம் ஒன்றைக் கையளித்தனர். தேர்தலில் வாக்களிக்கும் அனைவருக்கும் தண்டனை மரணமே என அதில் தெரிவித்திருந்தனர். முதல் ஐந்து பேருக்கு முறைப்படி மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு தேர்தல் தினத்தில் தெற்கில் படுகொலை செய்தனர். அவ்வாறு கொல்லப்பட்ட உடல்களை மண்டியிட்டவாறு புதைப்பதற்கு நடவடிக்கை எடுத்தனர். அன்று ஹோமாகம பகுதியில் காணப்பட்ட நிலை இதுவே. நீதிமன்றத்திற்கும் தீ வைத்தனர்.




நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் ஹோமாகம நீதிமன்றத்திற்கு தீ வைத்து, நீதிபதியின் உடைகளை எருமை மாட்டுக்கு உடுத்தி அதை ஹோமாகம நகரில் அங்குமிங்கும் ஓடச் செய்தனர். அந்த வகையில் அன்று ஜேவிபி நாட்டின் சட்டத்தை எருமை மாட்டுக்கு சமனாகவே மதித்தனர். ஹோமாகம தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபை வேட்பாளராக தர்மசேன போட்டியிட்டார்.அவரது மகள் மதுகா தர்மசேன ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தில் கல்வி கற்றார். தர்மசேன ஐக்கிய தேசியக் கட்சியில் வேட்பாளராக போட்டியிட்டதால் அவர்கள் துப்பாக்கியுடன் தர்மசேனவின் வீட்டுக்குச் சென்றனர். அவர்களிடம் தர்மசேனவின் மனைவி, அவர் அரசியல் செய்வதால் எமக்கு பிரச்சனை தர வேண்டாம் என மன்றாடிக் கேட்டுக்கொண்டார். எனினும் அவர் பாதுகாப்பாக அணைத்து மறைத்து வைத்திருந்த மதுகா என்ற அவரது மகளைச் சுட்டுக் கொன்றனர். தர்மசேனவின் தந்தை பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டு கட்டிலில் படுத்திருந்தார். அவருக்கு அருகில் சென்று அவரையும் சுட்டுக் கொன்றனர். இவ்வாறு தர்மசேனவின் வீட்டில் வைத்து ஐந்து பேர் கொலை செய்யப்பட்டு அங்கு இரத்த ஆறு ஓடியது. ஜேவிபியின் கடந்த காலம் இந்தளவு கொடூரமானது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு 2022 ஆம் ஆண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் மக்கள் பிரதிநிதியான அத்துக்கோரளவை நிட்டம்புவ பகுதியில் வைத்து மக்கள் மத்தியில் படுகொலை செய்தனர்.

எனது வீடு உட்பட மக்கள் பிரதிநிதிகள் 72 பேரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அவர்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

மாகும்புர சந்தியிலிருந்த எனது காரியாலயத்திற்கு தீ வைக்கப்பட்டது.அதை சந்தியில் வைத்து அன்று பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவைத் தாக்கினர். மேலும் சில உள்ளூராட்சி சபை உறுப்பினர்களையும் தாக்கின.ர் எமது பாடசாலை அதிபரைத் தாக்கினர். பிரதேச சபை உறுப்பினரான மகிந்த உடுவனவை நிர்வாணமாக்கித் தாக்கினர். கெஸ்பேவ பிரதேச சபைத் தலைவர் லக்ஷ்மணவின் வீட்டுக்குத் தீ வைத்தனர்.பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே உட்பட அவர்களின் உறவினர்களின் வீடுகளும் தீ வைக்கப்பட்டன. குரோத அரசியலில் ஈடுபட்டோர் 'சில்'எடுக்கும் காலம் இது. அதனால் வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க படுகொலை அரசியலிலிருந்து விடுபடுவதற்கு இந்த சின்னத் தம்பிகளுக்கு கற்பிக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் மக்கள் ஜனநாயக அரசியல் கலாசாரத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். ஹோமாகம மக்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவுக்கு அதி கூடிய வாக்குகளாக ஒரு லட்சத்து 6,000 வாக்குகளை வழங்கினர்.

# இன்றைய பலன்கள்

(31.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம் :**
சொந்த தொழில் லாபம் தருவதாக இருக்கும். உங்களின் திறமையால் வாடிக்கையாளர்களின் பாராட்டு மழையில் நனைவீர்கள்.



**ரிஷபம் :**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் கடினமான ஒரு வேலையை வெற்றிகரமாக செய்து முடித்து உயர் அதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.



**மிதுனம் :**
உத்தியோகத்தர்கள் விடுமுறையில் செல்லும் சகப் பணியாளர்களின் வேலையையும் சேர்த்து செய்ய வேண்டியது இருக்கும்.



**கடகம் :**
உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளில் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது அவசியம். உங்களிடம் உள்ள பதிவேடுகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள் .



**சிம்மம் :**
புதிய பணியாளர்களிடம் அலுவலகம் பற்றி விமர்சனம் செய்யாதீர்கள். அது சிக்கலை ஏற்படுத்த கூடும்.



**கன்னி :**
சொந்தத் தொழிலில் பணிச்சுமை அதிகரிக்கும். பழைய வாடிக்கையாளர் ஒருவர் மூலம் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.



**துலாம் :**
சொந்த தொழில் செய்பவர்கள் பொறுப்புகளில் கூடுதல் கவனம் செலுத்தாவிட்டால் மீண்டும் அதே வேலையை செய்யும் நிலை ஏற்படும்.



**விருச்சிகம் :**
உயர் அதிகாரிகள் உங்களுக்கு அனுகூலமாக நடந்து கொள்வர். சிலருக்கு வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல் கிடைக்கும்.



**தனுசு :**
சக பணியாளர்களின் புதிய முயற்சிக்கு பக்கபலமாக இருப்பீர்கள். உத்தியோகத்தர்களுக்கு புதிய பொறுப்புகள் ஏற்படும்.



**மகரம் :**
விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். தொழில் சீராக நடைபெறும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முக்கிய பிரமுகர்களின் சந்திப்பால் முன்னேற்றம் கிடைக்கும்.



**கும்பம் :**
அலுவலகத்தில் உங்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகளை நிறைவேற்றி பாராட்டு பரிவீர்கள்.



**மீனம் :**
சந்திக்க விரும்பாத ஒரு நபரை சந்திக்கும் சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் விருப்பப்படி வேலையை செய்வீர்கள் .



## தோட்ட பாடசாலை அபிவிருத்தி...

அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்திய அரசின் 300 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் தோட்டப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக, கடந்த 2019 ஜூன் 04 இல், நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களால், இத்திட்டத்தின் நன்கொடையை 600 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பதற்கு இந்தியா உடன்பட்டுள்ளது. இதன்படியே ஏற்புடைய ஆவணங்களில் கையொப்பமிட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## கேரளாவில் அடுத்தடுத்து மண்சரிவு...

காரணமாக அங்கு பாரிய மண்சரிவு ஏற்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 02 மணியளவில் சூரல் மலை பகுதியில் பயங்கரமான மண்சரிவு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து 4.30 மணிக்கு மற்றொரு நிலச்சரிவு ஏற்பட்டது. அடுத்தடுத்த மண்சரிவினால் வெள்ளேரிமலை, மேப்பாடி, வைத்திரி உள்ளிட்ட பகுதிகளில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டு, பாலமொன்றும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. இதன் காரணமாக 500 வீடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் சிக்கித் தவித்தனர்.

திடீரென ஏற்பட்ட இந்த பாரிய மண்சரிவில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை நேற்று மாலை வரை 54 பேராக பதிவானது.

## தேர்தல் நடவடிக்கைகளில்...

மற்றும் உள்ளூராட்சி அமைச்சானது 2025 ஆண்டுக்கான ஒருங்கிணைந்த அரச சேவை அதிகாரிகளின் வருடாந்த இடமாற்ற அறிவிப்பை சுற்அமைச்சின் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் இது தொடர்பான இடமாற்ற சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசாங்க இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் இதனை அனுப்பியுள்ளார்.

அதேவேளை, உத்தியோகபூர்வ தபால் வாக்குகள் மற்றும் விசேட கடிதங்களை விரைவாக விநியோகிக்கும் விசேட வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சட்டபடி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும், ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க உள்ளதாக இலங்கை ஐக்கிய கிராம அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க தெரிவித்தார்.

## கெஹலியவின் பிணை மனு...

கெஹலிய ரம்புக்வெல்ல உட்பட ஆறு பேரை, விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், தனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பான விசாரணைகள் முடிவடையும் வரை, தன்னை பிணையில் விடுவிக்குமாறு கோரி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 2 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எல்ல Nine Arches Bridge சூழலில்...

ஆரம்பிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக தெமோதர ரணில் நிலையத்தை அண்மித்த பகுதியில் சுற்றுலா முகாமைத்துவ திட்டம் ஒன்றை ஆரம்பிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

## SLPP அமைச்சர்கள், எம்பிக்கள்...

மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பில் எதிர்ப்பை வெளியிட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களே இவ்வாறு ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இவர்கள் கலந்துரையாடியுள்ளதுடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தை தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமது கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் நேற்று முன்தினம் கூடிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் சபை தீர்மானம் ஒன்றை மேற்கொண்டது. இதையடுத்து கொழும்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தனவின் கட்சி காரியாலயத்திலும் இவர்கள் ஒன்று கூடி கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டுள்ளார். பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, அமைச்சர் கஞ்சன விஜேசேகர, இராஜாங்க அமைச்சர்களான திலும் அமுனுகம, அனுப பஸ்குவல், கீதா குமாரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, எஸ்.பி. திஸாநாயக்க, பிரேம்நாத் சி தொலவத்த உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களே இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

## நாட்டில் வேகமாகப்...

குழந்தைகள் மற்றும் வயதானவர் முகக் கவசங்களை அணிய வேண்டுமெனவும் தங்களது கைகளை சுகாதார முறைப்படி கடைப்பிடிக்க வேண்டும் எனவும் குறிப்பாக பொதுப் போக்குவரத்து மற்றும் சமூக கூட்டங்களின் போது சமூக இடைவெளியை பராமரிக்க வேண்டுமெனவும் அவர் கூறினார்.

## மைத்திரியின் தீர்மா...

இதன்படி, ஒக்டோபர் 09 ஆம் திகதி வரை இதற்கான தடை உத்தரவை நீட்டித்து உத்தரவிடப்பட்டது.

## ஜனாதிபதி ரணிலுக்கு...

அவர்கள் நேற்று தெரிவித்தனர். இந்த சந்திப்பின் போது ஜனாதிபதியை சந்திக்கச் சென்றிருந்த அமைச்சர்கள், எம்பிக்கள் சார்பில் மஹிந்தானந்த அலுத்கமகே எம்பி உரையாற்றுகையில்,

நாம் அங்கம் வகிக்கும் பொது ஜன பெரமுன தனியான வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

அதனையடுத்து பொதுஜன பெரமுனவிலுள்ள 72 ற்கும் அதிகமானோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளோம்.

இதனைத் தவிர வெளிநாடு சென்றுள்ள 6 பேரும் உள்ளனர்.

பிரசன்ன ரணதுங்க, பந்துல குணவர்தன, அருந்திக்க பெர்னாண்டோ உள்ளிட்ட பலரும் தொலைபேசி மூலம் தமது இணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகளும் ஓரிரு தினங்களில் கலந்துரையாடி ஒத்துழைப்பை வழங்கும் தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளன.

நாட்டின் தற்போதைய நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பக் கூடியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதாலேயே முதலாவது தடவையாக பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையானோர் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளோம்.

இதில் வேறு எந்த நிபந்தனைகளும் கிடையாது. தற்போதைய நிலையில் சவால்களை பொறுப்பேற்கக் கூடிய ஒரே தலைவர் நீங்கள் மட்டுமே என்பதால் நாம் அனைவரும் உங்களுக்காக இந்த தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

அந்த வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உங்களை வெற்றி பெறச் செய்வதற்காக நாங்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்.

அதேபோன்று அனுராதபுரம் மாவட்டத்தில் எஸ். எம். சந்திரசேன எம் பி யின் தலைமையில் அனைவரும் ஏக மனதாக இதே தீர்மானத்தையே எடுத்துள்ளனர்.

## வரவு செலவில் துண்டுவிழும்...

திட்ட துண்டுவிழும் தொகை (366 பில்லியன்) 36,600கோடி ரூபாவாக பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

முறையான பொருளாதார வேலைத்திட்டத்தினூடாக நாடு முன்னோக்கி நகர்ந்ததன் விளைவாகவே, இந்த நிலையை அடைய முடிந்ததாக அவர் வலியுறுத்தினார். அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார செயற்பாட்டாளர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்காக, சுங்க திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வின் பிரதான அதிதியாக கலந்து கொண்டு அமைச்சர் இதனை தெரிவித்தார். இதன் மூலம் நாட்டில் உள்ள 31 முன்னணி நிறுவனங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இதனால், இந்நிறுவனங்களுக்கு சுங்க சோதனைகளின்றி இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். பல வருடங்களாக அவற்றின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கண்காணிப்புக்குப் பிறகு, இந்தச் சான்றிதழைப் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## பொலிஸ் மாஅதிபர் பதவி: சபாநாயகர்...

தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நாடு திரும்பியதும் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விசேட சந்திப்பொன்றை நடத்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## முட்டைகள் இறக்குமதிக்கு ... (3ஆம் பக்க தொடர்ச்சி)

பேக்கரி உற்பத்திகளுக்குத் தேவையான முட்டைகளை விநியோகிப்பதற்கும் முட்டைகளை இறக்குமதி செய்வதற்காக வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## விசாரணை அறிக்கை... (3ஆம் பக்க தொடர்ச்சி)

க்ஸ்பிரஸ் பேர்ஸ் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தினால் சுற்றுச்சூழலுக்கும் மீனவர்களுக்கும் ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரி, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் உள்ளிட்டோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை நேற்று (30) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.ஐவரடங்கியஉயர் நீதிமன்ற அமர்வு, சட்டமா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ரணிலுக்கே... (3ஆம் பக்க தொடர்ச்சி)

2022ஆம் ஆண்டின் முற்பகுதியில் பொருளாதாரம் தோல்வியடைந்ததால்,எவ்வாறு நாடு வீழ்ச்சியடைந்தது என்பதை நேரடியாக பார்த்தோம்.அதனை மீட்பதிலும் ஸ்திரப்படுத்துவதிலும் ஜனாதிபதி ரணில் சிறப்பான பணியை ஆற்றியுள்ளார். தற்போதைய திட்டம் செயல்படும் போது நாம் புதிய முறையில் முயற்சி செய்ய முடியாது.

வெற்றிகரமான கொள்கைகளை கடைபிடிப்பது நாட்டின் எதிர்காலத்திற்கு இன்றியமையாதது.

எமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு முழுமையாக ஆதரவளிக்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நம் நாட்டை முதன்மைப்படுத்த வேண்டிய நேரம் இது." என அமைச்சர் அலி சப்ரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ISTRM செயலக... (3ஆம் பக்க தொடர்ச்சி)

அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள் உள்ளிட்ட சமூகத்தில் பல்வேறு அமைப்புக்களிடமிருந்து பெறப்பட்ட மற்றும் சர்வதேச பிரதிநிதிகளின் பல்வேறுபட்ட கருத்துக்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களின் பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கத்துடன் சகல சமூகங்களுக்கும் தேவையான ஆதரவை வழங்கக் கூடிய சூழலை ஏற்படுத்தும் நோக்கில் உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் செயல்பட்டு வருகிறது.

## இலங்கை கிரிக்கட்டுக்கு புதிய யாப்பு...

புதிய யாப்பைத் தயாரிப்பதற்காக ஓய்வுநிலை உயர்நீதிமன்ற நீதிபதி

கே.ரீ.சித்ரசிறி தலைமையில் குழுவை நியமிப்பதற்கு 2024 பெப்ரவரி மாதம் 19 இல், நடைபெற்ற அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, இக்குழுவால் இலங்கை கிரிக்கட்டுக்கான புதிய யாப்பு வரையப்பட்டுள்ளது.

## நாட்டைப் பற்றி... (3ஆம் பக்க தொடர்ச்சி)

ரோஹன திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க,

"2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டனர்.

அந்த பாதிப்பிலிருந்து மக்களைக் காப்பாற்ற எந்தத் தலைவரும் முன்வரவில்லை. ஆனால் தற்போதைய ஜனாதிபதி ஒரேயொரு பாராளுமன்ற ஆசனத்துடன் மக்களுக்காக முன்வந்தார்.

அதன்போது, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால், நாட்டின் பொருளாதாரம் தற்போது மீண்டு வருகிறது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயங்கரவாதப் போரிலிருந்து நாட்டைக் காப்பாற்றினார், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டைப் பொருளாதாரப் போரிலிருந்து காப்பாற்றினார்.

## வாக்கு சீட்டு ... (3ஆம் பக்க தொடர்ச்சி)

அவை செல்லுபடியாகாது என தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழு, குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கும் வகையில் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதேவேளை, சட்டப்படி வேலை தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தபால் திணைக்கள ஊழியர்கள், ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படாதவாறு தொடர்ந்தும் கடமைகளில் ஈடுபட்டு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாக இலங்கை ஐக்கிய கிராம அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க தெரிவித்துள்ளார்.

## இ.தே.தோ தொழிலாளர் சங்கத்துடன்...

இவ்வாறு கூறினார். இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு,

"மலையகத்தில் இன்றைய தினம் பாரிய புரட்சி ஏற்பட்டுள்ளது. அதாவது பாரிய தொழிற்சங்கமான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும், நுவரெலியா மாவட்டத்தில் மிக கூடுதலான விவசாயிகளைக் கொண்ட பழமையான தொழிற்சங்கமான இலங்கை விவசாயிகள் சங்கமும் ஒன்றாக சங்கமித்துள்ளன. இலங்கை விவசாயிகள் சங்கத்தில் 10,000 வரையான அங்கத்தவர்கள் உள்ளனர், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் 11 மாவட்டங்களில் 02 லட்சத்து 75 ஆயிரத்துக்கும் 03 இலட்சத்துக்கும் இடைப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. எனவே, எமது வசம் வாக்கு வங்கியும் உள்ளது.

## ஜனாதிபதிக்கு கடிதம்... (3ஆம் பக்க தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பில் விடயங்களை தெளிவுபடுத்தும் வகையிலேயே அந்த விசேட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்தார். தேர்தல்கள் ஆணைக் குழுவினால் ஜனாதிபதித் தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர், கூட்டப்படும் முதலாவது கூட்டம் இதுவென்றும் அவர் தெரிவித்தார். மேற்படி கூட்டத்தில் பொலிஸ் மாஅதிபர் விவகாரம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது .

## ஜனாதிபதித் தேர்தலில்...

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக கட்சித் தகவல்கள் வெளியாகின.இதையடுத்து, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினர் ஜனாதிபதி வேட்பாளர் விஜேயதாச ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கும், பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேக்கர ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் ஆதரவளிக்கவுள்ளதாக சொல்லப்படுகிறது.

## இன, மத, சாதி ... (3ஆம் பக்க தொடர்ச்சி)

என்றும் அவருக்கு 12 வருடங்கள் தொடர்ந்து அதிகாரம் வழங்கினால் இந்த நாட்டை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்ற முடியும் எனவும் தெரிவித்தார் .இலங்கையில் உள்ள பாடசாலையில் மற்றும் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற ரணில் விக்கிரமசிங்க இலங்கை மக்களின் உண்மையான தேவைகளை முழுமையாக புரிந்து கொண்டுள்ளதாக தெரிவித்தார்.அவர் மேலும் கூறியதாவது: ஹில்டன் ஹோட்டல் கட்டும் போது அங்கு ஹோட்டல் கட்டக்கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தனர்.

கொக்கல சுதந்திர வர்த்தக வலயம் உருவாக்கப்பட்ட போது ஹபராதுவ சந்தியில் பலகைகளை ஏந்தி வெள்ளையர்களுக்கு உள்ளாடைகள் தைக்கும் நிறுவனத்தை உருவாக்குகிறோம் என்றார்கள்.

## 2024 முதல் காலாண்டில்... (3ஆம் பக்க தொடர்ச்சி)

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த போதே அமைச்சின் செயலாளர் இதனை தெரிவித்தார். இதேவேளை, 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த வருடம் விமானப் போக்குவரத்து நடவடிக்கைகள் 25 வீத முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கின் உதயம்

## மருதமடு திருப்பலியும் ஆவணி மாத திருவிழாவும்; முன்னாயத்த விசேட கலந்துரையாடல்

(மன்னார் குறூப் நிருபர்)



மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 ஆம் திகதி விசேட திருவிழாவாக நடைபெறவுள்ளது.

இந்நிலையில் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவுக்கான முன்னாயத்த கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் பங்குபற்றுதலுடன் நேற்றுமுன்தினம் மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

வருடா வருடம் மடு அன்னையின் ஆவணித் திருவிழாவில் கலந்து கொள்ள நாட்டின் பல பாகங்களிலிருந்தும் புலம்பெயர் நாடுகளிலிருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வது வழமை.

இந்நிலையில் வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்திற் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய சகலவிதமான ஏற்பாடுகள் குறித்தும் அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டன. வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்திற் கொண்டு சுகாதாரம்,போக்குவரத்து,மருத்துவ வசதிகள்,நீர் விநியோகம்,உணவு விநியோகம் உள்ளிட்டவை குறித்து ஆராயப்பட்டன,

மேலும் சட்டம் ஒழுங்கை பின்பற்றும் வகையில் முப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

எதிர்வரும் 06 ஆம் திகதி மருத மடு அன்னையின் ஆவணி மாத திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு 15 ஆம் திகதி திருவிழா திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற குறித்த முன்னாயத்த கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார், இராணுவம், பொலிஸ், கடற்படை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வைத்தியர்கள் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர்.

## வெளிநாடு செல்ல காத்திருந்த இளைஞன் குளத்திலிருந்து சடலமாக மீட்பு!

(மாங்குளம் குறூப் நிருபர்)



முல்லைத்தீவு மல்லாவி பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞனொருவன் வெளிநாடு செல்ல காத்திருந்த நிலையில் வவுனிக்குளத்திலிருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

முல்லைத்தீவு யோகபுரம் மல்லாவி பகுதியைச் சேர்ந்த ஆனந்தரசா ஜீவன் (வயது 27) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

நேற்றுமுன்தினம் (29) பிற்பகல் ரூ.20 இலட்சம் பணத்துடன் யோகபுரத்திலிருந்து பாண்டியன் குளத்துக்கு சென்ற இளைஞன் இரவு 8.40 வரை நண்பர்களுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளதாக தெரியவருகின்றது. பின்னர் அவரது தொலைபேசி தொடர்பு துண்டிக்கப்பட்டதை தொடர்ந்து நண்பர்கள் தேடி பார்த்த போது அவனை காணவில்லை.

இந்நிலையில் நேற்று அதிகாலை 3.00 மணியளவில் பாண்டியன்குளம் குளக்கரையில் மோட்டார் சைக்கிள் காணப்பட்டுள்ளது. தொடர்ந்து வவுனிக்குளத்தின் மூன்றாவது நீர் சுருங்கையில் (நீர் கொட்டு) சடலம் இனங்காணப்பட்டு பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## புதுக்குடியிருப்பில் சிறுமி துஷ்பிரயோகம்

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 31 வயதுடைய நபரொருவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

16 வயதுடைய சித்தசுவாதீனமற்ற சிறுமியொருவரையே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

சிறுமி உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்ற போதே அவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

சிறுமியிடம் பெறப்பட்ட வாக்கு மூலத்தின் அடிப்படையில் புதுக்குடியிருப்பு திம்பிலி பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஆண் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

## கிணற்றிலிருந்து பெண் சடலமாக மீட்பு; தீவிர விசாரணையில் பொலிஸார்

ஓமந்தை விஷேட நிருபர்

ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நகர பகுதியில் கிணற்றிலிருந்து இளம் குடும்பப் பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் (29.07.2024) காலை இடம்பெற்றுள்ளது.

டெனிஸ்குமார் தெரினா என்ற 30 வயதுடைய இளம் குடும்ப பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தொடக்கம் காணவில்லையென வீட்டார் மற்றும் அயலவர்கள், கிராமத்தவர்கள் இணைந்து தேடுதல் நடத்தியும் எங்கும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் நேற்று காலை வீட்டுக் கிணற்றுக்குள் சடலமாக இருப்பதனை அவதானித்த குடும்பத்தினர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

குறித்த பெண் திருமணமான பின்பு கணவருடைய வீட்டில், அவரது 5 வயதுடைய ஒரு மகள் மற்றும் மாமன், மாமியுடன் வசித்து வந்தார். கணவர் புலம்பெயர் நாடு ஒன்றில் வசித்து வருகிறார்.

அவரின் துயரகரமான இழப்பு குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் மிகுந்த மனவலி ஏற்படுத்தியுள்ளதுடன் இளம் பெண்ணின் மரணம் குறித்து சமூகத்தில் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாணவனின் புத்தக பையில் கஞ்சா; தாய் கைது

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு கள்ளப்பாட்டு கிராமத்தில் தமது பிள்ளையின் புத்தகபையில் கஞ்சா போதைப்பொருளை மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து பாடசாலைக்கு அனுப்பிய சம்பவமொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

மாணவன் வீட்டிலிருந்து பாடசாலைக்கு செல்லும் போது புத்தக பையில் கஞ்சா பொதியை கொண்டு சென்றதை அவதானித்த ஏனைய மாணவர்கள் அதிபரிடம் இதுதொடர்பில் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து மாணவன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சட்டவைத்திய அதிகாரியின் மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டார். மாணவனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது பெற்றோர் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட முல்லைத்தீவு பொலிஸார் தாயாரை கைதுசெய்துள்ளதுடன் தந்தை தலைமறைவாகியுள்ளார். இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## முல்லைத்தீவு சந்தை கடைத்தொகுதியில் தீ விபத்து!

(புதுக்குடியிருப்பு விசேட, மாங்குளம் குறூப், ஓமந்தை விசேட நிருபர்கள்)

முல்லைத்தீவு நகரில் பிரதேசசபை பொதுச்சந்தைக்கட்டடத்தில் அமைந்துள்ள மூன்று கடைகளில் தீ பரவி பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில் லிங்கம் பல்பொருள் வாணிபம், அன்ரன் பல்பொருள் வாணிபம் ஆகிய இரு வணிக நிலையங்கள் மற்றும் களஞ்சியசாலை என்பன நேற்று அதிகாலை தீ பிடித்து எரிந்துள்ளன.

இரண்டு கடைகள் மற்றும் களஞ்சியசாலை என்பன சேதமடைந்துள்ளன. இரண்டு கடைகளும் முற்றாக எரிந்துள்ளதுடன் கடையிலுள்ள பொருட்கள் அனைத்தும் தீயினால் எரிந்து சாம்பலாகியுள்ளன.

மின்சார கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்ககூடுமென நம்பப்படுகிறது. காவலாளிகள் அதில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் விழிப்படைந்து தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.



தீ விபத்து சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பிரதேச சபை அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக்காலமாக தீ விபத்து சம்பவங்கள் அதிகரித்து வருவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## ஆலய பரிபாலன சபைக்கு புதிய நிர்வாகத் தெரிவு

(சாவகச்சேரி விசேட நிருபர்)

கைதடி மத்தி அத்திபுலம் கந்தசாமி ஆலய பரிபாலன சபைக்கான புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் முன்னிலையில் நடைபெற்றது.

அதன்படி தலைவராக மா.தங்கராசா, உபதலைவராக செ.றங்கநாதன், செயலாளராக திருமதி. கி.சிவலோஜினி, உபசெயலாளராக சுந்தரம் பிரபாகரன், பொருளாளராக சி.பவளகுமாரன் ஆகியோருடன் ஏனைய உறுப்பினர்களும் இதன் போது தெரிவு செய்யப்பட்டனர்.

## தவறணை பணியாளர் மீது கத்திக்குத்து

(சாவகச்சேரி விசேட நிருபர்)

கொடிகாமம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட மந்துவில் கிராமத்தில் தவறணை பணியாளர் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை கத்திக்குத்து நடத்தப்பட்டுள்ளது.

தவறணையில் இடம்பெற்ற கத்திக்குத்தில் தவறணைப் பணியாளர் முகம் மற்றும் தலைப்பகுதிகளில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## காணி மோசடியில் ஈடுபட்ட மூவரும் பிணையில் விடுதலை

(யாழ். விசேட நிருபர்)

காணி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான நில அளவையாளர் உள்ளிட்ட மூவரையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

வெளிநாடொன்றில் வசிக்கும் தம்பதியினர், மருதங்கேணி பகுதியிலுள்ள தமது காணிக்கு ஆனைக்கோட்டை பகுதியை சேர்ந்த நபரொருவருக்கு அற்றோணி தத்துவத்தை வழங்கியுள்ளனர்.

குறித்த நபர் தனக்கு அற்றோணி தத்துவம் ஊடாக கிடைக்கப்பெற்ற காணியை சூழவுள்ள காணிகளையும் கையகப்படுத்தி நில அளவையாளர் ஊடாக காணி வரைபடத்தை வரைந்து பிறிதொரு நபருக்கு மோசடியாக விற்பனை செய்துள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினரால் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, காணி மோசடியில் ஈடுபட்டவர், நில அளவையாளர் மற்றும் காணியை கொள்வனவு செய்த நபர் ஆகிய மூவரையும் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரிடமும் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது, அவர்களை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனித்துவமான செயற்பாட்டைக் கொண்டுள்ளது

### ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன்

(யாழ். விசேட நிருபர்)

நாம் யாருக்கும் முகவர்களாகவோ, சுயநலத்துக்காகவோ சோரம்போனதில்லை. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனித்துவமான செயற்பாட்டைக் கொண்ட கட்சியாகும் என கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற அரசியல் இலக்குடன் இணக்க அரசியல் ஊடாக டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக மக்கள் சேவையாற்றி வருகின்றார். 30 ஆண்டுகாலமாக தொடர்ச்சியாக பாராளுமன்றத்தில் மக்களால் தெரிவுசெய்யப்பட்டு அதில் அங்கம் வகித்துவருகின்றார்.

தமிழ் மக்களின் அன்றாடப்பிரச்சினை, அபிவிருத்தி அரசியலுரிமை ஆகியவற்றை நோக்காகக் கொண்டு ஈ.பிடி.பி தனித்துவமான முடிவுகளை மக்கள் நலன் சார்ந்து தேர்ந்தெடுத்து தனது அரசியல் வழிகாட்டல்களை மக்களுக்கு வழங்கிவருகின்றது.

தேர்தலில் தென்னிலங்கையை சேர்ந்த பல ஜனாதிபதி வேட்பாளர்கள் களத்தில் போட்டியிட்டாலும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதை வெளிப்படையாகவே அறிவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## தையல் பயிற்சி நிறைவு; மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு





வித்தியா தீபம் அமைப்பின் ஏற்பாட்டில் மூன்றாம் கட்ட மாணவர்களுக்கான ஆறுமாத கால தையல் பயிற்சி நிறைவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் தையல் கண்காட்சியும் நேற்று நடைபெற்றது.

(படம்: புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

## யாழ். பண்ணையில் 10 மோட்டார் சைக்கிள்களுடன் இளைஞர்கள் கைது

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறாக மோட்டார் சைக்கிள் ஓட்டியவர்கள், மது போதையில் வாகனம் செலுத்தியவர்கள், போக்குவரத்து விதிமுறைகள் மீறி வாகனம் செலுத்தியவர்கள் என 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்ணை பகுதியில் ஞாயிற்றுக்கிழமைகளில் பெருமளவானவர்கள் நடை பயிற்சி செய்வதற்கும், குழந்தைகள், சிறுவர்களுடன் கடற்கரையில் பொழுதை கழிக்கவும் என கூடுவார்கள்.

அவ்வாறான நேரங்களில் இளைஞர்கள் குழுக்களாக பெரிய சத்தங்களுடன் மோட்டார் சைக்கிள் ஓடுதல், வீதியில் ஆபத்தை விளைவிக்கும் விதமாக மோட்டார் சைக்கிள்களை செலுத்துதல் என மோட்டார் சைக்கிள்களில் பல்வேறு சாகசங்கள் செய்து மக்களுக்கு இடையூறு விளைவித்து வந்தனர்.

இந்நிலையில் அது தொடர்பில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து, போக்குவரத்து பொலிஸார் பண்ணை பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அதன் போது மோட்டார் சைக்கிளை ஆபத்து விளைவிக்கும் வகையாக செலுத்தியமை, போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை, மது போதையில் வாகனம் செலுத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச் சாட்டுக்களில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கள் 2024.07.29
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5549
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.45,079,336.00
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 5 6 8 5 7 6

அத சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 124
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 8 5 7 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3791 சீட்டிழுப்பு திகதி 2024.07.29
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.67,997,527.12
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 11 50 59 63 விசேட எழுத்து X
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 46867

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1897 2024.07.29
95732
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.440,557,954.00
ஆங்கில எழுத்து A சுப்பர் இலக்கம் 24 வெற்றி இலக்கங்கள் 30 54 74 78
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP
திகதி 2024.07.29
சீட்டிழுப்பு இலக்கம் 0375
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 0 8 1 6 7 6
L7 எழுத்து X
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.33,616,656.48

ராசி சுப பலன்
திகதி 2024.07.29 சீட்டிழுப்பு இலக்கம் 858
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,000,000.00
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 04 33 36 58
தனயோக இலக்கம் 28856
நாளுக்கான விதி எண் 28

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1579 2024.07.29
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.103,701,669.12
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 01 04 28 65 விசேட எழுத்து Z
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 01754

# ஆபத்து விளைவிக்கும் மரங்களை அகற்றல்; காரைதீவில் ஆராய்வு

மாளிகைக்காடு குறூப் நிருபர்



காரைதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஆபத்து ஏற்படுத்தக்கூடிய மரங்களை அகற்றுவது தொடர்பாக அப்பிரதேச மட்ட குழுக் கூட்டத்தில் பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் அண்மையில் கலந்துரையாடப்பட்டது. அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தரின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்படி பிரதேச செயலக பிரிவில் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய மரங்களை அகற்றுவது தொடர்பாக களவிஜயம் இம்மாதம் 11ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் பிரதேச மட்டகள விஜய குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது. அதன்போது பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகு, அரச மரக் கூட்டுத்தாபனம், பிரதேச சபை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கோட்ட கல்வி அதிகாரி அலுவலகம், பொலிஸ் நிலையம், இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், இலங்கை டெலிகோம், தீயணைப்பு படைப் பிரிவு (மாநகர சபை, கல்முனை) ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# பஞ்சபுராண பண்ணிசை போட்டி

வாச்சிக்குடா விசேட நிருபர்



அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் ஆலையடிவேம்பு கல்வி கோட்ட மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட பஞ்சபுராண வித்தகர் விருதுக்கான பஞ்சபுராண பண்ணிசை ஓதும் முதலாம் கட்ட போட்டி இந்து இளைஞர் மன்ற ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்து இளைஞர் மன்றத் தலைவரும் விபுலானந்தா சிறுவர் இல்லத் ஸ்தாபகரும் இறைபணி செம்மலுமான த.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் அருளாளராக ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தா சரஸ்வதி மகராஜ் கலந்துகொண்டார். மூன்று பிரிவுகளாக நடைபெற்ற இப்போட்டியில் 56 மாணவர்கள் பங்கேற்றதுடன், இறுதிப்போட்டிக்கு 21 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதிப்போட்டி எதிர்வரும் ஒக்டோபர் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது. முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெறுபவர் முறையே 20 ஆயிரம், 15 ஆயிரம், 10 ஆயிரம் பணப்பரிசுடன் பஞ்சபுராண வித்தகர் விருதும் வழங்கப்படவுள்ளது.

இதில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.



புதிதாக தெரிவு செய்யப்பட்ட கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான ஒரு நாள் பயிற்சி செயலமர்வு அண்மையில் நடைபெற்றது. கிராம சேவை உத்தியோகத்தர்களின் பங்களிப்பு தொடர்பாக இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது. (படம்: பாலமுனை தினகரன் நிருபர்)

# ஆற்றங்கரைகளில் எச்சரிக்கை பலகை இடுமாறு கோரிக்கை

மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட வேதத்தீவு, இடிமன்துறை மற்றும் முதலைமடு ஆற்றங்கரைகளில் நீராட செல்ல வேண்டாமெனக் கூறி அறிவித்தல் எச்சரிக்கை பலகை இடுமாறு சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது ஆறுகளில் பெருமளவில் முதலைகள் நடமாடுகின்றன. அத்துடன் இதனுடன் சேறும் சகதியும் கொண்ட பல இடங்கள் உள்ளன.

முதலைகளின் நடமாட்டத்தை நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களும் பல தடவைகள் கண்டுள்ளனர்.

இதேவேளை பெரும் நீரோட்டம் கொண்ட இந்த ஆறுகளில் நீராடச் சென்று உயிர் ஆபத்தை தேடிக் கொள்வதற்கான பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. எனவே இவ்வாறான ஆபத்திலிருந்து நீராடச் செல்லும் மக்கள் பாதுகாப்பாக நடக்கும் வகையில் அறிவித்தல் எச்சரிக்கை பலகையை இடுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# கதிரைகள் அன்பளிப்பு



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு வேர்ல்ட்விஷன் லங்கா நிறுவனத்தினால் கதிரைகள் அன்பளிப்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன. திராய்மடுவிலுள்ள புதிய மாவட்ட செயலகத்தில் வைத்தே கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்போது 59 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க 30 பிளாஸ்ரிக் கதிரைகள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரனிடம் வேர்ல்ட்விஷன் லங்கா நிறுவன பணிப்பாளர் அ.ரவீந்திரனால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

# சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

நற்பிட்டிமுனை அல்கரீம் பவுண்டேசன் ஏற்பாடு செய்துள்ள ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் மற்றும் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் எட்டாம் திகதி காலை ஒன்பது மணிக்கு சவளக்கடை றோயல் கார்டன் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட ஓய்வு நிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளும் இந்நிகழ்வு பவுண்டேசன் பணிப்பாளர் சட்டத்தரணி சீ.எம்.ஹலீம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும் மாயோன் முஸ்தபா கல்வி நிறுவன நிறைவேற்று பணிப்பாளருமான எம். றிஸ்லி முஸ்தபா, மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சீ.எம்.முபீத் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

விசேட அதிதிகளாக அல்கரீம் பவுண்டேசன் நிறுவனத்தின் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏனைய உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

அல்கரீம் பவுண்டேசன் கடந்த காலத்தில் நற்பிட்டிமுனை பிரதேசத்தில் பல்வேறு சேவைகளை ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறுபோக நெற்செய்கையில் கபிலநிற தத்தி தாக்கம்

தோப்பூர் குறூப் நிருபர்

இம்முறை மூதூர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கையில் என்றும் இல்லாதவாறு கபிலநிற தத்தியின் தாக்கம் காரணமாக தமது நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் பலர் தெரிவிக்கின்றனர். அதிக வெப்பத்துடன் கூடிய காலநிலை காரணமாகவே இந்த நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அறுவடைக்கு இன்னும் சில நாட்களே இருக்கின்ற நிலையில் எவ்வித கிருமி நாசினிக்கும் கட்டுப்படாது இந்நோய் தாக்கம் வேகமாக பரவுவதால் நெல் விளைச்சல் வெகுவாக பாதிக்கப்படுமெனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# கண்டி தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காக எப்போதும் முன்னுரிமை

## கண்டியில் மகிந்தானந்த அளுத்கமகே எம்.பி

கண்டி மாவட்டத்தில் உள்ள தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை தான் நன்கு அறிவதாகவும், எப்போதும் அவர்களின் நலனுக்கு முன்னுரிமை வழங்குவதாகவும் முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட தோட்டத் தொழிலாளர்களின் நலன்கருதி உருவாக்கப்பட்ட இலங்கை சுதந்திர தொழிலாளர் காங்கிரஸின் 18ஆவது ஆண்டு நிறைவு விழா (28) நாவலப்பிட்டியில் நடைபெற்றது.

இந்த நிகழ்விலேயே பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே இதனைத் தெரிவித்தார். இங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, தோட்ட மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிவேன். ஒரு காலத்தில் தேர்தல் காலத்தில் மட்டும் வந்து தமிழருக்கே வாக்களிக்க வேண்டும் என்று தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு செல்வார்கள்.



அதன்பின்னர் ஐந்து வருடங்களுக்கு தோட்டத் தொழிலாளர்களைக் கண்டுகொள்வதில்லை.

கண்டியில் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் என்ன, அதற்கான தீர்வு என்ன என்பது குறித்து அவர்கள் கண்டுகொள்ளவில்லை. இதற்காகவே இலங்கை சுதந்திர தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்தை ஸ்தாபித்தேன். அதன்மூலம் தொழிலாளர்களின் ஏராளமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்பட்டது. தொழிலாளர் பிரச்சினை, சுகாதாரம், தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி, இளைஞர்களின் எதிர்காலம் ஆகியவற்றில் உள்ள பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்கான தீர்வுகளையும் வழங்கி வருகிறேன். கண்டி தோட்டத் தொழிலாளர்களை இனியும் யாரும் ஏமாற்ற முடியாது. அவர்களின் நலனுக்கு முன்னுரிமையளித்து அதற்குத் தேவையான பணிகளை செய்வேன் என்று தெரிவித்தார்.

இலங்கை சுதந்திர தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்கம் ஆங்காங்கே கடந்த 18 வருடங்களாக முன்னெடுத்த சமூக நலத் திட்டங்களை அனைத்து மக்களும் அறியும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்நிகழ்வில் தோட்டத் தொழிலாளர்கள், உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள், பிரமுன்னாள் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் காங்கிரஸின் தோட்டத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# தர்கா நகர் இஸ்லாமிய நலம்புரிச் சங்க ஏற்பாட்டில் மாணவர் கௌரவிப்பு







பேருவளை விசேட நிருபர்

தர்கா நகர் இஸ்லாமிய நலம்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் தர்கா நகர் அல்ஹம்ரா, ஸாஹிரா, முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளிலும் 2023 ஆம் வருடம் ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் நூற்றுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை கௌரவித்து பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கும் வைபவம் (27) சங்கத்தின் தலைவர் தேசபந்து அல்ஹாஜ் ஏ.பி.எம். ஸூஹைர் ஜே.பி. தலைமையில் நடைபெற்றது. மேற்படி வைபவத்தில் மூன்று பாடசாலைகளிலிருந்தும் 142 மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

வைபவத்தில் பிரதம அதிதியாக அரச மருந்தக கூட்டுத் தாபனத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி ரூமி ஹாஷிம், கௌரவ அதிதிகளாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான எம்.எம்.எம். அம்ஜத், இப்திகார் ஜெமீல், தேச கீர்த்தி நஜீப் ஹாஜியார். உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# அநுராதபுரம் மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டம்

திறப்பனை தினகரன் நிருபர்

உலக உணவு அமைப்பின் பங்களிப்புடன் அநுராதபுரம் மாவட்டத்தில் முட்டை கோழி வளர்ப்புத் திட்டம் குறித்து ஆராயும் நோக்கில் லாவோஸ் நாட்டைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று அண்மையில் அநுராதபுரத்திற்கு விஜயம் ஒன்றை மேற் கொண்டிருந்தனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் முட்டை உற்பத்தித் திட்டம் வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுவதை உலக உணவு ஸ்தாபனத்தின் அதிகாரிகள் கண்டறிந்து கொள்ளும் நோக்கில் இந்த லாவோஸ் நாட்டு அதிகாரிகள் இலங்கைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அதன்படி, கஹட்டகஸ்திகிலிய மற்றும் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலக பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்ட பல திட்டங்கள் லாவோஸ் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டன. வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து லாவோஸ் அதிகாரிகள் வடமத்திய மாகாண பிரதம செயலாளர் திரு. வருண சமரதிவாகர மற்றும் அதிகாரிகள் குழுவுடன் கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்டிருந்தனர். இத்திட்டம் உலக உணவு அமைப்பு மற்றும் அநுராதபுர மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

# அகில இலங்கை நீச்சல் போட்டியில் சாஹிரா மாணவன் மொஹமட் சாதனை

ருஸைக் பாரூக்

49ஆவது அகில இலங்கை பாடசாலைகளின் நீச்சல் சம்பியன்ஷிப் போட்டி அண்மையில் சுகததாச நீச்சல் தடாகத்தில் நடைபெற்றது.

இதன்போது, கொழும்பு, சாஹிரா கல்லூரி மாணவன் எம்.எப். முஹம்மது 18 வயதுக்குட்பட்ட ஒட்டுமொத்த நீச்சல் போட்டியிலும் புதிய சாதனையுடன் இலங்கையின் தேசிய நீச்சல் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டார்.

இவரை கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் கல்லூரி கபூர் மண்டபத்தில் நடைபெற்றது. அதிபர் ரிஸ்வி மரிக்கார் மேற்படி சாதனை மாணவனுக்கு நினைவு சின்னம் வழங்கி கௌரவித்ததுடன் மாணவன் முஹம்மதை வாழ்த்தி, விளையாட்டு வீரர்களுக்கு உதவ ஸாஹிரா கல்லூரி தயாராக உள்ளது என்றும், ஸாஹிரா பல விளையாட்டு வீரர்களை உருவாக்கி உள்ளது என்றும் அதிபர் இதன்போது கூறினார்.

பிரதி அதிபர்கள் திருமதி சினத் இஸ்மாயில், எம்.டி.எம். இல்ஹாம், விளையாட்டு உதவி பொறுப்பாளர் தேவஸ்ரீ போடியபடுகே, நீச்சல் பொறுப்பாசிரியர் வீரசூரிய, நீச்சல் பயிற்சியாளர் மொஹமட் பவாஸ், ஸாஹிரா கல்லூரி விளையாட்டு மன்ற செயலாளர் மஸாஹிர் சுஹைர், மாணவன் மொஹம்மதின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.



BANKING & FINANCE Supplement தினகரன்

# இலங்கையில் வங்கிகளின் ஆரம்பம்

1948இல் சுதந்திரமடைந்தமையினைத் தொடர்ந்து இயக்கவாற்றல் வாய்ந்த பொருளாதார மற்றும் நிதியியல் முறைமைக்கு வசதியளிப்பதற்காக, சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கை அரசாங்கம், பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்து அதனை ஊக்குவிப்பதற்காக தீவிரமான நாணயக் கொள்கை அமைப்பையும் இயக்கவாற்றல் வாய்ந்த நிதியியல் துறையினையும் பேணுவதற்காக இலங்கை மத்திய வங்கியினை நிறுவியது.

**வங்கியின் ஆரம்பம்**

இலங்கை மத்திய வங்கி நிறுவப்படுவதற்கு முன்னர், 1884ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க தாள் நாணயக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பணச் சபை முறைமையானது நாட்டின் நாணய அதிகாரசபையாகத் தொழிற்பட்டது. எனினும் இதன் இயலாற்றல் மிகக் குறுகியதாகும்.



அரசியல் சுதந்திரம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் நாட்டினை அபிவிருத்தி செய்வதற்கு இம்முறைமை போதுமானதல்ல என உணரப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியை நிறுவுவதற்கான தொழில்நுட்ப நிபுணத்துவத்தினை ஐக்கிய அமெரிக்காவிலிருந்து வழங்குமாறு 1948 ஜூலையில் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அமெரிக்கப் பொருளியலாளரான ஜோன் எக்ஸ்ரர், இப்பணியினை மேற்கொள்வதற்காக ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வ்விலிருந்து நியமிக்கப்பட்டார்.

மத்திய வங்கிக்கான நியாயபூர்வமான தன்மை மற்றும் சட்ட ரீதியான கட்டமைப்பு என்பன தொடர்பான எக்ஸ்ரர் அறிக்கை 1949ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மக்கள் பிரதிநிதித்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வறிக்கையுடன் சேர்த்து, அறிக்கையின் II ஆவது பகுதியாக, விளக்கக் கருத்துக்களுடன் சேர்த்து வரைவு மசோதாவும் சமர்ப்பிக்கப்பட்டது. 1949ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் திகதியன்று இம்மசோதாவானது சபையினால் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம் என நிறைவேற்றப்பட்டமையானது, இலங்கை மத்திய வங்கியை நிறுவுவதற்கும் பணச் சபை முறைமையினை முடிவுறுத்துவதற்கும் வழியமைத்தது.

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி 1950 ஆகஸ்ட் 28ஆம்திகதி தொழிற்படத் தொடங்கியது. இது, இலங்கை மத்திய வங்கி என 1985இல் மீளப் பெயரிடப்பட்டது.

> ‘மத்திய வங்கிக்கான நியாயபூர்வமான தன்மை மற்றும் சட்ட ரீதியான கட்டமைப்பு என்பன தொடர்பான எக்ஸ்ரர் அறிக்கை 1949ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மக்கள் பிரதிநிதித்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.’

நாட்டின் பணம், வங்கித்தொழில், மற்றும் கொடுகடன் முறைமை என்பனவற்றை முழுமையாக நிருவகித்து ஒழுங்குபடுத்துவதற்கான பரந்தளவு அதிகாரம் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டது. மத்திய வங்கிக்கு நாணயத்தை வெளியிடும் ஏக உரிமையும், அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளதோடு, அது நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகளின் காவலனாகவும் மாறியுள்ளது. 1949 இன் நாணயச் சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மத்திய வங்கியின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:

**(1) உள்நாட்டு நாணயப் பெறுமதிகளை உறுதிப்படுத்தல் (விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல்).**

**(2) இலங்கை ரூபாவின் நாணய மாற்றுவீதத்தின் முகப்புப் பெறுமதியினை அல்லது உறுதிப்பாட்டைப் பாதுகாத்தல் (செலாவணி வீத உறுதிப்பாட்டைப் பேணுதல்).**




**(3) இலங்கையில் உயர்மட்டத்திலான உற்பத்தி, வேலை வாய்ப்பு மற்றும் உண்மை வருமானம் என்பவற்றை மேம்படுத்தி அதனைப் பேணுதல்.**

**(4) இலங்கையின் உற்பத்தியாக்க மூல வளங்களின் முழுமையான அபிவிருத்திக்கு ஊக்கமளித்து முன்னேற்றுதல்.**

எனினும், மத்திய வங்கித்தொழிலின் உலகளாவிய போக்கினையும், பொருளாதாரத்தின் தாராளமயமாக்கலின் விளைவாக, பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் ஏற்பட்ட விரைவான மாற்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்தின் கணிசமான முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு 2000 ஆம் ஆண்டில் மத்திய வங்கியை நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தினை மேற்கொள்ள நேரிட்டதுடன் 2002இல் குறிக்கோள்கள் மாற்றம்செய்யப்பட்டன.

அதற்கமைய, இரண்டு மையக் குறிக்கோள்கள் உருவாக்கப்பட்டன. அவையாவன:

**(1) பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுதல்**

**(2) நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டைப் பேணுதல்**

மத்திய வங்கியின் குறிக்கோள்களை முதன்மையாக எளிமைப்படுத்திய 2002இன் மேற்குறிப்பிடப்பட்ட திருத்தத்தைத் தவிர, நாணய விதிச் சட்டமானது கடந்த காலங்களில் முழுமையான மீளாய்வையும் திருத்தத்தையும் கொண்டிருக்கவில்லை.

ஆகையினால், பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் மத்திய வங்கித்தொழிலின் ஒட்டுமொத்த பரிணாம வளர்ச்சி என்பவற்றின் விளைவாக உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கிணங்க நாணய விதிச் சட்டத்தின் பல எண்ணிக்கையிலான ஏற்பாடுகளை மீளாய்வு செய்வதற்கான தேவைப்பாட்டுடன், 2023ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டது.

மத்திய வங்கியின் சுயாதீனத்தை மேம்படுத்துவதற்கும், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை அதிகரிப்பதற்கும் அத்துடன் இலங்கையில் தொடர்ச்சியாக விலை உறுதிப்பாட்டைப் பேணுவதற்கான நாணயக் கொள்கை கட்டமைப்பை மீளவலுப்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கிச் சட்டம் விசேட ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

இதற்கமைவாக, இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களும் மாற்றப்பட்டன.

**(1) முதன்மைக் குறிக்கோள்: உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைதலும் பேணுதலும்**

**(2) மற்றைய குறிக்கோள்: நிதியியல் முறைமை நிலையுறுதியை உறுதிப்படுத்தல்**



# BANKING & FINANCE

Supplement தினகரன்

## நீண்ட காலக் கடன்களை சிறிய, நடுத்தர தொழில்துறையினருக்கு வழங்கவுள்ள செலான் வங்கி

செலான் வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் (GoSL) இணைந்து, சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையை (SME) மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு ADBயிலிருந்து செயற்பாட்டு மூலதனம் மற்றும் நீண்ட காலக் கடன்களை வழங்கவுள்ளது.

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் உள்ளூர் வணிகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் செலான் வங்கி, விவசாயம், மீன்பிடி, அலங்கார மீன்வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சுற்றுலா மற்றும் ஏற்றுமதி சார்ந்த வணிகங்கள் உட்பட பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு இந் நிதி உதவியை வழங்கும். செலான் வங்கி, இலங்கையில் ADBயின் நிதியுதவியின் ஒரு நிலையான பங்காளியாக இருந்து வருகிறது. ADBயின் கடன் வரம்புகள் மூலம் வங்கியானது கடந்த காலங்களில் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் மற்றும் சிறு தேயிலை உரிமையாளர்களுக்கு கடன்களை வழங்கியுள்ளது.

தங்கள் செயற்பாட்டு மூலதனத்தை அதிகரிக்க விரும்பும் SMEகள், மூன்று வருட காலத்திற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம் ஊடாக பயனடைவர். மேலதிகமாக, கட்டடம் கட்டி முடிக்கும் பணி, நிலையான சொத்துக்களை வாங்குதல் அல்லது வணிக தேவைக்கான வாகனங்களை வாங்குதல் போன்ற பிற தேவைகளுக்காக, திருப்பிச் செலுத்த ஐந்து வருட கால அவகாசத்துடன் கூடிய கடன்கள் கிடைக்கும்.

செலான் வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய முன்முயற்சிகளில் ஒன்று SME Hub ஆகும். இது SMEகளின் தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு முன்னோடி எண்ணக்கரு ஆகும். Seylan SME Hub ஆனது, வங்கியின் பரந்த நாடளாவிய கிளை வலையமைப்பின் ஊடாக வசதியான மற்றும் வேகமான நிதிச் சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. SME Hub மூலம் வழங்கப்படும் பிரத்தியேக வங்கிச் சேவைகள் SMEகளின் நிதிப் பயணத்திற்கு வழிகாட்டும் சிறப்பு ஆலோசனைச் சேவையை உள்ளடக்கியுள்ளது.



மேலும், ஏற்றுமதி சார்ந்த SMEகள் செலான் வங்கியின் புதுமையான 'ஏற்றுமதி நிபுணர்' சேவையை அணுகும் வாய்ப்பை பெறுவர். இந்த சலுகையானது SMEகளுக்கு உலக சந்தையில் சிறந்து விளங்க அவர்களுக்கு தேவையான ஆதரவையும் அறிவுப் பகிர்வையும் வழங்கி அவர்களை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 'ஏற்றுமதி நிபுணர்' சேவையானது, SMEகளுக்கு சவாலான காலங்களை எதிர்கொள்ளவும் செழித்து வளரவும் தேவையான கருவிகள் மற்றும் நிதியறிவு ஆகியவற்றை வழங்குகிறது.

இந்த மூலோபாய ஒத்துழைப்பு பற்றி கருத்து தெரிவித்த செலான் வங்கியின் கிளைக் கடன் பிரதி பொது முகாமையாளர் ரணில் திசாநாயக்க அவர்கள், இந்த முயற்சி MSME/SME துறையில் ஏற்படுத்தும் சாதகமான தாக்கம் தொடர்பாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். "சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு ஆதரவளிக்கும் முகமாக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதில் நாங்கள் பெருமையடைகிறோம். எங்களின் போட்டித்தன்மை வாய்ந்த கடன் வழங்கல்கள், SME Hub மற்றும் 'ஏற்றுமதி நிபுணர்' போன்ற அர்ப்பணிப்புள்ள சேவைகள் மூலம் செலான் வங்கி பல்வேறு தொழில்துறைகளை சார்ந்த வணிகங்களின் வெற்றிக்கு ஊக்கியாக இருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது." என்றார்.

அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி, அதிநவீன தொழில்நுட்பம், புதுமையான தயாரிப்புகள் மற்றும் சிறந்த தரமான சேவைகள் மூலம் அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு அதி சிறந்த வங்கி அனுபவத்தை வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன் செயற்படுகிறது.

சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள், சில்லறை விற்பனை மற்றும் பெருநிறுவன வாடிக்கையாளர்கள் உள்ளடங்கலாக வாடிக்கையாளர்களை கொண்டுள்ள இவ்வங்கி, நாடு முழுவதும் 540ற்கும் மேற்பட்ட அணுகல் புள்ளிகளைக் கொண்டுள்ளது. செலான் வங்கியானது நிதிரீதியாக நிலையான மற்றும் சிறந்த செயற்திறன் மிக்க நிறுவனமாக Fitch Ratings நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், வங்கியின் தேசிய நீண்டகால மதிப்பீடு 'A'(lka)வாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இவை செலான் வங்கியின் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் அனைத்து அம்சங்களிலும் நிலையான சேவை வழங்கலை உறுதி செய்வதில் அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு சான்றாகும்.




## சிறந்த தொழில்நுட்ப மீண்டெழுகைக்கான நிறுவன விருதை வென்றது NDB

ISACA இனால் ஏற்பாடு செய்யப்பட்ட மதிப்புமிக்க எண்ணிய நம்பிக்கை விருதுகள் 2024 இல் வங்கிச்சேவைகள் உள்நாட்டு பிரிவின் கீழ் NDB வங்கியானது "2024 ஆம் ஆண்டின் தொழில்நுட்ப மீண்டெழுகைக்கான கம்பெனி" என கௌரவிக்கப்பட்டுள்ளது. ISACA (தகவல் முறைமைகள் தணிக்கை மற்றும் கட்டுப்பாட்டு சங்கம்) என்பது தகவல் தொழில்நுட்ப ஆளுகைக்காக அர்ப்பணிக்கப்பட்டவொரு நன்கறியப்பட்ட சர்வதேச தொழில்சார் சங்கமாகும். ISACA இன் இலங்கை பிரிவு தகவல் பாதுகாப்பில் சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்திய நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக "எண்ணிய நம்பிக்கை விருதினை" ஆரம்பித்தது. NDB வங்கியியல் பிரிவில் "வெற்றியாளர்" ஆக தெரிவு செய்யப்பட்டது. பாதுகாப்பான வங்கிப் பங்காளியாக NDB மீது வாடிக்கையாளர்கள் கொண்டுள்ள நம்பிக்கையானது இந்த விருது மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது எண்ணிய துறையில் மிகவும் நம்பகமான வங்கிப் பங்காளியாக NDB இன் நிலையை மேலும் உறுதிப்படுத்துகிறது.

தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சட்ட முன்னோடியான திரு. ஜயந்தபெர்னாண்டோ உட்பட தொழில்துறை வல்லுனர்களை உள்ளடக்கிய கௌரவத்துக்குரிய நீதிபதிகள் குழுவானது , சிறந்த பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் மற்றும் இன்றைய வளர்ந்து வரும் அச்சுறுத்தல் சவால்களை சமாளித்து போராடுவதற்கான NDB இன் புதுமையான உத்திகளை அங்கீகரித்து வெற்றியாளராகத் தீர்ப்பளித்தது.

ரசிக சம்பத் தலைமையில் நடுவர் அமர்வில் விருதுக்காக போட்டியிட்ட NDB இன் வெற்றியாளர் அணியில் பசிந்து பண்டார, கல்ஹாரி கமகே, ரனித் தரரத்ன மற்றும் டில்ஷான் லங்கா திலக ஆகியோர் அடங்குவர்.

NDB தகவல் தொழில்நுட்ப [IT] பாதுகாப்பில் சிறந்த வரலாற்றைக் கொண்டுள்ளதுடன் சமீபத்திய காலங்களில் பாதுகாப்பு துறையில் பல விருதுகளை வென்றுள்ளது. NDB ஆனது அதன் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைக்காக சமீபத்திய ISO 270001:2022 ஐப் பெற்ற முதல் வங்கியாக திகழ்வதுடன் மேலும் இலங்கையில் அதன் வர்த்தகத் தொடர் முகாமைத்துவ முறைமைக்காக (BCMS) ISO 23301 சான்றிதழ் பெற்ற ஒரே வங்கியாக இது உள்ளது. மேலதிகமாக , NDB ஆனதுகடந்த ஆண்டு சிறந்த தர மென்பொருள் தேசிய விருதுகளில் (NBQSA) வங்கியின் தகவல் பாதுகாப்புத் திட்டத்தை முகாமைத்துவம் செய்யும் செக்யூர் 360 செயலி பயன்பாட்டிற்கான அங்கீகாரத்தையும் பெற்றது. NDB தகவல் தொழில்நுட்ப [IT] பாதுகாப்பு தலைவர் ரசிக சம்பத் தெரிவிக்கையில் 'நாங்கள் தொழில்துறையில் சிறந்தவர்களுடன் கூட்டு சேர்ந்துள்ளோம், சந்தையில் சிறந்த பாதுகாப்பு தீர்வுகளைப் பெறுகிறோம், மேலும் பணி புரிய சரியான நபர்களைத் தேர்ந்தெடுக்கிறோம்; இந்த மைல்கற்களை அடைய புத்தாக்கம் அவசியம். பாதுகாப்பு குறித்த முகாமைத்துவத்தினதும் தலைமைத்துவத்தினதும் ஆழமான புரிதலானது தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு தொடர்பான அனைத்து மைல்கற்களையும் அடைவதற்கான கருவிகளாகவுள்ளன. எம்மிடம் மேலும் பணிக்கக்கூடிய அர்ப்பணிப்பான குழு உள்ளது.

IT பாதுகாப்பில் NDB இன் சாதனைகளானவை சான்றிதழ்கள் மற்றும் விருதுகளுக்கு அப்பாற்பட்டவையாகும். இணையப் பாதுகாப்பிற்கான வங்கியின் முழுமையான அணுகுமுறையானது தொடர்ச்சியான கண்காணிப்பு, வழக்கமான தணிக்கைகள் மற்றும் செயலில் உள்ள இடர் முகாமைத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கியது. மேம்பட்ட பாதுகாப்பு தீர்வுகளை ஒருங்கிணைப்பதன் மூலமும், விழிப்புணர்வின் கலாசாரத்தை வளர்ப்பதன் மூலமும், NDB அதன் டிஜிட்டல் உள்கட்டமைப்பு வலுவானதாகவும், மீள்தன்மையுடனும் இருப்பதை உறுதி செய்கிறது.

முன்னோக்கிப் பார்க்கும்போது, NDB IT பாதுகாப்பில் அதன் சிறந்த பயணத்தை தொடர தயாராக உள்ளது. வங்கி தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்துவதற்கும், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்வதற்கும், தொடர்ச்சியான முன்னேற்றத்தின் கலாசாரத்தை வளர்ப்பதற்கும் உறுதிபூண்டுள்ளது.

இறுதியில் , ISACA விடமிருந்து 2024 ஆம் ஆண்டுக்கான தொழில்நுட்ப மீண்டெழுகைக்கான கம்பெனியாக NDB அங்கீகரிக்கப்பட்டமையானது தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பில் சிறந்து விளங்கும் வங்கியின் பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாக விளங்குகின்றது. இந்த அங்கீகாரம் NDB இன் சாதனைகளைக் கொண்டாடுவதுடன் மட்டுமல்லாமல் நம்பகமான மற்றும் பாதுகாப்பான வங்கிப் பங்காளியாக அதன் நிலையை வலுப்படுத்துகிறது. NDB அதன் இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும் , அதன் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பையும் நம்பிக்கையையும் உறுதி செய்வதிலும், வங்கித் துறையில் புதிய அளவுகோல்களை அமைப்பதிலும் உறுதியாக உள்ளது.

NDB வங்கி இலங்கையில் நான்காவது பாரிய பட்டியலிடப்பட்ட வணிக வங்கியாகும். ஆசிய வங்கியியல் மற்றும் நிதி சில்லறை வங்கியியல் விருதுகள் 2023 இல் ஆண்டின் சிறந்த சில்லறை வங்கி (இலங்கை) மற்றும் Asiamoney ஆல் சிறந்த கூட்டாண்மை வங்கி 2023 என பெயரிடப்பட்டது. மேலும் 2022 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக இலங்கையில் அதிக விருதுகளைப் பெற்ற நிறுவனமாக இலங்கையின் LMD சஞ்சிகையினால் வருடாந்த தரவரிசையில் வரிசைப்படுத்தப்பட்டது.Global Finance USA மற்றும் Euromony ஆகியவற்றின் வருடாந்த சிறந்த வங்கி விருது நிகழ்ச்சிகளில் 2022 இல் இலங்கையின் சிறந்த வங்கியாக தெரிவு செய்யப்பட்டது.

மேலதிகமாக , USA யிலுள்ள கிரேட் பிளேஸ் டு வொர்க்அமைப்பினால் "இலங்கையில் 2022 இல் சிறந்த 50 பணியிடங்களில்" ஒன்றாக பெயரிடப்பட்டது. NDB என்பது NDB குழுமத்தின் தாய் நிறுவனமாகும்,இது மூலதன சந்தை துணை நிறுவனங்களை உள்ளடக்கிய நிலையில் ஒரு தனித்துவமான வங்கியியல் மற்றும் மூலதன சந்தை சேவைகள் குழுவை உருவாக்குகிறது. டிஜிட்டல் வங்கியியல் தீர்வுகளினை பயன்படுத்தி அர்த்தமுள்ள நிதி மற்றும் ஆலோசனை சேவைகள் மூலம் தேசத்தையும் அதன் மக்களையும் மேம்படுத்துவதற்கு வங்கி உறுதிபூண்டுள்ளது.



வலமிருந்து நிற்பவர்கள்: ரணித் தர்மரத்ன, பசிந்து பண்டார, அச்சிரவுவின், கே.வி.வினோஜ் (பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி), கெலும்எதிரிசிங்க (பிரதம நிறைவேற்று அதிகாரி), ரசிக சம்பத், இந்திக்க குணவர்தன (CIO/VPIT), கல்ஹாரி கமகே, பமோத் மதுசங்க

## பங்குகள் ஒன்றிணைப்புக்கு அமானா வங்கி பங்குதாரரர்கள் வரவேற்பு

### ஒன்றிணைப்பின் பின்னர் பங்கொன்றின் தேறிய சொத்துப் பெறுமதி ரூ. 40 ஐ விட அதிகரிக்கும்



கொழும்பு பங்குப்பரிவர்த்தனைக்கு வழங்கியிருந்த அறிவித்தலின் பிரகாரம் பங்குகளை ஒன்றிணைக்கும் செயற்பாட்டுக்கு அனுமதி கிடைத்துள்ளதாக அமானா வங்கி அறிவித்துள்ளது. பங்குதாரர்களின் பெறுமதியை மேம்படுத்துவது, வங்கியின் உறுதியான செயற்திறன் நிறைந்த நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றுக்கு பொருத்தமான செயற்பாடாக இது கருதப்பட்ட நிலையில், முதலீட்டாளர் சமூகத்தினால் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ரூ. 6 பில்லியன் மூலதன உள்ளீட்டை அண்மையில் மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

2023ஆம் ஆண்டில் வங்கி பதிவு செய்திருந்த அதிசிறந்த நிதிப் பெறுபேறுகளைத் தொடர்ந்து, 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தனது வளர்ச்சி மற்றும் மீண்டெழுந்தன்மையை தொடர்ந்திருந்தது. முதல் காலாண்டில் வரிக்கு பிந்திய இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 91% இனால் உயர்ந்திருந்தது. முற்பணங்கள் 8% வளர்ச்சியை பதிவு செய்திருந்ததுடன், மக்களுக்கு நட்பான மற்றும் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட வங்கியியல் வழிமுறைக்கான கேள்வியை பிரதிபலித்திருந்தது. துறையில் குறைந்த நிலை 3 மதிப்பிறக்க நிதியளிப்பு விகிதமான 1.6% ஐ வங்கி பேணியிருந்ததுடன், வினைத்திறனான இடர் முகாமைத்துவத்தை பிரதிபலித்திருந்தது. மேலும், பங்கின் மீதான வருமானம் (ROE), 6.2% இலிருந்து 7.8% ஆக உயர்ந்து, மேம்படுத்தப்பட்ட பங்குதாரர் வருமதியை வெளிப்படுத்தியிருந்தது.

கடந்த ஆறு வருட காலப்பகுதியில் வங்கியின் தொடர்ச்சியான பங்கிலாப வெளியீட்டினூடாக பங்குதாரர்களுக்கான பெறுமதியில் அமானா வங்கியின் அர்ப்பணிப்பு என்பது மேலும் உறுதி செய்யப்பட்டிருந்தது. பங்கிலாப விளைவில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி மற்றும் செலுத்தப்பட்ட பங்கிலாபம் ஆகியவற்றில் உறுதியான வளர்ச்சியை காண்பித்திருந்ததுடன், முதலீட்டாளரின் நம்பிக்கையை மீள உறுதி செய்திருந்தது. மேலும், வெற்றிகரமான உரிமைப் பங்கு வழங்கல் என்பதனூடாக சவால்கள் நிறைந்த காலப்பகுதியிலும், ரூ. 6 பில்லியன் திரட்டப்பட்டிருந்ததுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்குதாரர்களிடமிருந்து கிடைக்கும் உறுதியான ஆதரவை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மூலதன உள்ளீட்டினூடாக எதிர்கால வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கப்படும் என்பதுடன், வங்கியின் நிதி அடித்தளத்தை வலிமைப்படுத்துவதாக அமைந்திருக்கும்.

10 இலிருந்து 1 எனும் ஒன்றிணைப்பின் பிரகாரம், அமானா வங்கி சாதாரண வாக்களிப்பு பங்குகள் தற்போது 551,125,746 ஆக காணப்படும். ஒன்றிணைப்பின் பின்னர், வங்கியின் பங்கொன்றின் தேசிய சொத்துப் பெறுமதி ரூ. 40 ஐ கடக்கும் என 2024 முதல் காலாண்டு நிதிக் கூற்றுகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

பங்கு ஒன்றிணைப்பு தொடர்பில் அமானா வங்கி முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், "பங்குதாரர் பெறுமதியை மேம்படுத்துவதற்கான மூலோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாக பங்கு ஒன்றிணைப்பு அமைந்துள்ளது. எமது வளர்ச்சி மூலோபாயத்தில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில் அவர்களின் வரவேற்பு அமைந்திருந்தது. எமது மூலோபாய திட்டத்தின் பிரகாரம் நிலைபேறான வளர்ச்சியை முன்னெடுப்பது மற்றும் எமது பங்குதாரர்களுக்கு நீண்ட கால பெறுமதியை ஏற்படுத்திக் கொடுப்பது ஆகியவற்றுக்கு எம்மை தொடர்ந்தும் அர்ப்பணித்து செயலாற்றுவோம்." என்றார்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் IsDB குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. IsDB குரூப் 'AAA' தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டி சாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் 37ஆம் ஸ்தானத்தில் ஏசியன் பாங்கர் தரப்படுத்தி கௌரவித்துள்ளது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான OrphanCare நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.

# BANKING & FINANCE

Supplement தினகரன்

## இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறுவர், இருதயம், மார்பு சிகிச்சை விடுதியைப் புனரமைப்புச் செய்துள்ள மக்கள் வங்கி

இலங்கையில் சுகாதாரப் பராமரிப்பு உட்கட்டமைப்பினை மேம்படுத்தும் பணியின் மற்றுமொரு முக்கியமான படியாக, கொழும்பிலுள்ள இலங்கை தேசிய வைத்தியசாலையில் சிறுவர் இருதயம் மற்றும் மார்பு சிகிச்சை விடுதியை (1ஆம் விடுதி) புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்து, உத்தியோகபூர்வமாக திறந்து வைத்துள்ளமை தொடர்பில் பெருமையுடன் அறிவித்துள்ளது. இப்பாரிய புனரமைப்புப் பணியானது ரூபா 8,000,000/ க்கும் மேற்பட்ட தொகை செலவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வங்கியின் வர்த்தக சமூக நலன்புரி வர்த்தகநாமமான “மகாஜன மெஹெவர” என்பதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு முக்கியமான முயற்சியாக அமைந்துள்ளது. இலங்கையில் சுகாதாரப் பராமரிப்புத் துறைக்கு உதவி, அதனை மேம்படுத்துவதில் வங்கி தற்போது மேற்கொண்டு வருகின்ற தொடர்ச்சியான முயற்சிகள் மத்தியில் ஒரு முக்கியமான சாதனை இலக்காக இந்த நிகழ்வு அமைந்துள்ளது.



புனரமைப்புச் செய்யப்பட்டு, புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ள சிறுவர் இருதய மற்றும் மார்பு சிகிச்சை விடுதியின் திறப்பு விழா வைபவமானது அன்று இடம்பெற்றதுடன், மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ச, மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா, மக்கள் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள், இலங்கை தேசிய வைத்தியசாலையின் சுகாதார பராமரிப்புத் துறையினர் மற்றும் தொடர்புபட்;ட ஏனைய பல்வேறு தரப்பினர் இதில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு உதவுவதில் மக்கள் வங்கி மிக நீண்ட கால பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. 1999 ஆம் ஆண்டில் இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு முதன்முதலில் சிறுவர் இருதயம் மற்றும் மார்பு சிகிச்சை விடுதியை நன்கொடையளித்திருந்த மக்கள் வங்கி, சுகாதாரப் பராமரிப்பு வசதிகளை மேம்படுத்துவதில் தனது அர்ப்பணிப்பை வெளிக்காண்பித்திருந்தது. வைத்தியசாலையில் தற்போது அதிகரித்து வரும் தேவைகளைக் கருத்தில் கொண்டு, முன்பு நன்கொடையளிக்கப்பட்டிருந்த சிறுவர் இருதயம் மற்றும் மார்பு சிகிச்சை விடுதிக்கு (1ஆம் விடுதி), இருதய மற்றும் மார்பு சத்திர சிகிச்சைப் பிரிவை இடம்மாற்றுவதற்கு அதிகாரிகள் திட்டமிட்டதுடன், நவீன சுகாதாரப் பராமரிப்பு தராதரங்களைக் கொண்டிருக்கும் வகையில் இச்சிகிச்சை விடுதியை தரமுயர்த்துவதற்காக மக்கள் வங்கியின் உதவியை அவர்கள் நாடியிருந்தனர்.

மார்பு சத்திர சிகிச்சைப் பிரிவானது சிக்கலான மருத்துவ சிகிச்சைகள் அடங்கலாக முக்கியமான சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வழங்குமு; முக்கியமான மையமாகத் திகழ்ந்து வருகின்றது. இந்த விசேட மருத்துவ சேவைகளுக்கான தேவை அதிகரித்துவருகின்ற நிலையில், சிறப்பான நோயாளர் பராமரிப்பை வழங்குவதற்கு தேவையான வசதிகளை இவ்விடுதி கொண்டிருப்பது மிகவும் அவசியமாகும்.

5ஆவது ‘அருணலு சித்திரம்’ போட்டி:

## சிறுவர்களின் ஓவியத்திறனை ஊக்குவிக்கிறது கொமர்ஷல் வங்கி




இலங்கையின் கொமர்ஷல் வங்கி நடாத்தும் சிறுவர் ஓவியப் போட்டியான 'அருணலு சித்திரம்" ஐந்தாவது முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் நாடு முழுவதும் உள்ள இலங்கை சிறுவர்கள் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கை சிறுவர்கள் மீண்டும் தங்கள் கலைத்திறன்களை வெளிப்படுத்தி பணப் பரிசில்களை வெல்ல முடியும். வெற்றியாளர்களுக்கு 2.4 மில்லியன் ரூபா பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

நான்கு வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளுக்காக பிரத்தியேகமாக, வங்கியின் புகழ் பெற்ற குழந்தைகள் சேமிப்புக் கணக்கான ‘அருணலு’ பதாகையின் கீழ் இந்தப் போட்டி இணையத்தள ரீதியில் நடத்தப்படும் என்று வங்கி அறிவித்துள்ளது.

அருணலு சித்திரம்" மீண்டும் மொத்தமாக 142 இளம் கலைஞர்களுக்கு பணப்பரிசில்கள் மற்றும் 250 போட்டியாளர்களுக்கு தகுதிச் சான்றிதழ்களை வழங்கவுள்ளது. அனைத்து உள்ளீடுகளும் 31 ஆகஸ்ட் 2024 அன்று அல்லது அதற்கு முன்னதாக இணையத்தளத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். போட்டியாளர்கள் www.arunalusiththam.lkற்கு விஜயம் செய்து தங்கள் ஓவியங்களை சமர்ப்பிக்கலாம். மேலும் தொடர்புடைய விபரங்களுடன் தங்கள் வரைபடத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகலைப் பதிவேற்றலாம். ஓவியங்கள் jpej வடிவத்தில் இருக்க வேண்டும் எனவும் மற்றும் கோப்பின் அளவு 5ஆடீ களை விட அதிகமாக இருக்கக்கூடாது எனவும் வங்கி தெரிவித்துள்ளது. ஒருவர் ஒரு ஓவியத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். மேலும் சமர்ப்பிக்கப்படும் ஆக்கங்கள் வேறு எப்போட்டிக்கும் சமர்பிக்கப்படாத அசலானதாக இருத்தல் வேண்டும்.

போட்டியாளர்கள் தங்கள் வரைபடங்களை ஐந்து பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கலாம்: முன் ஆரம்பப்பள்ளி (வயது 4–5), ஆரம்பப்பள்ளி (வயது 6–7), பிந்தைய ஆரம்பப் ஆரம்பப் பள்ளி (வயது 8–10), கனிஷ்டப் பிரிவு (வயது 11–13), மற்றும் சிரேஷ்டப் பிரிவு (வயது 14 –16) என்பனவே அவை. முன் ஆரம்பப்பள்ளி மற்றும் ஆரம்பப்பள்ளி பிரிவுகளில் போட்டியிடும் போட்டியாளர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் எந்த தலைப்பிலும் வரைவதற்கு உரித்துடையவர்களாவர்.அதே வேளையில், பிந்தைய ஆரம்பப்பள்ளி, கனிஷ்ட மற்றும் சிரேஷ்டப் பிரிவுகளில் பங்கேற்பவர்கள் முறையே கிராமிய மக்கள், 'சடங்குகள்,சம்பிரதாயங்கள்" மற்றும் எங்கள் 'கலாசார அம்சங்கள்" ஆகிய தலைப்புகளில் ஏதேனும் ஓர் தலைப்பினை தேர்ந்தெடுத்து வரையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மூன்று இளைய வயது பிரிவினருக்கான காகித அளவு A3 ஆகும், அதே சமயம் இரண்டு வயது கூடிய குழுக்களில் உள்ள போட்டியாளர்கள் 14x18 அங்குல காகிதத்தைப் பயன்படுத்த வேண்டும். போட்டியாளர்கள் ஒட்டும் மற்றும் உலர்த்தாத வண்ணப்பூச்சு வகைகளைத் தவிர்த்து, தாளில் தங்கள் சிந்தனைகளை வண்ணமயமாக்க, தங்களுக்கு விருப்பமான வர்ணப்பூச்சுகளைதெரிவு செய்யலாம் என்று வங்கி தெரிவித்துள்ளது.

உள்நாட்டு முன்பள்ளி பிரிவில் மிகவும் ஆக்கப்பூர்வமான சித்திரங்களைச் சமர்ப்பிக்கும் இளைய போட்டியாளர்களில் 25 பேருக்கு சான்றிதழ்களுடன் தலா 10,000 ரூபா பணப்பரிசில் வழங்கப்படும் என வங்கி தெரிவித்துள்ளது. இந்தப் பிரிவில் மேலும் 50 திறமைசாலிகளுக்கு தகுதிச் சான்றிதழ்களைப் பெறுவார்கள்.

மற்றைய நான்குஉள்நாட்டு வயதுப் பிரிவுகளில் முதலிடத்தைப் பெறும் ஓவியங்களுக்கு தலா ரூ.100,000 பணப்பரிசில், இந்தப் பிரிவுகளில் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.75,000 மற்றும் ரூ.50,000 பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

உள்நாட்டு பிந்தைய ஆரம்பப்பள்ளி, ஆரம்பப் பள்ளி, கனிஷ்ட மற்றும் சிரேஷ்டப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் 25 போட்டியாளர்கள், சான்றிதழ்களுடன் தலா ரூ.10,000 பணப்பரிசிலுடன் சிறந்த விருதுகளையும் பெறுவார்கள். இந்த நான்கு பிரிவுகளில் இருந்து மேலும் 50 போட்டியாளர்களுக்கு தகுதி சான்றிதழ் வழங்கப்படும். போட்டியின் முடிவுத் திகதியில் தற்போதுள்ள கொமர்ஷல் வங்கி அருணலு மற்றும் இசுறு கணக்கு வைத்திருப்பவர்கள் பணப்பரிசிலினை பெறும் வெற்றியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், சிறப்புப் பரிசைப் பெறுவார்கள் என்று வங்கி தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், இந்த வயதுப் பிரிவுகளில் உள்ள எந்தவொரு பிள்ளையும் அவர்கள் கொமர்ஷல் வங்கியின் கணக்கினை வைத்திருப்பவர்களா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் போட்டியில் பங்கேற்கலாம். இதேவேளை, வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கை சிறுவர்கள் அனைத்துப் பிரிவுகளிலும் வரைந்த சிறந்த சித்திரம் ஒவ்வொன்றுக்கும் ரூபா 50,000 பணப்பரிசில் வழங்கப்படும். சமர்ப்பிக்கப்படும் ஓவியங்களுக்கான அனைத்து உரிமைகளும் வங்கியைச் சேரும் எனவும், வெற்றியாளர்கள் தொடர்பாக அனுபவம் வாய்ந்த நடுவர்கள் குழு எடுக்கும் தீர்மானமே இறுதியானதாக இருக்கும் என்றும் வங்கி தெரிவித்துள்ளது.

## தொழில்முனைவோரைப் பலப்படுத்தும் இலங்கை வங்கி

இலங்கை வங்கியானது நாடு முழுவதுமுள்ள சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத்துறை சார்ந்த ஏற்றுமதியாளர்களைப் பலப்படுத்தும் முகமாக எதிர்காலத்தில் ஏற்றுமதித்துறையில் சிறந்து விளங்கக் கூடிய மற்றும் ஏற்கனவே இத்துறையில் ஈடுபட்டுவரும் இளம் தொழில் முனைவோர் தமது தொழிற்தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்ளும் பொருட்டு இலங்கை வணிகக் கழகத்துடன் *(Ceylon Chamber of Commerce)* இணைந்து மாகாண ரீதி யான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கின்றது.

பொருளாதார நெருக்க டிமிக்க காலங்களில் ஏற்றுமதிசார் தொழிற் துறையினருக்கு கரங்கொடுக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வங்கியின் “ஏற்றுமதி வட்டம்” என்ற பிரிவின்கீழ் இம் முன்னெடுப்புகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. தேசத்தின் வங்கியாளர் என்ற வகையில் இலங்கை வங்கி சிறியளவிலான ஏற்றுமதியாளர்களையும் வளர்ந்துவரும் ஏற்றுமதியாளர்களையும் ஏற்றுமதித்



துறை ஜாம்பவான்களாக மாற்றும் பொருட்டு இந்நிகழ்ச்சித்திட்டத்தைக் கையிலெடுத்துள்ளது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் முடிவில், சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத்துறைசார் தொழில் முயற்சியாளர்கள் தமது பலவீனங்களை அடையாளங் கண்டு பலங்களைக் கட்டியெழுப்பி அதன் மூலம் ஏற்றுமதித் துறைப் பயணத்தை ஆரம்பித்து சர்வதேச சந்தைக்குள் காலடி எடுத்து வைக்கும் வகையில் பரந்தகன்ற ஏற்றுமதி உத்திகளை வகுத்துக்கொள்ளக்கூடியவர்களாக மாறுவர்.

நாடுமுழுவதும் பரவலாக நடாத்தப்படும் இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஏற்கனவே மத்திய மாகாணத்தின் கண்டி, தென்மாகாணத்தின் மாத்தறை, சப்ரகமுவ மாகாணத்தின் குருவிட்ட, ஊவா மாகாணத்தின் பதுளை முதலான இடங்களில் நான்கு ஏற்றுமதி மாநாடுகளை 2024.07.06 ஆம் திகதி நடாத்தியுள்ளது.

ஊவா மாகாணத்தில் 50 ஏற்றுமதி வாடிக்கையாளர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றதுடன் இத்தொடர் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக இதுவரை 250 ஏற்றுமதி வாடிக்கையாளர்களுக்கு மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர். அத்துடன் நாட்டின் சகல மாகாணங்களில் இருந்தும் 600இற்கு மேற்பட்ட ஏற்றுமதித்துறைசார் தொழில் முயற்சியாளர்களுக்குப் பயிற்சி வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

பல்வேறு விடயப் பரப்புகளிலும் நடாத்தப்பட்ட மேற்படி நிகழ்ச்சித்திட்டமானது சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத் துறை மாற்றத்தையும் *(SME Transformation)* சந்தை அணுகல் மாதிரியையும் *(Market Access Model)* பயன்படுத்தியுள்ள நம் நாட்டு தொழில்முயற்சியாளர்களது கதைகளையும் உண்மையான உதாரணங்களையும் உள்ளடக்கி ஓர் பயிற்சிப்பட்டறை வடிவில் நடாத்தப்படவுள்ளது.

இலங்கை வணிகக் கழகமானது தம்மால் உருவாக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத்துறை மாற்றம் மற்றும் சந்தை அணுகல் மாதிரி என்பவற்றின் ஊடாகப் பல சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களை ஏற்றுமதிசார் நிறுவனங்களாக மாற்றியுள்ளது. மேலும், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொழில்முனைவோரின் வெற்றிக்குத் தேவையான திறன்களையும் அறிவையும் முயற்சியாளர்களுக்கு வழங்குவதனூடாக அவர்களுக்கு நம்பிக்கையையும் பலத்தையும் ஊட்டுவதனை இலக்காகக் கொண்டுள்ளன.

இத்தொடர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கு அனுபவமும் திறமையும் வாய்ந்த சிறிய மற்றும் நடுத்தர வியாபார மாற்றத் துறையில் பாண்டித்தியம் மிக்க ஒருவரை இலங்கை வங்கி ஈடுபடுத்தி வருகிறது. இலங்கை வங்கி மற்றும் இலங்கை வணிகக் கழகம் என்பவற்றின் இக்கூட்டுமுயற்சி சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஆதரித்தல் மற்றும் வியாபாரத்துறையில் ஏற்றுமதி மூலோபாயங்களை ஊக்குவித்தல் என்பவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.






## நாடு முழுவதும் உள்ள கிளைகளில் அடகுச் சேவைகளை விரிவுபடுத்துகிறது யூனியன் வங்கி

யூனியன் வங்கியின் வர்த்தகநாம நெறிமுறைகளுக்கு இணங்க, "வாழ்க்கையை மாற்றுதல்" என்பதன் மூலம் வங்கியானது நெகிழ்வான நிதித் தீர்வுகள் மூலம் வாழ்க்கையை மாற்றுவதைக் குறிக்கின்றது. இந்த முன்முயற்சியின் ஒரு பகுதியாக, வங்கி தனது அடகுச் சேவைகளை நாடளாவிய ரீதியில் பல புதிய கிளைகளில் விரிவுபடுத்தியதுடன், போட்டியான அடகு மற்றும் விரைவான சேவையுடன் மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குகிறது. மேலதிகமாக, வங்கி அதிக விழிப்புணர்வை உருவாக்கி அதன் கிளைகளுக்கு அதிக வாடிக்கையாளர்களை ஈர்க்கும் நோக்கில் வாடிக்கையாளர்களுக்கு ஊக்குவிப்பு பரிசையும் அறிமுகப்படுத்தியது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், சுன்னாகம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை உட்பட வடக்கு மற்றும் கிழக்கில் ஆரம்பித்து, நாடளாவிய ரீதியில் பல கிளைகளிலும் இந்த ஊக்குவிப்பு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. யூனியன் வங்கியின் அடகு வைப்புத் தலைவர் கிறிஸ்லான் அல்கம கூறுகையில், “வாடிக்கையாளர்களுக்கு அணுகக்கூடிய நிதித் தீர்வுகளை வழங்குவதே வங்கியின் நோக்கமாகும். உடனடி பணத் தேவைகளுக்காக தங்கப் பொருட்களைப் பயன்படுத்துவதா அல்லது தங்கக் கடன்கள் மூலம் நிதி உதவி பெறுவதா. தொடங்கப்பட்ட விளம்பரங்கள், வாடிக்கையாளர்களை எங்கள் கிளைகளை பார்வையிட ஊக்குவிக்கிறது. தொழில்துறையின் சிறந்த அடகு முன்பணத்தை நாங்கள் பராமரித்து வருகிறோம், மேலும் எங்கள் வாடிக்கையாளரின் தேவைகளின் அடிப்படையில் நெகிழ்வான தீர்வுகளை வழங்குகிறோம், குறுகிய கால நிதித் தீர்வுகளை நாடுபவர்களுக்கு மூன்று முதல் ஆறு மாதங்கள் வரையிலான திருப்பிச் செலுத்தும் காலமும் உள்ளது.




# 2024 நிதியாண்டில் 12% வளர்ச்சியைப் பதிவு செய்த CIC Holdings நிறுவனம்

தினகரன் வர்த்தக உலா
shumsfahim@gmail.com | சம்ஸ் பாஹிம்

விவசாயத்தை மையமாகக் கொண்ட பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான CIC Holdings PLC நிறுவனம், மிதமான நிலையான Macro பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் மார்ச் 31, 2024 இல் முடிவடைந்த நிதியாண்டில் உயர் மட்ட வருவாய் வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது,

பயிர்த் தீர்வுகள் (Crop Solutions), விவசாய உற்பத்தி, சுகாதாரம் மற்றும் தனிப்பட்ட பராமரிப்புத் துறைகள் ஆகியன 2024 நிதியாண்டில் CIC நிறுவனத்தின் வளர்ச்சியில் பிரதான பங்காற்றின. அத்துடன், கடந்த ஆண்டுக்கான மொத்த குழு வருவாயில் பயிர் தீர்வுகள் வணிகம் முக்கிய பங்காளராக இருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.



இதன்படி, CIC குழுமம் கடந்த ஆண்டில் ரூ.76.4 பில்லியனை ஒருங்கிணைந்த குழுவின் வருவாயாக பதிவு செய்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 11.9%அதிகமாகும். மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் CIC குழுவானது வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ.11 பில்லியனைப் பதிவுசெய்துள்ளது, இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.6% வளர்ச்சியை எட்டியுள்ளது. இதனிடையே, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மொத்த இலாபம் 15.4% ஆக குறைந்துள்ளதுடன், 3.7 பில்லியன் ரூபாவால் குறைந்துள்ளது. அத்துடன், மொத்த இலாப வரம்பு 27% ஆக இருந்தது. கடந்த ஆண்டு இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில், 880 அடிப்படைப் புள்ளிகள் குறைந்துள்ளது. இதற்கு போட்டித் தன்மை மற்றும் அதிக உள்ளீட்டுச் செலவுகள் ஆகியவற்றால் ஏற்பட்ட அழுத்தம் தான் முக்கிய காரணமாகும்.

2024 நிதியாண்டின் நான்காவது காலாண்டில், CIC குழுமத்தின் ஒருங்கிணைந்த வருவாய் 3.745% அதிகரித்து ரூ. 16.2 பில்லியனாகவும், வரி செலுத்துவதற்கு முந்தைய இலாபம் (PBT) 7.47% அதிகரித்து ரூ. 1.3 பில்லியனாகவும் உயர்ந்துள்ளது. கூடுதலாக, 2023 நிதியாண்டின் அதே காலகட்டத்தில் ரூ. 790 மில்லியனாக இருந்த குழுமத்தின் நிதிச் செலவுகள் நான்காவது காலாண்டில் ரூ. 630 மில்லியனாக குறைந்துள்ளது. இதற்கு நடப்பு அரசாங்கத்தின் நிதி சீர்திருத்தங்கள் (ongoing Government's fiscal reforms) மற்றும் நாட்டின் macro stability (மேக்ரோ ஸ்திரத் தன்மை) அதிகரித்தமையும் காரணமாகும்.

CIC குழுமத்தின் பயிர் தீர்வுகள் (Crop Solutions) வணிகமானது அந்த நிறுவனத்தின் வருமானத்தில் மிகப்பெரிய பங்களாராக மாறியுள்ளது. இது மொத்த வருமானத்தில் 40.8% ஆகும். குழுமத்தின் மொத்த வருமானத்தில் கால்நடைகளை பராமரிப்பது (Livestock Solutions), சுகாதார மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு, தொழிற்துறை தீர்வுகள், மற்றும் விவசாய உற்பத்தி துறைகள் முறையே 21.1%, 21.2மூ, 9.9% மற்றும் 7.1% பங்களிப்பினை வழங்கியுள்ளன. மேலும், குழுமத்தின் செயல்பாட்டு இலாபம் (EBIT) ரூ. 10.7 பில்லியன் ஆக முடிந்தது, இது ஆண்டிற்கு 36.6% குறைவாகும். மேலும், மதிப்பாய்வு காலக்கட்டத்தில் குழுமத்தின் நிதிச் செலவு கடந்த ஆண்டு ரூ. 4.8 பில்லியனில் இருந்து ரூ. 3.3 பில்லியனாகக் குறைந்தது.



நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்களைப் பாராட்டி சான்றிதழ்கள் மற்றும் நினைவுப் பரிசுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கி வைத்தார். இதன்போது [Base 1 Consultancy (Pvt) Ltd] பேஸ் 1 ஆலோசனை நிறுவனத்தின் இயக்குனர் தொழிலதிபர் வீ.சந்திரசேகர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து பரிசில்களை பெறுவதை காணலாம்.

# புகழ்பெற்ற அவுஸ்திரேலிய முடி சிகிச்சை உற்பத்தியான 'BKT' இலங்கையில் அறிமுகம்



தன்னுடைய நனோதொழிநுட்ப பயன்பாட்டிற்காக பெரிதும் கொண்டாடப்படும் முன்னணி அவுஸ்திரேலிய முடி சீர்ப்படுத்தல் சிகிச்சை நிலையமான, BKT நனோ புரோவானது, ஆடம்பரமான அறிமுக நிகழ்வுடன் இலங்கைச் சந்தையில் அதனது பிரம்மாண்ட வருகையை மேற்கொண்டுள்ளது. அழகுக்கலைத் துறை மற்றும் ஏனைய முக்கியமான புகழ்பெற்ற ஆளுமைகளது வருகையை ஈர்த்திருந்த ஒன்றுகூடலானது தகவல்களினதும் பொழுதுபோக்கு அம்சங்களினதும் கலவையாக காணப்பட்டது.

BKT நனோ புரோவானது அதனது பயனாளர் சினேக தன்மையிற்காகவும் அதிகூடிய வினைத்திறனுடனான செயலூக்கமான உள்ளடக்கங்களை வழங்கும், மயிர்கால்களில் ஆழமாக ஊடுருவும் நனோ கூறுகளது உள்ளடக்கத்திற்காகம் தனிச்சிறப்பானதாக விளங்குகின்றது. இப்புத்தாக்கமான தயாரிப்பானது பளபளப்பினை மேம்படுத்தவும் சேதங்களை சரிசெய்தும் நேர்த்தியான தோற்றத்தை அடைவதற்கும் சுருள் தன்மையினைக் குறைக்கவும் பல்வேறு முடி கரிசனங்களை நிவர்த்திக்க வடிவமைக்கப்பட்ட தனித்தன்மையான சூத்திரங்களை வழங்குகின்றது.

"பிரேசிலியன் கெரடின் டிரீட்மெண்ட், அல்லது BKT, என்பது பிரேசிலிய அழகுக்கலைத் துறையில் நன்கறியப்பட்ட நிபுணர்களால் ஈர்க்கப்பட்ட அவுஸ்திரேலிய முடி சீர்ப்படுத்தல் சிகிச்சை முறையொன்றாகும். முடி மாற்றத்தில் இலகுத்தன்மையும் வினைத்திறனுமான புதியதொரு மட்டத்தினை இலங்கை பெண்களிற்கு வழங்க, BKT நனோ புரோவினை இலங்கைக்கு அறிமுகப்படுத்துவதில் நாம் உற்சாகமாக காணப்படுகின்றோம். எமது வெளியீட்டில் பங்குபெற்றவர்களின், குறிப்பாக சலூன் தொழில்வாண்மையாளர்களின் நேர்கணிய பின்னூட்டங்கள், வெற்றியின் கட்டியங்கூறும் அறிகுறியாகும்" என்றார் BKT ஸ்ரீ லங்காவின் முகாமைத்துவ பணிப்பாளர், இஷா குலதுங்க.

BKT நனோ புரோவானது ஈரத்தன்மை, கடுங்குளிர், அல்லது வெப்பம் போன்ற கடுமையான காலநிலைகளிற்கு எதிராக முடி எதிர்ப்புத்தன்மையை அதன் வினைத்திறன் உருவாக்குவதனால், இலங்கை பெண்களிற்கு விசேடமாக பொருந்தக்கூடியதாகும். உற்பத்தியின் செறிவுகளானவை ஆரோக்கியத்தினையும் பளபளப்புத் தரங்களை ஊக்குவித்து முடிக்கு புத்திளமையையும் புத்துயிர்ப்பையும் வழங்குகின்றது.

# சிறந்த செயற்பாடுகளுக்கு மத்தியில் பங்குகள் ஒன்றிணைப்புக்கு அமானா வங்கி பங்குதாரர்கள் வரவேற்பு

கொழும்பு பங்குப்பரிவர்த்தனைக்கு வழங்கியிருந்த அறிவித்தலின் பிரகாரம் பங்குகளை ஒன்றிணைக்கும் செயற்பாட்டுக்கு அனுமதி கிடைத்துள்ளதாக அமானா வங்கி அறிவித்துள்ளது. பங்குதாரர்களின் பெறுமதியை மேம்படுத்துவது, வங்கியின் உறுதியான செயற்திறன் நிறைந்த நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றுக்கு பொருத்தமான செயற்பாடாக இது கருதப்பட்ட நிலையில், முதலீட்டாளர் சமூகத்தினால் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ரூ. 6 பில்லியன் மூலதன உள்ளீட்டை அண்மையில் மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

2023 ஆம் ஆண்டில் வங்கி பதிவு செய்திருந்த அதிசிறந்த நிதிப் பெறுபேறுகளைத் தொடர்ந்து, 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தனது வளர்ச்சி மற்றும் மீண்டெழுந்தன்மையை தொடர்ந்திருந்தது. முதல் காலாண்டில் வரிக்கு பிந்திய இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 91% இனால் உயர்ந்திருந்தது. முற்பணங்கள் 8% வளர்ச்சியை பதிவு செய்திருந்ததுடன், மக்களுக்கு நட்பான மற்றும் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட வங்கியியல் வழிமுறைக்கான கேள்வியை பிரதிபலித்திருந்தது. துறையில் குறைந்த நிலை 3 மதிப்பிறக்க நிதியளிப்பு விகிதமான 1.6% ஐ வங்கி பேணியிருந்தது.



கடந்த ஆறு வருட காலப்பகுதியில் வங்கியின் தொடர்ச்சியான பங்கிலாப வெளியீட்டினூடாக பங்குதாரர்களுக்கான பெறுமதியில் அமானா வங்கியின் அர்ப்பணிப்பு என்பது மேலும் உறுதி செய்யப்பட்டிருந்தது. பங்கிலாப விளைவில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி மற்றும் செலுத்தப்பட்ட பங்கிலாபம் ஆகியவற்றில் உறுதியான வளர்ச்சியை காண்பித்திருந்ததுடன், முதலீட்டாளரின் நம்பிக்கையை மீள உறுதி செய்திருந்தது.

10 இலிருந்து 1 எனும் ஒன்றிணைப்பின் பிரகாரம், அமானா வங்கி சாதாரண வாக்களிப்பு பங்குகள் தற்போது 551,125,746 ஆக காணப்படும். ஒன்றிணைப்பின் பின்னர், வங்கியின் பங்கொன்றின் தேசிய சொத்துப் பெறுமதி ரூ. 40 ஐ கடக்கும் என 2024 முதல் காலாண்டு நிதிக் கூற்றுகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

பங்கு ஒன்றிணைப்பு தொடர்பில் அமானா வங்கி முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், "பங்குதாரர் பெறுமதியை மேம்படுத்துவதற்கான மூலோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாக பங்கு ஒன்றிணைப்பு அமைந்துள்ளது. எமது வளர்ச்சி மூலோபாயத்தில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில் அவர்களின் வரவேற்பு அமைந்திருந்தது. எமது மூலோபாய திட்டத்தின் பிரகாரம் நிலைபேறான வளர்ச்சியை முன்னெடுப்பது மற்றும் எமது பங்குதாரர்களுக்கு நீண்ட கால பெறுமதியை ஏற்படுத்திக் கொடுப்பது ஆகியவற்றுக்கு எம்மை தொடர்ந்தும் அர்ப்பணித்து செயலாற்றுவோம்." என்றார்.

# அரச வருமானத்தை குறைக்கும் உத்தியோகபூர்வமற்ற சந்தை உற்பத்திகள்; பாரிய வரி வருமான இழப்புகள் பதிவு

உத்தியோகபூர்வமற்ற சந்தை தயாரிப்புகள் நீண்ட காலமாக ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக இருந்து வருகின்றன. இது குறைந்த விலை மூலம் நுகர்வோரை கவர்ந்திழுக்கிறது. ஆயினும், இதன் பின்புலத்தில், இந்த அங்கீகரிக்கப்படாத இறக்குமதிகள் மூலம் கணிப்பிட முடியாத பொருளாதார மற்றும் நுகர்வோர் தொடர்பான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் அதிகரித்து வருகின்றன. அவை தற்போது அதன் ஆரம்ப நிலையைக் கடந்து அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.



வர்த்தகநாம முத்திரை கொண்ட உரிமையாளரின் அனுமதியின்றி, சந்தையில் பிரபலமான வர்த்தக நாமங்களின் தயாரிப்புகளின் இறக்குமதி மற்றும் விற்பனையே, உத்தியோகபூர்வமற்ற சந்தை தயாரிப்புகள் அல்லது ஒரே வகையான சமாந்தர இறக்குமதி உற்பத்திகள் என அழைக்கப்படுகின்றன. ஏற்கனவே இந்த அங்கீகரிக்கப்படாத இறக்குமதிகள், பெருமளவிலான வரி வருமான இழப்பு மற்றும் அந்நியச் செலாவணி வெளியேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. 2023 ஆம் ஆண்டு அறிக்கைகளுக்கமைய, சட்டவிரோத வழிகள் மூலமான உத்தியோகபூர்வமற்ற சந்தை இறக்குமதி காரணமாக, இலங்கைக்கு ரூ. 3.1 பில்லியன் (9.4 மில்லியன் டொலர்) வரி வருமானம் மற்றும் ரூ. 31.6 பில்லியன் (96 மில்லியன் டொலர்) அந்நியச் செலாவணி இழப்பு இடம்பெற்றுள்ளது.

அது மாத்திரமன்றி, அசல் தயாரிப்புகளின் பொருட்களின் விலை அதிகம் என்பதால், இணையான இறக்குமதி தயாரிப்புகளின் வருகை காரணமாக, முறையான இறக்குமதி மூலம் கொண்டு வரப்படும் உற்பத்திகள் ரூ. 2.5 பில்லியன் இழப்பை சந்திக்க நேரிடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இரகசியமாக இடம்பெறும் இந்த நடவடிக்கைகள் காரணமாக, இதன் உண்மையான பெறுமானத்தை சரியாக கணிப்பிட முடியாத போதிலும், இதன் தாக்கம் மறுக்க முடியாத அளவுக்கு கடுமையானது என்பதை மறுக்க முடியாது. இந்நிலைமையானது, நாடு எதிர்நோக்கும் பொருளாதாரச் சவால்களை மேலும் அதிகரிக்கச் செய்கிறது.

உத்தியோகபூர்வமற்ற சந்தை இறக்குமதிகள், வரி வருமான இழப்பிற்கு மேலதிகமாக, சட்டபூர்வ இறக்குமதிச் செயன்முறைகள் மற்றும் வரி விதிமுறைகளை கடைப்பிடிக்கும் முறையான வணிகங்களுக்கு சீரற்ற சந்தைத் தளத்தை உருவாக்குகின்றன. உரிய கட்டணங்கள் மற்றும் வரிகளைச் செலுத்தாது செலவுகளைத் தவிர்த்து, உத்தியோகபூர்வமற்ற சந்தை செயற்பாட்டாளர்கள் வழங்கும் குறைந்த விலைகளுடன், அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் போட்டியிட வேண்டியுள்ளது.

உத்தியோகபூர்வமற்ற சந்தையின் வளர்ச்சியானது, சட்டபூர்வமான இறக்குமதியாளர்களுக்கு ஒரு கடுமையான சவாலாக இருந்து வருகின்றது. இது முறையான இறக்குமதிகள் மற்றும் கடத்தப்பட்ட பொருட்களுக்கு இடையேயான விலை ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துவதாக, இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் இறக்குமதிப் பிரிவின் தலைவர் துலித மெண்டிஸ் தெரிவித்தார். சமீபத்தில் இடம்பெற்ற அதன் 89ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

# 25 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் International Scholar

International Scholar இன் 25ஆவது ஆண்டு நிறைவு, கொழும்பு சினமன் கிராண்ட் ஓக் அறையில் கொண்டாடப்பட்டது. கல்விசார் சாதனைகள் மற்றும் புலமைப்பரிசில் பெறுதல் என்பனவற்றில் International Scholar இன் சிறப்பான பங்களிப்பு அந்த மாலையில் நினைவுகூரப்பட்டது.







# INSEE Cement விருது வழங்கி கௌரவிப்பு

இலங்கையின் முன்னணி மற்றும் ஒரேயொரு, முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட உள்நாட்டு சீமெந்து உற்பத்தி நிறுவனமான INSEE Cement, அண்மையில் இடம்பெற்ற Green Industry Awards 2024 விருதுகள் நிகழ்வில், தாழ்ந்த காபன் மட்டத்துடன், காலநிலை நெகிழ்திறன் கொண்ட உற்பத்திக்காக வெள்ளி விருதையும், வர்த்தக சமூகப் பொறுப்புணர்வு மற்றும் பொறுப்புமிக்க வழியிலான உற்பத்திக்காக வெண்கல விருதையும் வென்று கௌரவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் BMICH இல் இடம்பெற்ற நிலைபேணத்தக்க கைத்தொழில் அபிவிருத்திக்கான பசுமை கைத்தொழில் முயற்சிகள் தொடர்பான 1வது சர்வதேச மாநாட்டின் போது கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையால் இவ்விருதுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



# மலேசியாவில் விடுமுறையை கழித்த செலிங்கோ லைஃப்பின் விற்பனை பிரதிநிதிகள்



காப்புறுதி சந்தையில் முன்னணியில் திகழும் செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டில் சிறப்பாகச் செயல்பட்ட விற்பனை பிரதிநிதிகள் மலேசியாவில் அண்மையில் விடுமுறையை கழிப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டனர். நட்சத்திரவெற்றியாளர்களின் குடும்ப உறுப்பினர்களையும் உள்ளடக்கிய 18 பேர் கொண்ட குழுவினர் ஜென்டிங் தீவுகளுக்கு முழு நாள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டதுடன் மேலும் KL டவர், குயின் டவர் மற்றும் சாக்லேட் நிறுவனத்திற்கும் சென்றனர். மலேசியாவுக்கான நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டுள்ள குழுவினர் இங்கே படத்தில் காணப்படுகின்றனர்.

# நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழா காளாஞ்சி வழங்கும் பாரம்பரிய நிகழ்வு





நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது. வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நடுதல் நடைபெற்று, பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்கள் காளாஞ்சி மாட்டுவண்டி மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.
(படங்கள்: யாழ். விசேட நிருபர்)

# சு.கவின் புதிய கூட்டணி ஆதரவுடனான வேட்பாளரே ஜனாதிபதியாக தெரிவாவார்

## ஹம்பாந்தோட்டை நிகழ்வில் அமைச்சர் மஹிந்த அமரவீர

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான

புதிய கூட்டணி, ஆதரவு தெரிவிக்கும் அபேட்சகரே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவார் என விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அங்குனுகொலபெலஸ்ஸவில் விவசாயிகளுக்கு வாயு துப்பாக்கிகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



அமைச்சர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், எமது கூட்டணியின் அறிவிப்பை நாம் இன்றைய தினம் (31) முழு நாட்டிற்கும் அறிவிப்போம். இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு ஒரு அபேட்சகரை போட்டியிடச் செய்ய முடியாது. ஏனென்றால் எமதுகட்சியின் முன்னைய தலைவர் எமது கட்சியை அழித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நாம் தனிப்பட்ட ரீதியில் அன்றி எமது கட்சியின் மத்திய குழு அனைவரினதும் கருத்துக்களை செவிமடுத்து கட்சி என்ற அடிப்படையில் ஒன்றிணைந்து ஜனாதிபதி அபேட்சகரை தெரிவு செய்யோம்.

நாட்டை தற்பொழுதுள்ள நிலையிலிருந்து மீட்டு சரியான பாதையில் எடுத்துசெல்லக் கூடிய அனுபவமும் தூரநோக்கும் உள்ள முழு நாடும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒருதலைவருக்கு எமது புதிய கூட்டணி ஆதரவினை வழங்கும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பல பிரிவுகளாக பிரிந்துள்ளதென தெரிவிக்கும் கருத்து தவறானது. சட்டரீதியான சுதந்திரக்கட்சி எம்மிடமே உள்ளது. இந்த கட்சியின் உரிமையும் தலைமையகமும் எம்மிடமேயுள்ளது.

ஆனபடியால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பாக ஒவ்வொருவரும் தெரிவித்துவரும் கருத்துக்கள் அர்த்தமற்றவை எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# ஆளுநர் நஸீர் அஹமட்டின் இணைப்பு செயலாளராக ரபாத்

**புத்தளம் தினகரன் நிருபர்**



வடமேல் மாகாண ஆளுநர் நசீர் அஹமடின் புத்தளம் மாவட்டத்திற்கான இணைப்பு செயலாளராக மதுரங்குளி விருதோடையைச் சேர்ந்த முன்னாள் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினரும், ஐ.தே. கட்சியின் வலய அமைப்பாளருமான ஏ.ஆர்.எம். ரபாத் அமீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார மற்றும் முன்னாள் சபாநாயகர் தேசபந்து கருஜயசூரிய ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க இவர் இணைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். வடமேல் மாகாண ஆளுநரின் புத்தளம் மாவட்ட இணைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள முதல் சிறுபான்மை உறுப்பினர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 1991ஆம் வருட அறபா பழைய மாணவர் ஏற்பாட்டில்

# மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு வலுவூட்டும் செயலமர்வு அறபாவில்






வெலிகம அறபா 1991 பழைய மாணவர் குழுவினால் இரண்டாவது தடவையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு கருந்தரங்கு அண்மையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் எம்.ரி.எம். முதஹ்ஹர் தலைமையில் நடைபெற்றது.

1991 பழைய மாணவர் குழு இதனை ஏற்பாடு செய்திருந்தது. அறபாவின் பழைய மாணவர்களான டொக்டர் இம்தியாஸ் மற்றும் டொக்டர் ஸிஹான் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர். தரம் 10,11,12 மாணவர்கள் இதில் பங்கேற்றதோடு 1991 பழைய மாணவர் குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

'நினைவாற்றல் நுட்பங்களும் கருவிகளும்' என்ற தலைப்பில் டொக்டர் ஸிஹான் விளக்கம் அளித்ததோடு ' கண்பார்வைக் குறைபாடுகளும் தீர்வுகளும்' என்ற தலைப்பில் டொக்டர் இம்தியாஸ் விரிவுரையாற்றினார். மாணவர்களிடம் கேள்வி எழுப்பப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டதோடு Back to school பாடசாலை அபிவிருத்திக்காக 1991 மாணவர் குழுவினால் ஒரு தொகை நிதி உதவியும் அளிக்கப்பட்டது.

இதில் 1991 பழைய மாணவர் நலன்புரி அமைப்பின் தலைவர், செயலாளர் மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். மாணவர்களின் நலனுக்கான பழைய மாணவர் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட இந்த செயலமர்விற்கு அதிபர் மற்றும் ஆசிரியர்கள் நன்றி தெரிவித்தனர்.

# மாத்தறை மாவட்ட மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப் பரிசில் வழங்கல்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

ஜனாதிபதி நிதியத்தால் வழங்கப்படும் மாத்தறை மாவட்ட மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் மாத்தறை றுகுனு பல்கலை கழக ரவிந்தரநாத் தாஹூர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

மாத்தறை மாவட்ட உயர்தர வகுப்பு மாணவர்கள் 240 பேருக்கும் ஏனைய வகுப்பு மாணவர்கள் 2861பேருக்கும் மொத்தம் 3101 பேர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டன. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மாதத்துக்கு 6000 ரூபாவும் ஏனைய மாணவர்களுக்கு 3000 ரூபாவும் வழங்கப்படவுள்ளன.



இந்நிகழ்வில் சபாநாயகர் மஹிந் தயாப்பா அபேவர்த்தன, ஜனாதிபதி பாதுகாப்பு பிரதானி சாகல ரத்னாயக்க, தென் மாகாண ஆளுநர் உட்பட அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

# வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைகளுக்காக TJC மா மரக்கன்றுகள் வழங்கி வைப்பு

**(திறப்பனை தினகரன் கல்நேவ தினகரன் விசேட நிருபர்கள்)**

வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைகளை ஆரம்பிக்கும் நோக்கில் கல்னேவ பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 30 பயனாளி குடும்பங்களுக்கு TJC மா மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு கல்நேவ பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம் பெற்றது.

SALVATION ARMY சால்வேஷன் இராணுவம் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் இந்த வேலை திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக விவசாய ஆலோசகர்கள் மூலம் விவசாயிகளுக்கு இது பற்றிய பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

கல்நேவ உதவி பிரதேச செயலாளர், களங்களுக்குப் பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு அதிகாரி (SALVATION ARMY) ஐ.ஆர். விஸ்வஜித் மற்றும் அதன் அதிகாரிகள் குழுவினர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இவ் வேலைத்திட்டம் கல்நேவ விதாதா அபிவிருத்தி உத்தியோகத்தர் எல்.பி.டி. ராஜரத்ன மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஈ.எம்.சிந்தக சுனில் ஆகியோரின் ஒருங்கிணைப்புடன் இடம் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.



கமு/சது/ சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) த்தில் கல்வி பயிலும் தரம் 09, 10 மாணவர்கள் பகுதித்தலைவர் எஸ்.எல். நௌஷாட் தலைமையில் கல்விச்சுற்றுலா மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்தனர். இவர்கள் சுற்றுலாவின் ஓர் அங்கமாக லேக்ஹவுஸ் நிறுவனத்தை பார்வையிட்ட பின்னர் தமது ஆசிரியர்கள் சகிதம் லேக்ஹவுஸ் முன்றலில் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். (படம்: துஷ்மந்த மாயாதுன்ன)

# காலி இப்னு அப்பாஸில் 06ஆவது பட்டமளிப்பு விழா

**(வெலிகம தினகரன் நிருபர்)**

காலி இப்னு அப்பாஸ் அறபுக் கல்லூரியின் 6வது அல்ஆலிம் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கல்லூரி வளாகத்தில் மிக விமர்சையாக இடம் பெறவுள்ளது.

25 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள இக்கல்லூரியின் பட்டமளிப்பு விழா கல்லூரியின் தலைவர் அஷ்ஷேக் எம்.ஓ. பத்ஹுர்ரஹ்மான் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறவுள்ளதோடு, பிரதம அதிதியாக சவூதி அரேபியா நஜ்ரான் பல்கலைக் கழக ஷரீஆ பீட ஹதீஸ் துறை பேராசிரியர் கலாநிதி அஷ்ஷேக் யூ.எல். அஹ்மது அஷ்ரப் (அல் அஸ்ஹரி) கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

2016 முதல் 2023 வரை இக் கல்லூரியில் ஷரீஆ துறையில் கற்ற 61 ஆலிம்களும் 29 ஹாபிழ்களும் சான்றிதழ்கள் பெறவுள்ளனர். மேலும் இவ் விழாவை அலங்கரிக்குமுகமாக இரண்டு நூல்கள் வெளியிடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு கைத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

இபலோகம பொலிஸ் பகுதிக்குட்பட்ட பல்லேகமவில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபர் 49 வயதுடைய மரதன்கடவல பகுதியைச் சேர்ந்தவராவர். சனிக்கிழமை (27) மரதன்கடவல பொலிஸார் பல்லேகம பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



# உணவு விடுதிகளில் PHI யினர் சோதனை

**மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**



மட்டக்களப்பின் காத்தான்குடி நகரசபைப் பிரிவில் உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சுற்றிவளைத்து சோதனை நடத்தினர்.

தமது வர்த்தக நிலையங்களில் சேரும் கழிவுநீரை பொது வடிகான்களுக்குள் விடுவதனூடாக ஏனைய வர்த்தகர்களும் பொது மக்களும் பாதசாரிகளும் துர்நாற்றத்தை சுவாசித்தல், டெங்கு நுளம்புகளின் தொல்லை உள்ளிட்ட சுகாதார சீர்கேட்டினால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்த நிலையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு கிடைத்த தகவலை அடுத்து இச்சோதனை நடத்தப்பட்டதாக, காத்தான்குடி பிரதேச மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் எம்.ஏ.எம்.பஷீர் தெரிவித்தார்.

தமது வர்த்தக நிலையங்களின் கழிவுநீரை பொது வடிகான்களுக்குள் வெளியேற்றி ஏனைய வர்த்தகர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்திய உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகளிலேயே பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனை நடத்தினர்.

காத்தான்குடி பிரதான வீதியில் அமைந்துள்ள உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் இச்சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அவர் கூறினார்.

இந்த நடவடிக்கையின் போது பத்துக்கும் மேற்பட்ட உணவு விடுதிகள், சிற்றுண்டிச்சாலைகளில் சோதனை நடத்தப்பட்டு, கழிவுநீர் வடிகான்களுக்குள் நீர் வழிந்தோடும் குழாய்கள் சீமெந்து கொண்டு நகர சபை ஊழியர்களால் அடைக்கப்பட்டு இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

இனிமேல் தமது வர்த்தக நிலையங்களின் கழிவுநீரை பிரத்தியேக வழிகளை ஏற்படுத்தி அகற்ற வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

# குளவி கொட்டியதில் 33 பேர் பாதிப்பு

**கிண்ணியா மத்திய, தம்பலகாமம் குறூப் நிருபர்கள்**

கிண்ணியா அல் அக்சா கல்லூரியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 32 மாணவர்களும் ஆசிரியர் ஒருவரும் குளவிக் கொட்டுக்கு இலக்காகி கிண்ணியா தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

இந்தப் பாடசாலையின் தொழில்நுட்பப் பிரிவு கட்டடத்தில் காணப்பட்ட குளவிக் கூடு பலத்த காற்று வீசியதன் காரணமாக கீழே விழுந்ததால் இந்த சம்பவம் ஏற்பட்டதாக தெரிய வருகின்றது. கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் வைத்தியசாலைக்கு நேரில் சென்று குளவிக் கொட்டுக்கு உள்ளான மாணவர்களை பார்வையிட்டனர்.

# வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கல்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறையில் வெள்ள அனர்த்தத்தால் கடந்த பெரும்போக நெற்செய்கையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படுவதாக, கமத்தொழில் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் காப்புறுதிச் சபையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எஸ்.சதீஸ்வரன் தெரிவித்தார்.

நெற்செய்கை பாதிக்கப்பட்டு இழப்பீட்டுக்காக விண்ணப்பித்த விவசாயிகளுக்கு தத்தமது வங்கிக் கணக்குக்கு இழப்பீட்டு பணம் வைப்பில் இடப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

கடந்த ஜனவரியில் வெள்ளத்தால் அம்பாறையில் அறுவடை செய்யப்படவிருந்த பெரும்போக நெற்செய்கை பாதிக்கப்பட்டது. இது தொடர்பாக மாவட்ட கமநல சேவை அபிவிருத்தி நிலையத்தினர் பாதிப்பு விபரங்களை சேகரித்ததுடன், பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து விண்ணப்பம் கோரினர். அம்பாறையில் செய்கை பண்ணப்பட்ட 2023/2024ஆம் ஆண்டுக்கான 27 கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட பிரதேசங்களில் பெரும்போக செய்கையில் 48,822 ஹெக்டேயர் சேதமடைந்ததால் 20,904 விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

# சுற்றுலா பயணிகளை தாக்கிய மூவர் கைது

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

உள்ளூர் சுற்றுலா பயணிகள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைதான 3 படகு சேவை உரிமையாளர்களில் ஒருவருக்கு திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதவானால் சரீரப் பிணை வழங்கப்பட்டுள்ளதுடன், ஏனைய இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். திருகோணமலையின் குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறாமலை தீவுக்கு கொழும்பு, தெஹிவளையிலிருந்து செல்லவிருந்த உள்ளூர் சுற்றுலா பயணிகள் மீது தாக்குதல் நடத்திய படகு சேவை உரிமையாளர்களான 60 , 40, 45 வயதுடைய மூவரை கைது செய்ததாக, குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.கடந்த 27ஆம் திகதி மாலை இடம்பெற்ற இந்த தாக்குதலின் போது சுற்றுலா பயணி ஒருவருக்கு காயம் ஏற்பட்ட நிலையில் அவர் நிலாவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின் வீடு திரும்பியுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.



அகில இலங்கை தமிழ்மொழி தின போட்டிக்கான கல்முனை வலய போட்டியானது நிர்வாகத்துக்கான பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர் தலைமையில் பற்றிமா தேசிய பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது எழுத்தாக்க போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. கல்வி முகாமைத்துவத்துக்கு பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் யூ.எல்.றியால் உட்பட கல்வியியலாளர்கள் பலர் இதில் கலந்துகொண்டனர். **(படம் பெரியநீலாவணை தினகரன் நிருபர்)**

# தென்கிழக்கு பல்கலையில் புதிய பதவியேற்புகள்

**அம்பாறை மத்திய தினகரன் நிருபர்**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழி பீடத்தில் திணைக்களங்கள் மற்றும் துறைகளில் பணியாற்றியவர்களுக்கு பதிலாக வேறு நிர்வாகிகள் குறித்த இடங்களை கையேற்கும் சம்பிரதாய நிகழ்வு பீடாதிபதி எம்.எச்.ஏ.முனாஸ் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது இரண்டரை வருடங்களாக அரபுமொழி துறையின் துறைத் தலைவியாக இருந்த எம்.சி.எஸ்.சாதிஃபா தனது உயர் கற்கையை தொடர்வதால் கலாநிதி ஏ.எம்.ராசிக் அரபுமொழி துறையில் துறை தலைவராக பதவி ஏற்றுக் கொண்டார்.

அவ்வாறே மூன்று தடவைகள் IDU ஒருங்கிணைப்பாளராக இருந்த கலாநிதி எப்.எச்.ஏ.ஷிப்லி தனது பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டதால் குறித்த வெற்றிடத்துக்கு எம்.எஸ்.ஏ. ரியாத் ரூலி நியமிக்கப்பட்டார். இப்பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப் பதிவாளராக கடமை ஆற்றுகின்ற எம்.எச். நபார் இப்பீடத்தின் Acting உதவிப் பதிவாளராக பதவி ஏற்றுக்கொண்டார்.



இங்கு உரையாற்றிய பீடாதிபதி முனாஸ், கடந்த காலத்தில் இந்த பணிகளை சிரமத்தோடுமேற்கொண்டஅனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் குறிப்பாக கடந்தகால சேவையை பாராட்டுவதோடு மாத்திரமன்றி புதியவர்களுக்கான உத்வேகத்தை வழங்குவது இந்நிகழ்வில் பிரதான நோக்கமாக அமைந்திருப்பதாக தெரிவித்தார்.

# முஸ்லிம் கலாசார போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றி

**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான முஸ்லிம் கலாசார போட்டியின் மாகாண மட்ட போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டியில் பங்குபற்றுவதற்காக அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்கள் 21 தங்கப்பதக்கம், ஒரு வெள்ளிப்பதக்கத்தை தனதாக்கிக்கொண்டனர்.

கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பில் மாகாண மட்ட போட்டி அண்மையில் காத்தான்குடி முஸ்லிம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. இதன்போது வெற்றி பெற்ற இம்மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

றபான் நடனம், கசீதா போட்டி, அரபு எழுத்தணிக்கலை மற்றும் அரபு தமிழ் இலக்கியம் ஆகியவற்றில் பங்குகொண்ட மாணவர்கள் முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றனர். இடைநிலைப் பிரிவு அதான் ஒலித்தல் போட்டியில் ஒரு மாணவர் இரண்டாமிடத்தை பெற்று வெள்ளிப்பதக்கத்தை பெற்றார்.

# மாவட்ட மட்ட போட்டிக்கு தகுதி

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**



இம்முறை (2024) நடைபெற்ற வலய மட்டத்திலான தமிழ்மொழி தின போட்டியில் சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலய மாணவி கே.எப்.நிஸ்கா முதலாம் பிரிவுக்குரிய வாசிப்பு போட்டியில் கலந்து கொண்டு முதலாமிடத்தை பெற்று மாவட்ட மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

முதன்முதலாக இம்மாணவி இச்சாதனையை நிலை நாட்டியமைக்காக பாடசாலை அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர் மற்றும் ஆசிரியர்கள் இம்மாணவியை பாராட்டினர்.

அண்மைக்காலமாக இப்பாடசாலையானது பல்வேறு வெற்றிகளை கல்வி மற்றும் இணைப்பாடவிதானம் ரீதியாக பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி பொதுவேட்பாளர்; தமிழ் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

## முன்னாள் பிரதி தவிசாளர் பிரசன்னா

**ஆரையம்பதி தினகரன் நிருபர்**



ஜனாதிபதி தேர்தல் தமிழ் மக்களின் ஒற்றுமையை நிர்ணயிக்கும் முக்கிய தேர்தலாகும். இதில் தமிழ் மக்கள் சார்பில் ஜனாதிபதி பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பதனால் அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு வேட்பாளரை நிறுத்த வேண்டும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் கிழக்கு மாகாண முன்னை நாள் பிரதி தவிசாளருமான இந்திரகுமார் பிரசன்னா தெரிவித்தார்.

ஜனாதிபதி பொது வேட்பாளர் தொடர்பாக கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழர் தரப்பில் பாரம்பரிய கட்சியாக விளங்கும் தமிழரசுக் கட்சி இது விடயத்தில் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும். எமது ஒற்றுமையை பலப்படுத்தும் சந்தர்ப்பம் இதுவாகும் . ஒற்றுமையின் தீர்மானம் சென்றடைய வேண்டும்.

இந்த ஒற்றுமை எதிர்காலத் தேர்தல்களிலும் செல்வாக்கு செலுத்துமென்பதில் ஐயமில்லை. எனவே அனைத்துக் கட்சிகளும் இவ்விடயத்தில் ஒன்றிணைய வேண்டும்" என்றார்.

# கல்முனை மாநகரசபை புதிய ஊழியர்களுடனான சந்திப்பு

**கல்முனை விசேட, பாலமுனை தினகரன், சாய்ந்தமருது விசேட நிருபர்கள்**



கல்முனை மாநகர சபையில் புதிதாக நிரந்தர நியமனம் பெற்ற ஊழியர்களுடனான சந்திப்பு மற்றும் முதல் மாத சம்பளம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸ் தலைமையில் மருதமுனை பொது நூலக சமூகவள நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. கல்முனை மாநகர சபையில் தற்காலிக, ஒப்பந்த, அமைய அடிப்படையில் பல வருடங்களாக கடமையாற்றிய 102 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைத்துள்ளது. இவர்களுள் கடமையை பொறுப்பேற்ற 99 ஊழியர்களுக்கு முதல் மாத சம்பளம் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# புதிய பிரதேச செயலாளர் கடமை பொறுப்பேற்பு

**வாழைச்சேனை தினகரன் நிருபர்**



கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபையின் புதிய செயலாளராக ரோகினி விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார். இதுவரைகாலமும் இவர் கொக்கட்டிச்சோலை மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளராக பணிபுரிந்து வந்தார்.புதிய செயலாளரை மலர்மாலை அணிவித்து சபையின் உத்தியோகத்தர்கள் வரவேற்றனர்.

# கலாநிதி ஜனகன் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி







நம்பிக்கை நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டிலும் ஐ டி எம் ன் சி (IDMNC) சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் பூரண அனுசரணையிலும் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையிலும் இடம்பெற்ற ஐ டி எம் ன் சி (IDMNC) கலாநிதி ஜனகன் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி பொரளை ரயில்வே கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்றது. இக் கிரிக்கெட் போட்டியில் இறுதி ஆட்டத்தில் வெற்றி ஈட்டிய அணியினருக்கு பணப்பரிசல்களையும், வெற்றி கேடயங்களையும் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஐ டி எம் ன் சி (IDMNC) சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும், ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி வி.ஜனகன் வழங்கி சிறப்பித்தார். ஜனனம் அறக்கட்ளையின் பணிப்பாளர் அதிவணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி சந்துரு பெர்ணான்டோவும் இதில் கலந்து கொண்டார். ஐ டி எம் ன் சி (IDMNC) சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் விளையாட்டு உத்தியோகத்தர் அசோக்குமாரின் நெறிப்படுத்தலில் இப்போட்டி நடத்தப்பட்டது.

# தாதி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்கு







**அக்கறைப்பற்று விஷேட நிருபர்**

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழி மூல அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான மூன்று நாள் வதிவிடப் பயிற்சிக் கருத்தரங்கு (26,27,28ஆம் திகதிகளில்) அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் ஐ.எல். ஜவாஹிர் தலைமையில் நடைபெற்றது.

வீதிப் போக்குவரத்துஉட்பட ஏனைய போக்குவரத்துகளில் ஏற்படும் அனர்த்தங்கள் மற்றும் இயற்கையின் சீற்றத்தால் நிலம், நீர், காற்றுகளினால் ஏற்படும் அனர்த்தங்களின் போது பாதிப்புக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு வேண்டிய தயார் நிலையில் தாதிய உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பில் பயிற்சிப் பட்டறையில் வளவாளர்களால் கருத்துரைகள் வழங்கப்பட்டன. மருத்துவ சேவை தாதியப் பணிப்பாளர் திருமதி எம்.பி.சி.சமன்மலியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் விசேட தர தாதிய உத்தியோகத்தர் பி.ரி.நௌபர் ஒருங்கிணைப்பில் வளவாளர்களாக அம்பாரை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.றியாஸ் உட்பட மற்றும் பல வைத்தியத்துறை சார் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# மரியதாஸின் "மலையகம் இங்கிருந்து எங்கே"










கலை ஒளி முத்தையாப்பிள்ளை அறக்கட்டளை வெளியிட்ட மரியதாஸ் எழுதிய "மலையகம் இங்கிருந்து எங்கே" என்ற நூலின் வெளியீட்டு விழா கவிஞர் சு. முரளிதரன் தலைமையில் அண்மையில் ஹட்டன் சமூக மன்றத்தில் நடைபெற்றது. நூலின் முதற்பிரதியை நூலின் ஆசிரியர் மரியதாஸிடமிருந்து சட்டத்தரணி ஏ. எஸ். குமார் பெற்றுக் கொண்டார். முன்னாள் பேராசிரியர் தனராஜ், எழுத்தாளர் மு. சிவலிங்கம், முன்னாள் அதிபர் எம். மெய்யநாதன், வீரகேசரி பிரதி ஆசிரியர் சிவலிங்கம் சிவகுமரன், சீடா நிறுவனத்தின் பணிப்பாளர் விஜயானந்தன், பரீட்சைத் திணைக்களத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் போல் அந்தணி ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (படமும் தகவலும் எச் எச் விக்ரமசிங்க)

# அல் அஷ்ரப் மஹா வித்தியாலய கிரிக்கெட் போட்டி









அல் அஷ்ரப் மஹா வித்தியாலயம் பழைய மாணவ சங்க ஏற்பாட்டில் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்று போட்டி பழைய மாணவர்களுக்கிடையில் பாடசாலை அதிபர் இர்ஷாட் (நளிமி) தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் செயலாளர் பாஹிம் உப தலைவர் நதீர், பொருளாளர் ரிமஸ், விளையாட்டு குழுத் தலைவர் ஷிபான், உஷாமா உட்பட உறுப்பினர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். இதில் அனுசரணையாளர்களான வத்தளை, மாபோளை முன்னாள் பிரதித் தலைவர் தாஹிர் ரிஷான், தொழில் அதிபரான ஆசியன் கார்கோ உரிமையாளர் ரிபாஸ் நபீல் மற்றும் தொழில் அதிபர் ரியாஸ் (SI Motors) கலந்து சிறப்பித்தனர்.

# பாரதம்
## சமகால நடப்புகள்

# பாகிஸ்தான் இராணுவ கமாண்டோக்கள் 600 பேர் காஷ்மீருக்குள் ஊடுருவல்!

### இந்திய இராணுவம் தீவிர தேடுதல் வேட்டை!

பாகிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த 600 கமாண்டோக்கள், காஷ்மீருக்குள் ஊடுருவி உள்ளதாக அம்மாநிலத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் அம்ஜத் அயூப் மிர்சா மற்றும் முன்னாள் டி.ஜி.பி ஷேஸ் பால் வைத் ஆகியோர் கூறியுள்ளனர். இதனையடுத்து தேடுதல் வேட்டையில் இராணுவத்தினர் ஈடுபட்டு உள்ளனர்.

இது தொடர்பாக அம்ஜத் அயுப் மிர்சா வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளதாவது:

பாகிஸ்தான் இராணுவத்தின் சிறப்புப் பயிற்சி பெற்ற குழு (எஸ்.எஸ்.ஜி) அதிகாரி அதில் ரெஹ்மானி, காஷ்மீரில் தாக்குதல் நடத்த திட்டமிட்டு வருகிறார். எஸ்.எஸ்.ஜி பட்டாலியனின் 600 கமாண்டோக்கள் குப்வாரா உள்ளிட்ட பகுதி வழியாக காஷ்மீருக்குள் ஊடுருவி உள்ளனர். உள்ளூர் ஜிகாதி குழுவினர், அவர்களுக்கு உதவுகின்றனர். பூஞ்ச், உரி, ரஜோரி ஆகிய பகுதிகளில் தலா 150 பேர், 3 குழுக்களாக பிரிந்து ஊடுருவி உள்ளனர்.

எஸ்.எஸ்.ஜி குழுவில் லெப்டினன்ட் காலினல் அந்தஸ்தில் உள்ள ஷாகித் சலீம் ஜன்ஜூவா, தற்போது காஷ்மீரில் ஊடுருவி உள்ளார். இவர், தாக்குதல் நடத்தும் திட்டங்களை தயாரித்து வருகிறார். இந்திய இராணுவத்தின் 15 கார்ப்ஸ் பிரிவினருடன் மோதுவதே இவர்களின் நோக்கமாக உள்ளது.



காஷ்மீருக்குள் ஊடுருவ எஸ்.எஸ்.ஜி குழுவின் இரண்டு பட்டாலியன்கள் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளது. சுமை தூக்கும் தொழிலாளிகள் மற்றும் சாமானிய மக்கள் போல் ஊடுருவி உள்ள இவர்கள், மக்களுடன் கலந்து மறைந்துள்ளனர். தாக்குதலுக்கு தயாராகி வருகின்றனர். இவ்வாறு அந்த பதிவில் கூறியுள்ளார். அம்மாநில முன்னாள் டி.ஜி.பி ஷேஸ் பால் வைத்தும் சமூக வலைதளத்தில் வெளியிட்ட வீடியோவில் இந்த கருத்தை தெரிவித்து உள்ளார்.

இதனையடுத்து காஷ்மீரில், இந்திய இராணுவத்தினர் கிராமம், கிராமமாக தீவிரமாக கமாண்டோக்களை தேடி வருகின்றனர். இந்த பணியை பிரதமர் அலுவலகம் நேரடியாக கண்காணித்து வருகிறது. தேடும் பணி குறித்து தேசிய பாதுகாப்பு ஆலோசகர், இந்திய இராணுவ தளபதிக்கு அறிக்கை அளித்து வருகின்றனர். பயங்கரவாதிகள் ஊடுருவி உள்ளதாக கூறப்படும் பகுதிகளில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு உள்ளனர்.

# கிறிஸ்தவ மதபோதகரின் உடலை அடக்கம் செய்த தமிழர், முஸ்லிம்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆதரவற்ற கிறிஸ்தவ மத போதகரின் உடலை இந்து, முஸ்லிம்கள் இணைந்து அடக்கம் செய்திருக்கிறார்கள். மனிதநேயத்துக்கு சிறந்த எடுத்துக்கட்டாக இந்த சம்பவத்தை அப்பகுதி மக்கள் போற்றுகிறார்கள்.

இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமியர்கள் மிகவும் ஒற்றுமையாக வாழும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தை பொறுத்தவரை இந்துக்களுக்கு அடுத்தபடியாக கிறிஸ்தவர்கள் கணிசமான அளவு இருக்கிறார்கள். இஸ்லாமியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மிக ஒற்றுமையாக இருக்கிறார்கள். இங்கு மனிதநேயத்திற்கு சிறந்த உதாரணம் என்கிற அளவில் ஒரு நெகிழ்ச்சியான நிகழ்வு நடந்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் பகுதியைச் சேர்ந்தவர் இயேசு ரத்தினம் (வயது 90). இவர் தென்காசி பகுதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்தில் மத போதகராக இருந்து வந்தார். இயேசு ரத்தினம் கடந்த 30 ஆண்டுகளாக தனியாக வாழ்ந்து வந்துள்ளார். இந்த நிலையில் வயது முதிர்வு காரணமாக இயேசு ரத்தினம் இறந்து விட்டார். இதுகுறித்து அவருடைய குடும்பத்தினருக்கு தகவல் தெரிவித்தும் யாரும் அவரை பார்க்கவே வரவில்லை. இதனை அறிந்த சொக்கம்பட்டி பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் உடையார்சாமி, திரிகூடபுரம் பஞ்சாயத்து துணைத்தலைவர் செய்யது மீரான் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த இந்து, முஸ்லிம்களும் சென்று, கிறிஸ்தவ மதச்சடங்கின்படி இயேசு ரத்தினம் உடலை அடக்கம் செய்தனர்.

# சினிமா பிரபலம் ரவீந்தர் வீட்டில் அமுலாக்கத்துறை சோதனை



பிரபல சினிமா தயாரிப்பாளரான ரவீந்தர் வீட்டில் நேற்றுக் காலை முதல் அமுலாக்கத் துறையினர் சோதனை நடத்தினர். சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பாக இந்த சோதனை நடந்தது.

சென்னை அசோக் நகர் 19 ஆவது அவென்யூ பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருபவர் பிரபல சினிமா தயாரிப்பாளர் ரவீந்தர் சந்திரசேகரன். லிப்ரா புரொடக்ஷன் என்ற பெயரில் சினிமா தயாரிப்பு நிறுவனம் நடத்தி வரும் இவர், கடந்த 2020 ஆம் ஆண்டு தொழிலதிபர் பாலாஜி என்பவரிடம் நகராட்சி திடக்கழிவுகளை ஆற்றலாக மாற்றும் புதிய சுற்றுச்சூழல் திட்டத்தில் முதலீடு செய்யுமாறு கூறி 16 கோடி ரூபாய் பணம் பெற்று மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

இதையடுத்து, பாதிக்கப்பட்ட தொழிலதிபர் பாலாஜி இது குறித்து நடவடிக்கை எடுக்கக்கோரி சென்னை மத்திய குற்றப்பிரிவு பொலிஸில் சினிமா தயாரிப்பாளர் ரவீந்தர் சந்திரசேகரன் மீது புகார் அளித்தார். புகாரின் பேரில் மத்திய குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி 16 கோடி ரூபாய் மோசடியில் ஈடுபட்டதாக கூறி ரவீந்தர் சந்திரசேகரனை கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் கைது செய்து சிறையில் அடைத்தனர். பின்னர் அவர் பிணையில் வெளியே வந்தார்.

இந்நிலையில், இவ்வழக்கில் சட்டவிரோத பணப் பரிமாற்றம் நடந்ததாக எழுந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் நேற்று காலை முதல் அமுலாக்கத்துறை அதிகாரிகள் அசோக் நகரில் உள்ள சினிமா தயாரிப்பாளர் ரவீந்தர் சந்திரசேகரன் வீட்டில் சோதனை மேற்கொண்டனர்.

# கேரள மாநிலம் முழுவதும் இருநாள் துக்கம் அனுஷ்டிப்பு

### 80 இற்கு மேற்பட்டோர் பலி!



தொடர் கனமழையால் கேரள மாநிலம் வயநாடு மாவட்டம் முண்டக்கை என்ற இடத்தில் நேற்று அதிகாலை 1 மணியளவில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது.

அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை 4 மணியளவில் சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து சுமார் 2 கி.மீ தொலைவில் சூரல் மலை என்ற இடத்தில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்த இரு நிலச்சரிவில் சுமார் 500 வீடுகள் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிக்கி உள்ளதாகத் தகவல் வெளியாகி இருந்தது. இந்த நிலச்சரிவில் சிக்கி குழந்தைகள் உட்பட 80 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

மேலும் மண் சரிவில் சிக்கியுள்ளவர்களை ஹெலி கொப்டர் மூலம் மீட்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 100 இற்கும் மேற்பட்டோர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் சுமார் 80 பேர் பேர் உயிரிழந்ததையடுத்து நேற்றும் (ஜூலை 30), இன்றும் (ஜூலை 31) கேரள அரசு சார்பில் அதிகாரபூர்வமாக துக்கம் அனுசரிக்கப்படுகிறது. இந்த இருநாட்களில் மாநிலம் முழுவதும் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படுகிறது.

# கிணற்றை ஆழப்படுத்திய மூவர் பரிதாப மரணம்!

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூரில் கிணறு வெட்டும் போது கயிறு அறுந்து விழுந்து 3 பேர் பலியாகியுள்ளனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அவர்களுடைய உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூரில் அருங்குறிக்கை என்ற கிராமத்தில் 100 அடி கிணற்றை ஆழப்படுத்தும் பணிகள் நேற்றுமுன்தினம் இரவு நடந்தன. இதற்காக பொக்லைன் இயந்திரத்தில் கயிறு கட்டி தணிகாசலம் (48), ஹரி கிருஷ்ணன் (40), முருகன் (38) ஆகிய 3 பேர் இறங்கியுள்ளனர்.

அப்போது பொக்லைன் இயந்திரத்தில் கட்டப்பட்டிருந்த ரோப் அறுந்தது. இதில் அந்த 3 பேரும் கிணற்றில் விழுந்தனர். அப்போது அவர்களுக்கு கை,கால்களில் முறிவு ஏற்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் அந்த மூவரையும் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்கள் உயிரிழ்ந்தனர்

# நடிகர் சாருஹாசன் மருத்துவமனையில்



நடிகர் கமல்ஹாசனின் அண்ணனும் நடிகருமான சாருஹாசன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நடிகர் சாருஹாசன், சந்திரஹாசன், கமல்ஹாசன் மூவருமே அண்ணன் தம்பிகள் தான். மூவரும் சினிமாவில் பல ஆண்டுகளாக தங்களுடைய திறமைகளை காட்டிக்கொண்டிருக்கின்றனர்.

கமல்ஹாசனை சிறுவயதிலிருந்தே சாருஹாசனும் அவருடைய மனைவியும்தான் வளர்த்து வந்தார்கள். கமல்ஹாசன் பிறந்த பிறகு சாருஹாசனின் மனைவி கமல்ஹாசனை வளர்த்து வந்ததால் அவரை கமல்ஹாசன் அம்மா என்று தான் கூப்பிடுவாராம். தன்னுடைய அண்ணனை அப்பா என்று கூப்பிடுவாராம். சாருஹாசன் வெள்ளித்திரை சின்னத்திரை என்று நடித்து இருந்தாலும் ஒரு வழக்கறிஞராகவும் இருந்திருக்கிறார். சமீபத்தில் சாருக்ஹாசன் சினிமாவை விட்டு விலகி இருக்கும் நிலையில் திடீரென்று உடல்நிலை பாதிக்கப்பட்டு இருக்கிறது. 96 வயதாகும் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அப்போது சாருஹாசனின் மகளான சுஹாசினி அவரை மருத்துவமனையில் சென்று பார்த்து தன்னுடைய தந்தையை கட்டி அணைத்தபடி தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில் புகைப்படம் ஒன்றை வெளியிட்டு இருக்கிறார்.

# இலங்கை மாணவர் கல்வி நிதியம் அம்பாறை மாவட்ட மாணவருக்கு உதவி









இலங்கையில் முன்னர் நீடித்த போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் வறிய தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு கடந்த 36 வருடங்களாக உதவி வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் அனுசரணையில் இந்த வாரம் அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு கல்வி நிதியத்தின் அம்பாறை மாவட்ட தொடர்பாளர் அமைப்பான பாண்டிருப்பு மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் ஏற்பாட்டில் அதன் அலுவலகத்தில் தலைவர் ந. கமலநாதன்( ஓய்வு நிலை அதிபர் ) தலைமையில் இருதினங்கள் நடைபெற்றது. இந்நிகழ்வில் உதவி பெறும் மாணவர்களும் அவர்களின் தாய்மாரும் நிறுவகத்தின் செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். ஒவ்வொரு மாணவருக்கும் ஆறு மாதங்களுக்கான (2024 ஜூலை முதல் டிசம்பர் வரைக்குமானது) நிதிக்கொடுப்பனவாக ரூபா 24,000 வழங்கப்பட்டது. அவுஸ்திரேலியாவிலிருந்து கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தில் இணைந்துள்ள அன்பர்களின் ஆதரவினால், இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வாரம் அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பில் நடந்த இந்நிகழ்வில் மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் உப தலைவர் பி வசந்தன், பொருளாளர் த. ரவிச்சந்திரன் (ஆசிரிய ஆலோசகர்), உபசெயலாளர் வே.நகுலேஸ்வரன் (ஆசிரியர்), செயற்குழு உறுப்பினர்களான செல்வி. ஞா. தர்மிகா, சி. புனிதன் (ஓய்வுநிலை அதிபர் ), க. யனார்த்தன் (முகாமைத்துவ உத்தியோகத்தர்) ஆகியோர் மாணவர்களுக்கு நிதியுதவிகளை வழங்கி வைத்தனர். அத்துடன் அவுஸ்திரேலியா இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உறுப்பினர் திருமதி வள்ளி ஸ்ரீகாந்தா அனுப்பிவைத்த மாணவர்களின் தாய்மாருக்கான உடுபுடவைகளும் வழங்கப்பட்டன.

தமது பிரதேச மாணவர்களின் கல்வி விருத்தியில் அக்கறை கொண்டு தொடர்ந்து உதவி வரும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்திற்கும் அதன் நிருவாகிகளுக்கும் பாண்டிருப்பு மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவர் ந.கமலநாதன் நிகழ்ச்சியின் இறுதியில் நன்றி தெரிவித்தார். வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கம்பஹா, மலையகத்தில் நுவரேலியா மாவட்ட மாணவர்களுக்கும் இந்த ஆண்டின் இறுதி ஆறுமாதங்களுக்கான மாணவர் நிதிக்கொடுப்பனவு வழங்கப்படும்.

லெ. முருகபூபதி

# விசேட தேவை உடையோரின் அர்ப்பணிப்பை எமது சமூகத்தில் உறுதி செய்வது அவசியம்



சமூகம் என்ற ஒரு பாரிய அமைப்பில் ஒருவர் தனித்து இயங்க முடியாது. சமூக உறுப்பினர் என்ற வகையில் பல காரணங்களின் நிமித்தம் ஏனையவர்களுடன் தொடர்புகளை பேணும் பல சந்தர்ப்பங்களை நாம் அன்றாடம் சந்திக்கின்றோம். அந்த வகையில் ஒரு நபர் தனது சூழலுக்கு ஏற்ப இசைவாக்கம் அடைவது சமூகமயமாக்கலாகும். சமூகமயமாக்கல் ஒரு தொடர்ச்சியான செயன்முறையாகும். சமூகமயமாக்கலானது சகலர் மத்தியிலும் சிறப்பான வகையில் இடம்பெறுதல் வேண்டும். அதுவே தனிநபரை சமூகத்தின் அங்கமாக்குகின்றது. விசேட தேவையுடையவர்கள் என்று கூறுகின்ற போது உடல் சார் குறைபாடு, உள ரீதியான குறைபாடு, அறிவுசார் குறைபாடு என்று பல காணப்படுகின்றன. உதாரணமாக பார்வைக் குறைபாடு உடையவர்கள்,கேட்டல் குறைபாடு உடையவர்கள், ஓட்டிசம் குறைபாடு உடையவர்கள் (ஒரு நபர் பார்ப்பதையோ, கேட்பதையோ, வேறு உணர்வுகள் பற்றி யதார்த்த பூர்வமாக விளங்கிக் கொள்ள முடியாத வகையில் நிலவும் குறைபாடு), நடத்தை சார் குறைபாடு உடையவர்கள், பேச்சு மற்றும் மொழிசார் குறைபாடுடையோர், கற்றல் குறைபாடு உடையோர், மீத்திறன் உடையோர், அறிவுசார் குறைபாடு உடையோர் என பல உள்ளடங்குகின்றன. விசேட தேவையுடையவர்களை சமூகமயமாக்குவதில் சமூகமயமாக்கல் முகவர்கள் பிரதான பங்கு வகிக்கின்றனர். சமூகமயமாக்கல் முகவர்களில் முதன்மை முகவர்களாக குடும்பம்,பாடசாலை, சம வயது குழுக்களும் துணைநிலை முகவர்களாக சமய ஸ்தாபனம், ஊடகங்கள், சமூக அமைப்புக்கள், தொழில் நிறுவனங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. முதலில் குடும்பம் விசேட தேவையுடையவர்களுக்கு பாதுகாப்பான ஒரு சூழலை உருவாக்குதல் வேண்டும். விசேட தேவை உடையவர்களுக்கும் சமமான அங்கத்துவத்தை குடும்பத்தில் வழங்குதல் வேண்டும். அவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி அவர்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டியது குடும்ப அங்கத்தவர்களின் பொறுப்பாகும். வீட்டில் நடைபெறுகின்ற வைபவங்களில் அவர்களின் பங்களிப்பை உறுதி செய்தல், வெளியிடங்களுக்கு சுற்றுலா அழைத்து செல்லுதல், அவர்களின் வாய்ப்புகளை இனங்கண்டு உரிய வகையில் பயன்படுத்தல் என சமூகத்துடன் தொடர்பை ஏற்படுத்தும் வகையிலான சகல நிகழ்வுகளிலும் அவர்களின் பங்களிப்பை குடும்பத்தில் உள்ளவர்களே உறுதிப்படுத்தல் வேண்டும்.

சமூகத்தின் மற்றுமொரு பாரிய அமைப்பாகவும் சமூகமயமாக்கல் முகவராகவும் செயற்படுவது பாடசாலை ஆகும். விசேட தேவை உடைய மாணவர்களுக்கு ஆரம்பத்தில் கல்வி தொடர்பான பல சிக்கல் நிலைகள் காணப்பட்ட போதிலும் தற்போது அனைவருக்கும் கல்வி என்ற பிரகடனத்திற்கு அமைவாக அனைவருக்கும் சிறந்த கல்வி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் விசேட தேவை உடைய மாணவர்கள் விசேட கல்வி அலகுகள், மற்றும் உள்ளடங்கல் கல்வி போன்ற முறைகளில் தமது கல்வியை பெற்றுக் கொள்கின்றனர் .

மேலும் இங்கு தமது சம வயது குழுக்களுடன் சமூக தொடர்புகளை பேணுவதற்கான சந்தர்ப்பமானது அதிகமாக காணப்படுகின்றது. சமூகமயமாக்கல் முகவர்களில் சம வயது குழுக்கள் என்பது முதன்மையானதாக காணப்படும் மற்றுமொரு முகவராகும். விசேட தேவை கொண்ட மாணவர்களுக்கு பல உதவிகளை சம வயது குழுக்கள் மேற்கொள்வதை நாம் காணலாம். திறன் வெளிப்பாட்டுகளுக்கு உதவுதல் , ஆளுமை விருத்தி , வெளி சமூகத்துடன் தொடர்புகளை மேற்கொள்ள உதவல், கற்றல் செயற்பாடுகளில் உதவுதல் போன்ற பலவற்றை கூறலாம்.

அடுத்து ஊடகங்கள் சமூகமயமாக்கல் முகவர்களில் உள்ளடங்குகின்றன. எழுத்து ஊடகமான பத்திரிகையில் தொடங்கி தொலைக்காட்சி, வானொலி மற்றும் இன்றைய சமூக வலைத்தளங்கள் வரை அவற்றின் பங்களிப்பை வழங்குவதை நாம் காணலாம். தகவல்களை அறிந்து கொள்வதற்காகவும், ஏனையவர்களுடன் தொடர்புகளை மேற்கொள்வதற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் என பல நோக்கங்களில் இன்று ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை சமூகமயமாக்கலை மேற்கொண்டு வருகின்றன. சமய ஸ்தாபனங்கள் தொடர்பில் நோக்குவமாயின் அங்கு வழங்கப்படும் பல்வேறு கருத்துக்கள், பழக்கவழக்கங்கள் அவர்களிடத்தில் சிறந்த ஒரு நம்பிக்கை நிறைந்த வாழ்க்கை சூழலை ஏற்படுத்த உதவுவதுடன் சமூகத்தில் உள்ளவர்களுடன் விசேட தேவை உடையவர்களையும் இணைக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளுகின்றது. விசேட தேவை உடையவர்கள் உடல், உள ரீதியில் சோர்வடைந்து காணப்படுகின்ற போது அவர்களுக்கு உற்சாகமும், பல புதிய முயற்சிகளுக்கு உந்துதல் அளிப்பதாகவும் பல்வேறு கருத்துக்கள், விடயங்கள் சமய ஸ்தாபனங்களில் வழங்கப்படுகின்றன. இதை அவர்களின் வாழ்வில் சிறந்ததொரு மாற்றத்தை உருவாக்கும்.

மேற்கூறப்பட்ட சமூகமயமாக்கல் முகவர்கள் மூலம் விசேட தேவை உடையவர்களின் வாழ்வில் பல மாற்றமும் முன்னேற்றமும் ஏற்படுகின்றது. குறித்த சமூகமயமாக்கல் முகவர்களின் செயற்பாடுகளின் மூலம் சமூகத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், தமது நடத்தைகளை எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும், பிறருடன் சிறந்த தொடர்புகளை பேணுதல், இணைந்து செயல்படுதல், தமது கருத்துக்களை சரியாக முன்வைத்தலும் ஏனையவர்களின் கருத்துகளுக்கு செவி சாய்த்தலும், ஒத்துழைப்பு, பகிர்ந்து கொள்ளுதல் மரியாதையுடன் செயல்படுதல், ஏனையவர்களுடன் பழகும் விதம், நேர் மனப்பான்மைகள், ஆளுமை விருத்தி, பலமான சமூக உறவுகளை வளர்த்தல் போன்ற பலதரப்பட்ட விடயங்களை வளர்த்துக் கொள்ள முடிகின்றது.

குமாரகுரு மோனிஷா,
கல்வியியல் சிறப்புகற்கை மாணவி,
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்

## நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**மேற்கு – வடக்கு பிராந்தியத்திற்காக ON-GRID சூரிய அமைப்புகள் மற்றும் துணைப் பொருட்களின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல், சோதனை மற்றும் செயற்படவைத்தல்**

**ஒப்பந்த இல.: RSC(WN)/M&E/SOLAR/2024/01**

1. 2024.08.28 ஆம் திகதி 10.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும் வரை மேற்கு - வடக்கு பிராந்தியத்திற்காக ON-GRID சூரிய அமைப்புகள் மற்றும் துணைப்பொருட்களின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல், சோதனை மற்றும் செயற்படவைத்தலுக்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB) சார்பில் இலங்கை, இரத்மலானை, காலி வீதி, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB), திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.
2. பொருத்தமான வெட் உடன் மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000.00 ரூபாவை செலுத்தி 2024.08.27 ஆம் திகதி காலி வீதி, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB), உதவி பொது முகாமையாளரின் (கேள்வி மற்றும் ஒப்பந்தங்கள்) அலுவலகத்தில் கிடைக்கப்பெறும் ஆவணங்களில் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. இலங்கை, இரத்மலானை, காலி வீதி, NWSDB, உதவி பொது முகாமையாளரின் (கேள்வி மற்றும் ஒப்பந்தங்கள்) அலுவலகத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. இலங்கை, இரத்மலானை, காலி வீதி, NWSDB, உதவி பொது முகாமையாளருக்கு (கேள்வி மற்றும் ஒப்பந்தங்கள்) வர்த்தக முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
5. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையில் (SLSEA) Solar PV சேவை வழங்குநர் ஒருவராக பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதோடு வீட்டு நிறுவுதல்கள் தவிர்த்து கடந்த 5 ஆண்டுகளுக்குள் இதனை ஒத்த மற்றும் சிக்கற்பாட்டுக்கு நிகரான வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல், சோதனை மற்றும் செயற்படவைத்தலில் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தில் பணியாற்றிய அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
6. மாற்று விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.
7. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு கேள்வி மற்றும் ஒப்பந்தப் பிரிவு, உதவி பொது முகாமையாளர் (கேள்வி மற்றும் ஒப்பந்தங்கள்), தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB), காலி வீதி, இரத்மலானை, இலங்கை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. அனைத்து விலைமனுக்களும் 1,200,000.00 இ. ரூபாவின் விலைமனு பிணை ஒன்றை கொண்டதாகவும் அந்த விலைமனு பிணை 2024.12.26 ஆம் திகதி வரை செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் இலங்கை, இரத்மலானை, காலி வீதி, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB) உதவி பொது முகாமையாளருக்கு (கேள்வி மற்றும் ஒப்பந்தங்கள்), கேள்வி மற்றும் ஒப்பந்தப் பிரிவின் அலுவலகத்தில் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.
10. மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் +94-11-2605328 அல்லது 94-11-2638999 நீடிப்பு 1750 அல்லது தொலைநகல் இலக்கம் +94 -11-2635885 இல் இலங்கை, இரத்மலானை, காலி வீதி, NWSDB, உதவி பொது முகாமையாளரை (கேள்வி மற்றும் ஒப்பந்தங்கள்) தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

## நிலோனா லொஜிஸ்டிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

**2007 ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 59(2) பிரிவிற்கமைய கம்பெனியொன்றின் கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு தொடர்பான பகிரங்க அறிவித்தல்**

| | | |
|---|---|---|
| **கம்பெனியின் பெயர்** | : | நிலோனா லொஜிஸ்டிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் |
| **கம்பெனியின் பதிவு இலக்கம்** | : | பீவீ 00207201 |
| **கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட விலாசம்** | : | ஒருவல, அதுருகிரிய |
| **குறைப்பின் முன் கூறப்பட்ட மூலதனம்** | : | ரூ. 281,527,000.00 |
| **குறைப்பின் பின் கூறப்பட்ட மூலதனம்** | : | ரூ. 179,127,000.00 |
| **குறைக்கப்பட்ட பெறுமானம்** | : | ரூ: 102,400,000.00 |

**சரவணன் நீலகண்டன்**
**பணிப்பாளர்**
**எஸ் என் லோ கார்ப்பரேட் செக்ரட்டரீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்**
**(கம்பெனியின் கம்பெனிச் செயலாளர்கள்)**
**எச் கியூ கொழும்பு (நிலை 4).**
**இல. 464 எ.டி.பி. ஜயா மாவத்தை**
**கொழும்பு - 10**

## நிலோனா லங்கா (பிரைவேட்) லிமிட்டெட்

**2007 ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 59(2) பிரிவிற்கமைய கம்பெனியொன்றின் கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு தொடர்பான பகிரங்க அறிவித்தல்**

| | | |
|---|---|---|
| **கம்பெனியின் பெயர்** | : | நிலோனா லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் |
| **கம்பெனியின் பதிவு இலக்கம்** | : | பீவீ 14543 |
| **கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட விலாசம்** | : | ஒருவல, அதுருகிரிய |
| **குறைப்பின் முன் கூறப்பட்ட மூலதனம்** | : | ரூ. 733,150,020.00 |
| **குறைப்பின் பின் கூறப்பட்ட மூலதனம்** | : | ரூ. 619,750,020.00 |
| **குறைக்கப்பட்ட பெறுமானம்** | : | ரூ: 113,400,000.00 |

**சரவணன் நீலகண்டன்**
**பணிப்பாளர்**
**எஸ் என் லோ கார்ப்பரேட் செக்ரட்டரீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்**
**(கம்பெனியின் கம்பெனிச் செயலாளர்கள்)**
**எச் கியூ கொழும்பு (நிலை 4).**
**இல. 464 எ.டி.பி. ஜயா மாவத்தை**
**கொழும்பு - 10**

## மீட்கப்படாத அடகு தங்க ஆபரணங்களை ஏலத்தில் விற்பனை செய்தல்

வ/ப வடமேல் கிராமிய வங்கி சங்கத்தின் அடகு முகவர்களாக செயற்படும்

**வ/ப பிங்கிரிய ப.நோ.கூ. சங்கத்தின்**

பின்வரும் கிராமிய வங்கிக் கிளைகளில் 2022-12-31ஆம் திகதி முதல் 2024-09-07ஆம் மற்றும் 08ஆம் திகதிகளில் மு.ப. 9.00 முதல் போவத்தயில் அமைந்துள்ள சங்கத்தின் பிரதான அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | போவத்த | 7. | படிவெல |
| 2. | நாகால்லாகொட | 8. | பிங்கிரிய |
| 3. | வீரபொக்குண | 9. | வெல்லராவ |
| 4. | திசோகம | 10. | மாத்தலேம்புவ |
| 5. | ஹல்மில்லேவ | 11. | தாரண |
| 6. | ஹொரகஸ்அகார | 12. | கடிகமுவ |

**இப்படிக்கு,**
**பொது முகாமையாளர்.**

**வ/ப பிங்கிரிய ப.நோ.கூ. சங்கம்,**
**போவத்த - பிங்கிரிய.**
**தொலைபேசி இல. 032-4928856 / 032-4928857**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை – சப்ரகமுவ**

## கேள்வி கோரல்

| ஒப்பந்த இலக்கம் | நிர்மாண ஒப்பந்தம் | கேள்விப்பிணை முறி (ரூபா) |
|---|---|---|
| RDA/SAB/ PD/TEN/ CON/2024/10 | அவிசாவளை ஹட்டன் நுவரெலியா வீதி 23 கி.மீ மற்றும் 33 கி.மீ. இற்கிடையில் 775 மீட்டர் Section Overlay செய்தல் | 238,000.00 |

பிரதம பொறியியலாளர் கேகாலை அலுவலகத்திற்குச் சொந்தமான மேற்படி வீதியில் பராமரிப்பிற்காக தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024 ஜூலை 31 முதல் 2024 ஒகஸ்ட் 14 மாலை 3.00 வரை கீழேயுள்ள முகவரியில் கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் கீழேயுள்ள தொ.பே. இலக்கத்தில் அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் www.rda.gov.lk இணையதளத்திற்கு பிரவேசித்து மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாகாணப் பணிப்பாளர் பணிமனை (சப்ரகமுவ)**
**வீதி அபவிருத்தி அதிகாரசபை**
**இரத்தினபுரி : தொ.பே. 045 - 2222608**




Repeat Your ad For Better Offers

**பகுதி 1 - அழைப்புக் கடிதம்**

**இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு**
**துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு**

**இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை**
**முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள்**

## தலைமன்னார் துறைமுக அபிவிருத்திக்கு ஒரு சாத்தியமான ஆய்வை மேற்கொள்வதற்கான ஆலோசனை சேவை

1. இலங்கை அரசாங்கம் தலைமன்னார் துறைமுகத்தை அதன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் சிறிய கப்பற் சரக்கு பொதிகளுக்கான பயணிகள் மற்றும் கப்பற் சரக்கு செயற்பாடுகளை எளிதாக்கும் வகையில் அபிவிருத்தி செய்யத் தீர்மானித்துள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையானது உத்தேச அபிவிருத்திக்காக உரிய அதிகாரிகளிடம் இருந்து உரிய அனுமதிகளைப் பெறுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இருப்பினும், குறுகியகால மற்றும் நீண்டகால அடிப்படையில் வளர்ச்சியின் தொழில்நுட்ப, நிதி மற்றும் பொருளாதார சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவது அவசியமாகும். இதன் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவர், தலைமன்னார் துறைமுக அபிவிருத்திக்காக ஒரு சாத்தியமான ஆய்வை மேற்கொள்வதற்காக புகழ்பெற்ற ஆலோசனை நிறுவனங்கள் அல்லது கூட்டமைப்பிலிருந்து முன்மொழிவுகளை இத்தால் அழைக்கின்றார்.
2. ஆர்வமுள்ள தரப்பினர் 2024 ஆகஸ்ட் 01ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் பின்வரும் முகவரியில் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். ஆலோசகர்கள் மேலதிக விபரங்கள் மற்றும் எழுத்துமூலமான தெளிவுபடுத்தல்களை பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.
   பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி),

   **திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு,**
   **இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை,**
   **45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு -1, இலங்கை.**
   **தொலைபேசி இல. +94(0) 112325575**
   **தொலைநகல் இல. +94(0) 112323055**
   **மின்னஞ்சல் முகவரி: cepd@slpa.lk**
3. 2024 ஆகஸ்ட் 01ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 2.00 மணிவரையில் மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி மற்றும் பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி) அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆலோசகருக்கான அறிவுரைகள், ஒப்பந்த நிபந்தனைகள், விதிமுறைக் குறிப்புகள், தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் நிதியியல் முன்மொழிவுகளுக்கான நிலையான படிவங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஆகஸ்ட் 09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சில் இடம்பெறும்.
5. வளமுள்ள ஆலோசகர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் நிதியியல் முன்மொழிவுகளின் பிரகாரம் தரம் மற்றும் செலவு அடிப்படையிலான தேர்வு (QCBS) முறையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுகளை ''தலைமன்னார் துறைமுக அபிவிருத்திக்காக ஒரு சாத்தியமான ஆய்வை மேற்கொள்வதற்காக ஆலோசனை சேவைகளுக்காக முன்மொழிவுகளை அழைத்தல்'' எனக் குறிப்பிட்டு 2024 ஆகஸ்ட் 30ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

   **தலைவர்,**
   **அமைச்சு ஆலோசனை பெறுகைக்குழு,**
   **துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
   **இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01.**

   கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள ஆலோசகர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் தொழில்நுட்ப முன்மொழிவுகளைக் கொண்ட கடிதவுறை உடனடியாகத் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும்.
7. ஆலோசகர்களுக்கு ஏற்படும் முன்மொழிவுகளைத் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பில் ஏற்படும் செலவுகள் மற்றும் கிரயம் மற்றும் தள விஜயம் தொடர்பான செலவுகள் மற்றும் கிரயம் தொடர்பான எவ்வித செலவுகளுக்கும் இலங்கைத் துறைமுக அதிகார சபை பொறுப்புகூறாது.

**தலைவர்,**
**அமைச்சு ஆலோசனை பெறுகைக்குழு (CPCM)**



# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் – 2024–07–31

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| பொது நிதித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் இலத்திரனியல் அரச பெறுகை **(e-GP)** முறைமையின் மூலம் (10 மில்லியன் ரூபா வரை) பொருட்களுக்கான கேள்விகளை அழைக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான தகுதித் தேவைப்பாடாக முறைமையில் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு **011 -2635886/071-1525234** எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக எமது அதிகாரியை தயவுசெய்து தொடர்புகொள்ளவும். | | | | | | | |
| **சிவில் கேள்விகள்** | | | | | | | |
| 01 | தெஹிவளை நீர் வழங்கல் திட்டம், தெஹிவளை முகாமையாளர் பிரதேசத்தில் AC குழாய்களை பிரதியீடு செய்வதற்காக DI குழாய்கள், பொருத்தல்கள், வால்வுகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் மற்றும் HDPE குழாய்கள், பொருத்தல்கள் மற்றும் விசேடங்களைப் பதித்தல்<br>ஒப்பந்த இல: **RSC/W-S/P&D/C/LAY(05)/DEHI/ RW/ 2024/10** | 20,000/- +VAT | ரூபா 758,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C4 மற்றும் அதற்கு மேறப்பட்ட தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 75.80 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328, Fax: 011-2635885 | 22/08/2024 மு.ப. 10.00 |
| 02 | இரத்தினபுரி நீர் வழங்கல் திட்டம் - குருவிட்ட சிறிய நகர நீர் வழங்கல் திட்டப் பிரதேசத்தில் குழாய்களைப் பதிக்கும் மிகுதி வேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC(SAB)/P&D/CIVIL/REH/RAT/2024/17** | 12,500/- +VAT | ரூபா 718,500/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C4 அல்லது C5 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 47.9 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328 Fax: 011-2635885 | 23/08/2024 மு.ப. 10.00 |
| 03 | பொலன்னறுவை நீர் வழங்கல் திட்டம் - WBQ 47 இலக்க உத்தியோகபூர்வ விடுதியின் புதுப்பித்தல் வேலைகள்<br>ஒப்பந்த இல: **RH/NC/DGM/REN/WBQ-47/POL/2024/055** | 6,000/- +VAT | ரூபா 71,200/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 5.306 மில்லியன் | பிஒநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அனுராதபுரம்.<br>Tele: 0252222296/ 0252235339<br>Fax: 0252225609<br>Email : tenderrscnc@gmail.com | 22/08/2024 பி.ப. 2.00 |
| 04 | மாத்தளை நீர் வழங்கல் திட்டம் - கந்தேகெதர வலயத்தில் வருமானமற்ற நீரைக் குறைப்பதற்கான வாடகைச் சேவைகள்<br>ஒப்பந்த இல: **RSC-C/MA/CIVIL/O&M/MATALE/2024/151** | 12,500/- +VAT | ரூபா 155,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 15.4 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068 Fax: 081-2388027 | 14/08/2024 பி.ப. 2.00 |
| 05 | அம்பன்கங்க நீர் வழங்கல் திட்டத்தில் வருமானமற்ற நீரைக் குறைப்பதற்கான வாடகைச் சேவைகள்<br>ஒப்பந்த இல: **RSC-C/CN/SERVICE/O&M/ AMBANGANGA/2024/130** | 12,500/- +VAT | ரூபா 115,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 11.47 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068? Fax: 081-2388027 | 14/08/2024 பி.ப. 2.00 |
| 06 | கஹவத்த நீர் வழங்கல் திட்டம் - கஹவத்த நகரத்தில் அமைந்துள்ள அதிகாரிகளின் விடுதிகளைப் புதுப்பிக்கும் வேலைகள் மற்றும் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல்.<br>ஒப்பந்த இல: **RSC(SAB)/P&D/CIVIL/REH/ KAHAWATTA/2024/04R** | 12,500/- +VAT | ரூபா 157,292/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 10.5 மில்லியன் | பிஒநி (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 14/08/2024 பி.ப. 2.00 |
| 07 | மாகந்துர நீர் வழங்கல் திட்ட பம்பி இல்லத்தின் விஸ்தரிப்பு வேலைகள்<br>ஒப்பந்த இல: **RSCS/P&C/W/RH/3133/2024A** | 6,000/- +VAT | ரூபா 53,500/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 5.3 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax: 0412221329 | 14/08/2024 பி.ப. 2.00 |
| 08 | வெள்ளவாய நீர் வழங்கல் திட்டத்தில் தற்போதுள்ள நிலையப் பொறுப்பதிகாரி அலுவலகத்தின் புனரமைப்பு வேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ WELLAWAYA/2024/81** | 6,000/- +VAT | ரூபா 103,500/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 6.9 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 14/08/2024 பி.ப. 2.00 |
| 09 | புத்தள நீர் வழங்கல் திட்டம் - கம்உதாவ தாங்கிக்கு கூரையை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/BUTHTHALA/2024/123** | 4,000/- +VAT | ரூபா 50,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு | 3.3 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 14/08/2024 பி.ப. 2.00 |
| 10 | மொனராகலை நீர் வழங்கல் திட்டம் - மொனராகலை பிராந்தியத்தில் Ferrule துண்டித்தல் மற்றும் வாடிக்கையாளர் மீற்றர் அமைவிடங்களை மாற்றுதல்.<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/NRW/ MONARAGALA/2024/128** | 6,000/- +VAT | ரூபா 70,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 6.9 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 14/08/2024 பி.ப. 2.00 |
| 11 | பதுளை நீர் வழங்கல் திட்டம் - PVC Coated Chain Link வேலியை வழங்குதல் மற்றும் பொருத்துதல்.<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ BADULLA/2024/51** | 6,000/- +VAT | ரூபா 107,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 7.2 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 14/08/2024 பி.ப. 2.00 |
| 12 | மகியங்கனை நீர் வழங்கல் திட்டம் - ஆந்தாஉல்பொத பதுளை வீதியை விஸ்தரிப்பதற்கு HDPE/DI குழாய்கள் மற்றும் பொருத்தல்களை பதித்தல் மற்றும் இணைத்தல்.<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/ REH/ MAHIYANGANAYA/2024/136** | 12,500/- +VAT | ரூபா 274,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 18.2 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 14/08/2024 பி.ப. 2.00 |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | | |
| 13 | 75,000 எண்ணிக்கையான 15mm (1/2") Volumetric type வீட்டு நீர் மானிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **DGM/M&E/WM/15/2024/16** | 60,000/- +VAT A receipt of payment of ரூபா 19,550/- + VAT as Sample Testing Charges to NWSDB | ரூபா 5,750,000/- | ஆவணத்தின் பிரகாரம் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 28/08/2024 மு.ப. 10.00 |
| 14 | பியகம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் உள்ள Chemical Motive நீர் பம்பிகளுக்கு (Grundfos) உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்.<br>ஒப்பந்த இல: **RPC/WP/G/BIY/M&E/RH/2024/33** | 6,000/- +VAT | ரூபா 116,850/- | ஆவணத்தின் பிரகாரம் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்கள் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பி.ஒ.நி. (மேற்கு – உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம்.<br>Tele:0112418532 Fax:0112549199 | 21/08/2024 பி.ப. 2.00 |
04. IMUL-A-0178-GLE எனும் பதிவிலக்கத்தைக் கொண்ட 39 குதிரை வலுவைக் கொண்ட யன்மார் என்ஜின் சகிதம் 35 அடி 6 அங்குலம் நீளம் கொண்ட ''சிதும்புதா'' பலநாள் மீன்பிடிப் படகு. (என்ஜின் இலக்கம் - 0822)

அந்த ஆதனம் தொடர்பில் தமது உரிமைத்துவத்தை நீதிமன்றத்தில் நிரூபிப்பதற்கு உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகள் வழங்கும்பொருட்டு அறிந்துகொள்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றது.

**நீதிமன்றத்தின் கட்டளைப்படி,**

**பதிவாளர்,**
**பாணந்துறை மேல் நீதிமன்றம்.**

it's what you want
www.adz.lk

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Pay online & Save your precious time
BANK OF CEYLON Acc. No. 000000377 Corporate Branch
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383 E-mail - classified@lakehouse.lk WE ACCEPT

# விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)

## விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்

### மாகாண மட்ட விளையாட்டு கட்டிடத்தொகுதி, வட மேல், குருநாகல், பிங்கிரிய

### வழித்தட (200 மீ. வழித்தடம்) வீதி, வேலி மற்றும் நீர்த்தாங்கி ஆகியவற்றை நிர்மாணித்தல்

**ஒப்பந்த இல.: DSD/PRO/03/03/17-2024**

1. கீழே விபரிக்கப்பட்டவாறு பிங்கிரிய, குருநாகல், வட மேல், மாகாண மட்ட விளையாட்டு கட்டிடத்தொகுதியில் (200மீ வழித்தடம்) வேலி மற்றும் நீர்த்தாங்கி ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். மதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படை ஆகுசெலவானது எதிர்பாராத நிகழ்வுகள் மற்றும் வரிகள் நீங்கலாக 81.0 மில்லியன் ரூபாவாகும்.
   பிங்கிரிய, குருநாகல், வட மேல் மாகாணத்திலுள்ள விளையாட்டு கட்டிடத்தொகுதியிலுள்ள தளத்தை ஆயத்தம் செய்தல், மண் வேலை, 200 மீ. வழித்தடம், புற்கட்டை பதித்தல் மின் வேலை, குழாய் வேலை வீதி நிர்மாண வேலை, வேலி நிர்மாண வேலை மற்றும் நீர்த்தாங்கி நிர்மாணம் ஆகியன பிரதான வேலைகளாகும். வேலைகள் 180 நாட்களில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை கையளிக்கப்படுவதற்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்திருப்பவராகவுமிருத்தல் வேண்டும்.
   - 3(அ) நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் நெடுஞ்சாலைகள் நிர்மாணித்தலில் சி-3 அல்லது மேற்பட்ட தரத்தில் செல்லுபடியாகும் பதிவைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள்.
   - 3(ஆ) கடந்த 10 வருடங்களில் மின்சாரம் மற்றும் குழாய் வேலைகளில் 50 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட தொகையில் ஆகக் குறைந்தது ஐந்து (5) செயற்றிட்டங்களை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - 3(இ) கடந்த 10 வருடங்களில் மைதானமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு (1) தரநிருணய மெய்வல்லுனர் வழித்தட செயற்றிட்டமொன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள பொறியியல் சேவைகளுக்கான பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 0112677960) கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2024.07.31 ஆம் திகதியிலிருந்து 2024.08.20 ஆம் திகதியன்று வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024.07.31 ஆம் திகதியிலிருந்து 2024.08.20 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000 ரூபாவை செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் இருத்தல் வேண்டும்.
6. 2024.08.21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் 1,620,000 (பதினாறு இலட்சத்து இருபதினாயிரம் ரூபா) பெறுமதியான விலைக்கோரல் ஆவண விலைக்கோரல் பிணை முறியொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. விலைமனுதாரர் வேலைத்தளத்திற்கு வருகைதந்து உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட ''வேலைத்தள படிவத்தை'' விலைமனு ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்,**
**இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு-7.**

---

### அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகம் (NIPHM)
### (கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு)
### ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம்

## ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள்

### ஹம்பந்தொட்ட மாவட்டத்தில் பழ கூழ் பதனிடல் செயற்பாட்டிற்காக தாபிக்கப்பட்ட பழ பதனிடுபவர்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாட்டை அழைத்தல்

தற்போது பொருட்களின் இழப்பை குறைப்பதே தற்போதுள்ள பிரதான தேசிய மட்ட சவால்களுள் ஒன்றாகும். தேசிய நிறுவகமான NIPHM ஆனது பழங்களின் புதிய தரத்தை மேம்படுத்துவதற்காக நாடு முழுவதும் பழ பதனிட வலயங்களை தாபிப்பதன் மூலமாக அறுவடைக்குப் பின்னரான பழங்களின் இழப்பை குறைப்பதற்காக பல தொழில்நுட்பவியல்களை அறிமுகப்படுத்தியுள்ளது. பழங்களின் அறுவடைக்குப் பின்னரான இழப்பை குறைக்கவும் இலங்கையின் பழ பதனிடல் கைத்தொழிலின் பழ வளர்ப்பாளர்கள், சேகரிப்போர் மற்றும் ஏனைய தொழில்முயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக பழ பதனிடல் மற்றும் இலங்கையில் உயர்ந்த பெறுமதியுள்ள சந்தை வாய்ப்பை பெற்றுக் கொள்ளவும் பொருத்தமான முறைகளான கூழ் செயற்பாடு மற்றும் பதப்படுத்தல் ஆகியவற்றை பிரபல்யப்படுத்தல் அவசியமாகின்றது. மேலே குறிப்பிட்டுள்ள தேவையை பூர்த்தி செய்வதற்காக,

மேற்கூறிய தேவையை பூர்த்தி செய்ய NIPHM இந்த திட்டத்தை தொடங்க முடிவு செய்து, இலக்கு பயனாளிகளுக்கு பழங்களின் கூழ் உற்பத்தி வரிசையை தொடங்குவதற்கு ஆரம்ப ஆதரவை வழங்க முடிவு செய்துள்ளது. இது பழங்களின் மதிப்பு கூட்டல் நடைமுறைகளுக்கு உச்ச உற்பத்தி காலப்பகுதியில் பயன்படுத்தப்படலாம்.

தெரிவு செய்யப்பட்ட கம்பனி/ அமைப்பிற்காக இலங்கை அரசாங்கத்தினால் உத்தேசிக்கப்பட்டுள்ள வசதிகள்:

- ஆற்றல் அபிவிருத்தி மற்றும் உற்பத்தி செயற்பாட்டு செயற்பாடுகளின் அதிகாரத்திற்காக 25 ஆளணியினர் பயிற்றுவிக்கப்படுவார்கள்.
- முழுமையான வசதிகளையுடைய செயற்பாட்டு நிலையமொன்று வாடகை அடிப்படையில் வழங்கப்படும்.

**கம்பனியின் பலம் மற்றும் வகிபங்கு.**

- நிதிசார் நிலைபெறு தன்மையுடன் ஆகக் குறைந்தது 05 வருடங்களுக்கு தொடர்ச்சியாக செயற்பாட்டை நடத்திச் செல்லல்.
- விவசாயிகள், சேகரிப்பாளர்கள், சிறிய அளவிலான பதனிடுபவர்கள் இன்னும் பலரை அடக்கியுள்ள கிராம மட்டத்தில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படல் வேண்டும்.

இணைந்த கிராம மட்ட அமைப்பின் திறன்களை மேம்படுத்துவதற்காக தேவைப்படும் அறிவு மற்றும் பயிற்சியை வழங்குவதற்கான ஆற்றல்.

கம்பனியின் தகைமைகள் பின்வருமாறு:

- பழ கைத்தொழிலில் தொழில் முயற்சியாண்மையின் சிறந்த நிரூபிக்கப்பட்ட முன்னணி அனுபவத்தை கம்பனி/அமைப்பானது கொண்டிருத்தல் வேண்டும்.
- பதனிடப்பட்ட பழங்களின் வருடாந்த உற்பத்தி தொகையின் முன்னைய அனுபவம்.
- விவசாயிகளின் அமைப்புக்கள் அல்லது வேறேதாவது சமூக மட்ட அமைப்புக்களுடன் பணியாற்றிய முன்னைய அனுபவத்தை கம்பனியானது கொண்டிருத்தல்.
- செல்லுபடியாகும் தன்மையிலுள்ள கம்பனிப் பதிவு/வியாபாரப் பதிவு.

**விண்ணப்பிக்கும் முறை:**
ஆர்வ வெளிப்பாட்டிற்கான முன்மொழிவானது கம்பனி விபரங்கள் மற்றும் இயலுமை ஆகியவற்றை அடக்கியுள்ளவாறு தயாரிக்கப்படல் வேண்டும். ஆர்வ வெளிப்பாட்டிற்கான முன்மொழிவை தயாரிப்பதற்கான வழிகாட்டியை NIPHM இன் www.niphm.lk என்ற இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தெரிவு செய்யும் முறை:**
**பின்வருவனவற்றை பரிசீலனை செய்வதன் மூலம் ஆர்வ வெளிப்பாடுகள் தெரிவு செய்யப்படும்.**

- குறிப்பிடப்பட்டுள்ள தகவுத்திறனுக்கு இசைவாக ஆர்வ வெளிப்பாட்டு முன்மொழிவின் அடிப்படையிலமைந்தது.
- இயைபுடைய செயற்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்வதிலுள்ள அனுபவத்திற்கான ஆவணச்சான்றுகள்.
- கடந்த காலத்தில் காட்சிப்படுத்தப்பட்ட முகாமைத்துவ நுண்ணறிவு.
- நிதிசார் ஆற்றல்

**முன்மொழிவுகளின் சமர்ப்பித்தல்:**
ஆர்வமுள்ள சாரார் அவர்களின் ஆர்வ வெளிப்பாட்டை 2024.08.14 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பதிவுத் தபாலில் அல்லது தூ தஞ்சலில் அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நிறுவகத்திற்கு பின்வரும் ஆவணங்கள் மற்றும் தகவலுடன் வன்பிரதியொன்றாக அனுப்பப்படல் வேண்டும் அல்லது நிறுவகத்தின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும்.
தொடர்பெண்கள்: 071-0343210/071-5342224

**தலைவர்,**
**அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகம்,**
**ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம், இலங்கை.**

**தொலைபேசி: +9425 3230000**
**இணையம்: www.niphm.lk**
**மின்னஞ்சல்: info@niphm.lk**

---

### நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

### நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான சிறப்பு மையத்திற்கு (CEWAS) சேவையை வழங்குவதற்காக வர்த்தக ஊக்குவிப்பு முகாமைத்துவம் ஒன்றில் ஈடுபடுவதற்கான அழைப்பு

**ஒப்பந்த இல.: NWSDB/CEWAS/SERVICE/2024/05**

**விலைமனு இறுதித் திகதி 2024 ஓகஸ்ட் 26 அன்று 10.00 மணி**

1. நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான சிறப்பு மையத்திற்கு (CEWAS) சேவையை வழங்குவதற்காக வர்த்தக ஊக்குவிப்பு முகாமைத்துவம் ஒன்றின் சேவைகளுக்காக எதிர்பார்ப்புடைய தனிநபர்களிடம் இருந்து இரத்மலானை, காலி வீதி, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.
2. தேவையான தொழில்நுட்ப திறன் மற்றும் வேலையின் நோக்கம் கீழுள்ள இணைப்பில் கிடைக்கப்பெறும்
   - ✓ **வர்த்தக முகாமையாளர் - https://shorturl.at/9FOF4**
3. குறித்த பதவிக்காக குறிப்பு விதிமுறைகள் (TOR) உட்பட விலைமனு ஆவணம், சாதாரண வேலை நாட்களில் 09.30 மணி தொடக்கம் 15.00 மணிக்கு இடையே எழுத்துமூல கோரிக்கையை சமர்ப்பிப்பதன் மூலம் வழங்கப்படும் அல்லது மேலுள்ள இணைப்பை பயன்படுத்தி தரவிறக்கம் செய்ய முடியும்.
4. மேலுள்ள சேவைகளை வழங்குவதற்கு ஆர்வம் இருந்தால், தொடர்புடைய விபரங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணத்தை கடித உறை ஒன்றில் முத்திரை இட்டு 2024 ஓகஸ்ட் 26 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு உதவிப் பொது முகாமையாளர் (கேள்வி மற்றும் ஒப்பந்தங்கள்), தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, காலி வீதி, இரத்மலானை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும்.
5. தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. ஆர்வமுடைய தனிநபர்கள் தொலைபேசி இலக்கம்: 0112605328, நீடிப்பு இல. 1750 அல்லது தொலைநகல் இல. 011-2635885 இல் இலங்கை, இரத்மலானை, காலி வீதி, கேள்வி மற்றும் ஒப்பந்தப் பிரிவில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு இலங்கை, இரத்மலானை, காலி வீதி, NWSDB, உதவி பொது முகாமையாளரின் (கேள்வி மற்றும் ஒப்பந்தம்) அலுவலகத்தில் சாதாரண வேலை நேரங்களில் கட்டணம் இன்றி ஆவணத்தை பரீட்சிக்கலாம்.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு CEWAS இல் 2024.08.16 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு நடைபெறும்.

**தலைவர்**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

---

### தென் மாகாண சுகாதார சேவைத்திணைக்களம்

# பெறுகை அறிவித்தல்

சுகாதார சேவைத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் உபகரணங்களை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. நிதித்தன்மை - வரிசை அமைச்சு மானியங்கள் மற்றும் மாகாண நிலையான அபிவிருத்தி வழங்கல் (PSDG/LM)

| இலக்கம் | உபகரணம் | அளவு | மீளளிக்கப்படாத கேள்விப் பிணை ரூ. |
|---|---|---|---|
| மருத்துவ உபகரணம் | | | |
| 1 | Hysteroscope | 2 | 10,000.00 |
| 2 | Three Function Beds | 30 | 6,000.00 |
| 3 | Bio-Chemistry Analyzer | 1 | 5,000.00 |
| 4 | Ultrasound Scanner Machine | 1 | 5,000.00 |
| 5 | Diathermy Machine | 1 | 4,000.00 |
| 6 | Endoscopy System | 1 | 15,000.00 |
| 7 | CRRT Machine | 1 | 4,000.00 |
| 8 | Auto Refractometer | 1 | 3,000.00 |
| 9 | Dental Digital CR | 2 | 4,000.00 |
| 10 | Dental X-Ray | 2 | 4,000.00 |
| 12 | Ophthalmic Theatre Table | 1 | 2,000.00 |
| 13 | Ventilator PBU | 1 | 5,000.00 |
| 14 | Cystoscopy | 1 | 4,000.00 |
| 15 | Anesthetic Machine | 1 | 5,000.00 |

**கேள்வி நிபந்தனைகள்**

01. தேசியபோட்டி கேள்விகோரல் (NCB) ஊடாக இக் கேள்விக்கோரல் செயற்படுத்தப்படும்.
02. விண்ணப்பதாரி இலங்கை வியாபார பெயர் பதிவுச்சட்டவாக்கத்தின் கீழ் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் மற்றும் மருத்துவ உபகரணங்கள் பற்றிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் திரவியங்கள் அதிகார சபையின் (மருத்துவ மற்றும் ஆய்வுகூட மருத்துவ உபகரணங்களுக்காக) பதிவுசெய்த நபர் அல்லது நிறுவனமாக இருப்பதுடன் இயந்திரத்திற்காக உள்ளூர் விற்பனை நிறுவனங்கள் ஊடாக விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்வி ஆவணங்களை மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையில் கணக்குப்பிரிவில் 2024.08.01 முதல் 2024.08.22 வரை வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை பெற்றுக்கொள்ளலாம். அங்கு ஒவ்வொரு உருப்படிக்கும் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 1% மீளளிக்கப்படாத வைப்புத் தொகை மற்றும் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு உருப்படிக்கும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகை மூலம்செலுத்துதல் வேண்டும்.
04. பொறியிடப்பட்ட கேள்விகள் 02 பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறுவேறாக உறைகளில் இட்டு, அவ் உறைகள் 02ஐயும் மீண்டும் ஒரே உறையில் உள்ளிட வேண்டியதுடன் அவ் உறையின் இடதுபக்க மேல் மூலையில் உருப்படி இலக்கத்துடன் உபகரணத்தின் பெயர் மற்றும் 2024ஆம் ஆண்டு என்று குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
05. உபகரணத்திற்கான கேள்விப் பத்திரங்கள் 2024.08.23ம் திகதி மு.ப.10.00 இற்கு பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் தலைவர், பெறுகைக்குழு, மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் பணிமனை, இல.15ஏ, கீழ் டிக்சன் வீதி, காலி என்ற முகவரிக்கு தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.
    அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
06. குறித்த தினம் குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் மற்றும் குறித்தவாறு சமர்ப்பிக்காத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
07. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அல்லது அதன் பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது.
08. இது பற்றிய மேலதிக விபரங்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
    091-2231620/091-2224609

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**இல-15ஏ, கீழ் டிக்சன் வீதி,**
**காலி**

it's what you want
www.adz.lk

---

**எனது இலக்கம், மஹ/கா/சு/379**

### 1964 ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தின் காணி சுவீகரிப்புச் சட்ட பிரிவு 7இன் கீழான அறிவித்தல்

கீழ் வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை அரசு சுவீகரிக்க கருதுவதால். மேலதிக தகவல்களுக்காக 2024.02.10 ஆம் திகதிய இலக்கம் 2370/33 இணைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் 111ஆம் பகுதி அறிவித்தலை பார்க்கவும்.

உரிமைத்துவ பரீட்சை தினம் : 2024.08.09 முற்பகல் 10.00

**அட்டவணை**

- மாகாணம் : மேல்மாகாணம்
- மாவட்டம் : கொழும்பு
- பிரதேச செயலாளர் பிரிவு : மஹரகம
- கிராம சேவகர் பிரிவு : 527 நாவின்ன
- கிராமத்தின் பெயர் : நாவின்ன
- காணியின் பெயர் : கொரோக்கஹதெனிய
- திட்ட இலக்கம் : 10057
- துண்டுகளின் எண்ணிக்கை : 3
- விஸ்தீரணம் : 0.00327 ஹெக்டேயர்

**எம்.எம்.கே. தில்ருக்ஷி வல்பொல**
**பிரதேச செயலாளர்/காணி சுவீகரிப்பு அதிகாரி**
**பிரதேச செயலாளர் அலுவலகம்**
**மஹரகம**

2024, 07 மாதம் 29ஆம் திகதி

---

### காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

**குறிப்பு இல. கம். 3923/22**

கம்பஹா மாவட்டத்தில், ஜா-எல பிரதேச செயலாளர் பீ.ஏ.ஏ.எஸ். வீரசேகர ஆகிய நான் காணி சுவீகரித்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்குரிய ரூபா பதினைந்து இலட்சத்து எண்ணாயிரத்து ஐந்நூறு (ரூ. 1,508,500.00) நிலையான நஷ்டஈட்டு பணத்தை இக்காணியின் உரிமை கோருபவர்கள் பெற்றுக் கொள்வதற்கு நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இல. SP 3873 இன் கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து இலங்கை ஜனநாயக குடியரசின் 14 டிசெம்பர் 2023 ஆம் திகதிய 2362/66 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | - மேல் |
| ஆரம்ப வரைபட இல. | - கம். 3923 |
| துண்டு இல. | - 22 |
| விஸ்தீரணம் | - 0.0053 ஹெக்டயார் |
| நிலை | - மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவில், கனுவன கிராமத்தில் அமைந்துள்ளது. |
| வைப்பில் இடப்பட்ட வங்கியின் பெயர் மற்றும் கணக்கு இல. | - தேசிய சேமிப்பு வங்கி, நீர்கொழும்பு. 1-00090734144 |

**பீ.ஏ.ஏ.எஸ். வீரசேகர,**
**பிரதேச செயலாளர்/சுவீகரித்தல் அதிகாரி,**
**ஜா-எல.**

**பிரதேச செயலகம்,**
**ஜா-எல.**
**11.07.2024.**

Promotional Rates for Classified Advertisements
(Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Gampaha District

Gampaha - 033 22 23 464
1602 - A. L. T. L. Liyanarachchi - Hemas Bookshop, No. 12, Orutota Road, Gampaha.

Wattala - 011 2 937 989
1522 - K. Dharmadasa - Dasa Brothers, Supermarket Building, Hendala Junction, Wattala.

Nilpanagoda - 077 8 627 321
1570 - K. L. Somasiri - 233/5, Diyulapitiya Road, Nilpanagoda.

Wattala - 011 2 932 511
1589 - J. A. Ranil Virendra Anthony Rodrigo - 660/12, Mabola Wattala.

Kochchikade - 031 22 78 359
1606 - M. S. A. Chaminda Fernando - Vinoda Advertising, No. 119/A, Chilaw Road, Kochchikade.

Batuwatta - 071 8 921 271
1626 - H. D. George - Renuka Grocery, No. 118/1, Station Road, Batuwatta.

Dunagaha - 077 3 517 752
1637 - H. Guththila Sarathchandra - Nelligaha Niwasa, Dunagaha.

Ja-Ela - 011 2 947 379
1659 - K. Dharmadasa - Dasa Brothers, No. 73, Main Street, Ja-Ela.

Negombo - 071 480 43 55
1684 - J. A. Kulasinghe Perera - No. 152/C, Greens Road, Udara Newspaper Agent, Negombo.

Katunayake - 077 4 115 998
1920 - S. M. N. Dinesha Fernando - No. 350, Colombo Road, Katunayake.

Kandana - 011 2 233 651
1927 - Y. A. D. Rajapaksha - Jayabima Stores, No. 105, Station Road, Kandana.

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343

# விலைமனுக்களுக்கான அழைத்தல

## துறைமுகங்கள், கப்பற்சேவை மற்றும் விமானசேவைகள் அமைச்சு

வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமானசேவைகள்

## Limited National Competitive Bidding for the Operation of Currency Exchange Counters in the Departure Walkway at Bandaranaike International Airport – Katunayake (Tender No. 023/T/2024)

மூன்று வருட (3) காலத்திற்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வெளிச்செல்லல் முனைய நடையோடு பாதையில் பணநோட்டு பரிமாற்ற கருமபீடங்களை செயற்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பரிமாற்ற வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அல்லது உரிமமுள்ள விஷேடத்துவமுள்ள வங்கிகள் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய புறப்படும் நடையோடு பாதையில் ஐந்து (05) பணநோட்டு பரிமாற்ற கருமபீடங்கள் விலைமனுவில் அமைந்துள்ளதுடன் எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர் ஒன்று அல்லது மேலதிக கருமபீடங்களுக்கு விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம். இருப்பினும், குறிப்பிட்டதொரு விலைமனுதாரர் ஒரு கருமபீடத்தை மாத்திரமே செயற்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்படுவார்/ ஒப்பந்தம் வழங்கப்படும். ஒரு கருமபீடத்திற்கு மேற்பட்ட எண்ணிக்கையை செயற்படுத்த விரும்பும் வேளையில் அனைத்து விலைமனுக்கோரல்களும் ஒரு விலைமனுப் பிணையுடன் இணைக்கப்பட்டு ஒரு விலைமனுக்கோரல் ஆவணமாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பிரயோகப்படுத்தக்கூடிய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ஏனைய விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும். விலைமனுக்கோரல் ஆவணங்களை 2024 ஜூலை 31 ஆம் திகதியிலிருந்து 2024 ஓகஸ்ட் 21 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவாகிய 50,000 ரூபாவை ஒவ்வொரு தொகுதிக்கும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் முனைய கட்டிடத்தின் 2 ஆம் மாடியின் 37 ஆம் இலக்க அறையின் விமானநிலைய வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீலங்கா) (தனியார்) அலுவலக தலைவரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் தலைவரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன.

விலைமனுக்கள் கம்பனியினால் வழங்கப்படும் விலைமனுக்கோரல் படிவங்களில் மாத்திரமே தயாரிக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுப் பிணை உத்தரவாதமாக 3,711,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவு/ வங்கி உத்தரவாதத்தில் புகழ்பெற்ற வர்த்தக வங்கி அல்லது உரிமமுள்ளதும் விஷேடத்துவமுள்ளதும் இலங்கையில் செயற்படும் (விலைமனுதாரர் வங்கி உத்தரவாதத்தை அவர்களின் சொந்த வங்கியிலிருந்து சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது) வங்கியொன்றிலிருந்து வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தலும் வேண்டும்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் (ஸ்ரீலங்கா) (தனியார்) இல் 2024 ஓகஸ்ட் 08 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து அமைவிடத்திற்கான விஜயமும் நடைபெறும். விலைமனுக்கள் 2024 ஓகஸ்ட் 22 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு, கொழும்பு-01, உலக வர்த்தக மையம், மேற்கு கோபுரம், 30 ஆம் மாடியில் துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள் நிலைய அலுவலகத்தில் திறக்கப்பட்டு பகிரங்கமாக வாசிக்கப்படும். எந்தவொரு விலைமனுவும் விலைமனுக்களை திட்டவட்டமாக குறிக்கப்பட்டுள்ள நேரத்தின் பின்னர் பெற்றுக் கொள்ளப்படுமானால் அவைகள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்கள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் முனைய கட்டிடத்தின் 2 ஆம் மாடியின் 37 ஆம் இலக்க அறையின் விமானநிலைய வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் (ஸ்ரீலங்கா) (தனியார்) அலுவலகத்திலிருந்து 011-2264000, 0112264025, 011-2252744 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக அல்லது head.cp@airport.lk என்ற மின்னஞ்சலிளிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு,**
**30 ஆம் மாடி, மேற்கு கோபுரம்,**
**உலக வர்த்தக மையம்**
**கொழும்பு-01 - இலங்கை.**




it's what you want
www.adz.lk

# கேள்விகளுக்கான அழைப்பு (IFB)

# இலங்கை பொலிஸ்

01. இலங்கை பொலிஸ் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தகுதியும் தகைமையும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து, முத்திரையிடப்பட்ட கேள்விகள் இப்போது கோரப்படுகின்றன.

**பொருட்களின் அட்டவணை**

| தொ. இல. | பொருட்கள் | அளவு | பெறுகை இலக்கம் | கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் மற்றும் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி | கேள்விப் பிணை முறி இல. ரூபா | கேள்விப் படிவக் கட்டணம்: பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் (பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு) இல. ரூபா | கேள்விப் படிவக் கட்டணம்: பதிவு செய்யப் படாத வழங்குநர்கள் இல. ரூபா | பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டுமா? (ஆம்/இல்லை) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | Cleaning & Maintenance of Colombo D.I.G. office | - | LA/S1/372/2024 | 20.08.2024 | 100,100.00 | 1,000.00 | 1,500.00 | ஆம் |
| 02 | Photocopy Machine | 100 எண்ணிக்கை | LA/S1/373/2024 | 20.08.2024 | 432,510.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 03 | Jogging Sport Shoes (CI/IP/SI/WCI/WIP/WSI) | 12000 சோடிகள் | LA/S1/374/2024 | 20.08.2024 | 1,583,100.00 | 20,000.00 | 21,000.00 | ஆம் |
| 04 | Handheld Metal Detector | 50 எண்ணிக்கை | LA/S1/375/2024 | 20.08.2024 | 78,630.00 | 1,000.00 | 1,500.00 | ஆம் |
| **தொடர்பாடல் பிரிவு** | | | | | | | | |
| 05 | Motorola SL2M Walkie Talkie Battery | 200 எண்ணிக்கை | LA/S1/COM/22/2024 | 20.08.2024 | 46,810.00 | 1,000.00 | 1,500.00 | இல்லை |
| 06 | Brand New Generator | 02 எண்ணிக்கை | LA/S1/COM/23/2024 | 20.08.2024 | 564,750.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 07 | VHF Analog Digital Repeaters | 10 எண்ணிக்கை | LA/S1/COM/24/2024 | 20.08.2024 | 2,194,060.00 | 20,000.00 | 21,000.00 | ஆம் |
| **பொலிஸ் வைத்தியசாலை பிரிவு** | | | | | | | | |
| 08 | Defibrillator Machine | 01 எண்ணிக்கை | LA/S1/PMS/34/2024 | 20.08.2024 | 31,700.00 | 1,000.00 | 1,500.00 | இல்லை |
| 09 | Medicine for Police Hospital (Drugs Names Starting from A - B) | பட்டியலின் பிரகாரம் | LA/S1/PMS/35/2024 | 20.08.2024 | 395,380.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| **பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு** | | | | | | | | |
| 10 | Cleaning & Maintenance of Police Transport Division (One Year) | - | LA/S1/TPT/27/2024 | 20.08.2024 | 94,500.00 | 1,000.00 | 1,500.00 | ஆம் |
| 11 | Lubricants for Police Vehicles | பட்டியலின் பிரகாரம் | LA/S1/TPT/28/2024 | 20.08.2024 | 1,201,070.00 | 12,500.00 | 13,500.00 | ஆம் |
| **குற்றவியல் பதிவுப் பிரிவு** | | | | | | | | |
| 12 | Camera Equipment | பட்டியலின் பிரகாரம் | LA/S1/CRD/10/2024 | 20.08.2024 | 673,150.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 13 | Photographic Equipment | பட்டியலின் பிரகாரம் | LA/S1/CRD/11/2024 | 20.08.2024 | 253,050.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |

02. 2006 பெறுகை வழிகாட்டியின் 3.2 இன் கீழ் தேசிய போட்டிரீதியிலான கேள்வி கோரல் நடைமுறையின் கீழ் கேள்விகள் கோரப்படும்.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் கீழே தரப்பட்டுள்ள முகவரியில் அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ''வழங்கல் பணிப்பாளர்'' அவர்களிடமிருந்து நிலையான கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

04. பூர்த்தி செய்யப்பட்ட பிணை முறிகளுடனான கேள்விப் படிவங்களை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் பி.ப. 02.00 மணி அல்லது அதற்கு முன் கொழும்பு-01, பொலிஸ் தலைமையகம், 2ஆம் மாடி, கணக்காளர் - வழங்கல் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்து கொள்வதற்கு இடமளிக்கப்படும்.

05. மாதிரிப் பொருட்களை (Samples) கேள்விகள் திறக்கப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் பி.ப. 1.00 மணி அல்லது அதற்கு முன் கொழும்பு-01, பொலிஸ் தலைமையகத்தின் வழங்கல் பிரிவின் தலைமை இலிகிதருக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் தாமதமாகக் கொண்டு வரப்படும் மாதிரிப் பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

06. மாதிரிகளை ஒப்படைக்கும் போது மொடல்களின் பெயர்களைக் குறிப்பிடுதல் கூடாது.

07. சகல வழங்குநர்களும் அட்டவணையின் இறுதி நிரலில் ''ஆம்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ள 5 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட பொருட்களுக்காக 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் eroc.dre.gov.lk எனும் இணையதளத்தைப் பயன்படுத்தி முழுமையான நிகழ்நிலை (online) முறையில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

08. ஒரு கேள்விதாரருக்கு ஒரு கேள்விப் படிவம் மாத்திரமே வழங்கப்படும்.

09. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக்கு முன்னராக கூட்டங்கள் இயைபுடைய பெறுகைகள் தொடர்பில் நடாத்தப்படும்.

| இல. | பொருட்கள் | கோவை இலக்கம் | திகதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| i | 100 Nos. Photocopy Machine | LA/S1/373/2024 | 05.08.2024 - மு. ப. 10.00 | பொலிஸ் தலைமையகம் - மாநாட்டு மண்டபம் |
| ii | 12000 Nos. Jogging Sport Shoes (CI/IP/SI/WCI/WIP/WSI) | LA/S1/374/2024 | 05.08.2024 - மு. ப. 10.20 | |
| iii | 50 Nos. Handheld Metal Detector | LA/S1/375/2024 | 05.08.2024 - மு. ப. 10.40 | |
| iv | Cleaning & Maintenance of Colombo D.I.G. office | LA/S1/372/2024 | 05.08.2024 - மு. ப. 11.00 | |
| v | Cleaning & Maintenance of Police Transport Division (One Year) | LA/S1/TPT/27/2024 | 05.08.2024 - மு. ப. 11.20 | |
| vi | Lubricants for Police Vehicles | LA/S1/TPT/28/2024 | 05.08.2024 - மு. ப. 11.40 | |
| vii | 200 Nos.Motorola SL2M Walkie Talkie Battery | LA/S1/COM/22/2024 | 06.08.2024 - மு. ப. 10.00 | |
| viii | 02 Nos. Brand New Generator | LA/S1/COM/23/2024 | 06.08.2024 - மு. ப. 10.20 | |
| ix | 10 Nos. VHF Analog Digital Repeaters | LA/S1/COM/24/2024 | 06.08.2024 - மு. ப. 10.40 | |
| x | 01 No. Defibrillator Machine | LA/S1/PMS/34/2024 | 06.08.2024 - மு. ப. 11.00 | |
| xi | Medicine for Police Hospital (Drugs Names Starting from A - B) | LA/S1/PMS/35/2024 | 06.08.2024 - மு. ப. 11.20 | |
| xii | Camera Equipment | LA/S1/CRD/10/2024 | 06.08.2024 - மு. ப. 11.40 | |
| xiii | Photographic Equipment | LA/S1/CRD/11/2024 | 06.08.2024 - ந. ப. 12.00 | |

10. ஆர்வம் காட்டும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் பின்வரும் முகவரி அல்லது தொலைபேசி இலக்கங்களில் மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர்,**
**வழங்கல்கள் பிரிவு,**
**2ம் மாடி, பொலிஸ் தலைமையகம்,**
**கொழும்பு – 01.**

**கேள்விப் பிரிவு - 0112-013116/3117**
**உ.பொ.அ. / வழங்கல்கள் - 011-2324915/ 0718591955**
**மாதிரிகள் (Sample) பிரிவு - 0112013124**
**தொலைநகல் - 0112-320729**
**மின்னஞ்சல் - dir.supplies@police.gov.lk**
**இணையதளம் - www.police.lk**
**கம்பனி பதிவாளர் திணைக்களம்- 011 2689215**

**பொலிஸ் மா அதிபர்**

# இலங்கை ஒருநாள் அணிக்கும் அசலங்க தலைவராக தேர்வு



இந்தியாவுக்கு எதிரான 16 பேர் கொண்ட இலங்கை ஒருநாள் குழாத்தில் குசல் மெண்டிஸுக்கு பதில் சரித் அசலங்கவுக்கு தலைமை பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடர் நேற்று (30) முடிவுற்ற நிலையில் இரு அணிகளும் மோதும் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான இலங்கைக் குழாம் நேற்று அறிவிக்கப்பட்டது. அண்மையில் இலங்கை ஒருநாள் அணித் தலைவராக குசன் மெண்டிஸ் நியமிக்கப்பட்ட நிலையில் டி20 அணியின் தலைவராக நியமிக்கப்பட்ட சரித் அசலங்கவுக்கு ஒருநாள் அணித் தலைமை பொறுப்பையும் வழங்க தேர்வுக் குழுவினர் தீர்மானித்துள்ளனர். இதில் சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்ன மற்றும் சதீர சமரவிக்ரமவும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இந்த ஒருநாள் தொடரின் கடைசி இரு போட்டிகளும் ஓகஸ்ட் 4 மற்றும் 7 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதோடு அனைத்து ஆட்டங்களும் கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

**இலங்கை குழாம்:** சரித் அசலங்க (தலைவர்), பத்தும் நிசங்க, அவிஷ்க பெர்னாண்டோ, குசல் மெண்டிஸ், சதீர சமரவிக்ரம, கமிந்து மெண்டிஸ், ஜனித் லியனகே, நிஷான் மதுஷங்க, வனிந்து ஹசரங்க, துனித் வெள்ளாலகே, சாமிக்க கருணாரத்ன, மஹீஷ் தீக்ஷன, அகில தனஞ்சய, டில்ஷான் மதுஷங்க, மதீஷ பதிரண, அசித்த பெர்னாண்டோ.

# கைல், விரேன் நெத்தசிங்கவின் ஒலிம்பிக் எதிர்பார்ப்பு சிதைந்தது

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பில் நேற்று பங்கேற்ற பூப்பந்து மற்றும் நீச்சல் வீரர்கள் தோல்வியை சந்தித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறாமல் வெளியேறினார்.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு பூப்பந்துப் போட்டியின் ஆரம்ப சுற்றில் தனது இரண்டாவது ஆட்டத்தில் பங்கேற்ற விரேன் நெத்தசிங்க, ஸ்பெயின் வீரர் பப்லோ அபியானிடம் 2–0 என தோல்வியை சந்தித்தார். இதன் ஆரம்ப சுற்றில் அபியான், இலங்கை வீரரை இலகுவாக எதிர்கொண்டு 21–09 என அந்த சுற்றை கைப்பற்றினார்.

எனினும் இரண்டாவது சுற்றில் விரேன் தனது போட்டியாளருக்கு கடும் சவாலாக இருந்தார். என்றாலும் அந்த சுற்றிலும் அபியானால் 21–19 என முன்னிலை பெற முடிந்தது.

ஏற்கனவே விரேன் தனது முதல் போட்டியில் மலேசியாவின் லீ ஷி ஜியாவிடம் 2–0 என தோல்வியை சந்தித்திருந்தார். அப்போது உலகப் பூப்பந்து தரவரிசையில் 7 ஆவது இடத்தில் உள்ள மலேசியா வீரருக்கு அவர் கடும் சவாலாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



எவ்வாறாயினும் தனது இரண்டு போட்டிகளிலும் தோல்வியை சந்தித்த 20 வயதான விரேனின் ஒலிம்பிக் எதிர்பார்ப்பு முடிவுக்கு வந்தது. இம்முறை ஒலிம்பிக் பூப்பந்து போட்டிகளில் பங்கேற்கும் இளம் வீரராகவும் அவர் கலந்து கொண்டார்.



இதேவேளை நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் பிரீ ஸ்டைல் ஆரம்ப சுற்று நீச்சல் போட்டியில் இலங்கையின் கைல் அபேசிங்க கலந்துகொண்டார். எனினும் அவர் அந்தப் போட்டியில் 08 ஆவது இடத்தை பெற்றதன் மூலம் ஆரம்ப சுற்றுடனேயே வெளியேறினார்.

இந்தப் போட்டியை கைல் 51.42 விநாடிகளில் நிறைவு செய்திருந்தார்.

பாரிஸ் ஒலிம்பிக்கின் ஆண்களுக்கான 100 மீற்றர் பிரீ ஸ்டைல் போட்டியின் ஆரம்ப சுற்றில் மொத்தம் 79 வீரர்கள் பங்கேற்றிருந்ததோடு அதில் கைல் 54 ஆவது இடத்தைப் பிடித்தார்.

முன்னதாக நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான 100 மீற்றர் பாக்ஸ்ட்ரோக் போட்டியில் இலங்கை சார்பில் பங்கேற்ற கங்கா செனவிரத்ன தனது அரம்ப சுற்றுப்போட்டியில் முதலிடத்தை பெற்றபோதும் அரையிறுதி போட்டிக்கு தகுதி பெறும் அளவு காலத்தை பதிவு செய்யத் தவறினார்.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பில் மொத்த ஆறு வீரர்கள் பங்கேற்ற நிலையில் மெய்வல்லுனர் அல்லாத மூன்று வீரர்களும் தத்தமது போட்டிகளில் பின்னடைவை சந்தித்து வெளியேறியுள்ளனர். இந்நிலையில் இலங்கை சார்பில் பங்கேற்கும் மூன்று மெய்வல்லுநர் வீர, வீரங்கனைகளே இன்னும் போட்டியில் பங்கேற்காதுள்ளனர். ஒலிம்பிக் மெய்வல்லுனர் போட்டிகள் நாளை ஆரம்பமாகவுள்ளது.

# டோக்யோ சுப்பர் சிக்ஸ் அணிக்கு சம்பியன் பட்டம்

புத்தளம் தினகரன் நிருபர்



புத்தளம் கரைத்தீவு பொன்பரப்பியில் நடைபெற்ற சுப்பர் லீக் கரப்பந்தாட்ட தொடரில் டோக்யோ சுப்பர் சிக்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிறுக்கிழமை (28) இடம்பெற்றது. இதில் வொலி விக்கிங் அணியையே டோக்யோ சுப்பர் சிக்ஸ் அணி வென்றது. இந்தப் போட்டிக்கு பிரதான அனுசரணையை ஜெயா பார்ம் நிறுவனம் வழங்கி இருந்தது.



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட சதுரங்க சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான 20 மற்றும் 17 வயதுக்கு உட்பட்ட பிரிவில் முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவான ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவர்களை காணலாம். (படம்: மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# ஆயுர்வேத வெற்றி கிண்ணம்; கல்முனை அணி வசமானது

பாலமுனை விசேட நிருபர்



கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆயுர்வேத நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட, கிழக்கு மாகாண ஆயுர்வேத வெற்றிக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கல்முனை பிராந்திய ஏ அணி வெற்றிபெற்று கிண்ணத்தை கைப்பற்றியது. ஆரையம்பதி ஏசியன் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்ற இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்கொண்ட கல்முனை பிராந்திய ஏ அணி 19 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இந்தப் போட்டியில் மொத்த 5 அணிகள் பங்கேற்றிருந்தன.

# வெனிசுவேலாவில் ஆர்ப்பாட்டம்



வெனிசுவேல ஜனாதிபதி தேர்தலில் பதவியில் உள்ள ஜனாதிபதி நிகலஸ் மடுரோ வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்ட நிலையில் நாடு முழுவதும் ஆர்ப்பட்டம் வெடித்துள்ளது.

இந்தத் தேர்தல் முடிவு மோசடியானது என்று எதிர்க்கட்சி குற்றம்சாட்டி இருக்கும் நிலையில் தலைநகர் கரகாஸில் ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் கடந்த திங்கட்கிழமை மாலை ஜனாதிபதி மாளிகையை நோக்கி பேரணியாகச் சென்றனர்.

பல்கோன் மாநிலத்தில் மடுரோவுக்கு முன்னோடியாகஇருந்தமுன்னாள்ஜனாதிபதிஹுகோ சாவேஸின் சிலை ஒன்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் சாய்த்துள்ளனர். தலைநகரின் வறிய மக்கள் வசிக்கும் பகுதியான பெடாரேவில் முகமூடி அணிந்த இளைஞர்கள் ஜனாதிபதிக்கு எதிராக கோசங்களை எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் வன்முறை வெடித்ததோடு ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியில் டயர்களை போட்டு எரித்தனர். தலைநகரில் இராணுவம் குவிக்கப்பட்டிருந்ததோடு ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக தண்ணீர் பீச்சியடிக்கப் பட்டது.

இந்தத் தேர்தலில் மடுரோ வெற்றிபெற்றதாக தேர்தல் சபை அறிவித்தபோதும் தங்களது வேட்பாளர் எட்மண்டோ கோன்சா 70 வீத வாக்குகளை பெற்றுள்ளதாகவும், அவர்தான் நியாயமான முறையில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்றும் எதிர்க்கட்சி குறிப்பிட்டுள்ளது.

# கைபரில் போராட்டம்



பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா பிராந்தியத்தில் பயங்கரவாத செயற்பாடுகள் அதிகரித்து வருவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் பக்துன்க்வாவின் பஸ்தூன் இன மக்கள் அமைதியான ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளனர். பஷ்தூன் தஹபுஷ் அமைப்பு ஏற்பாடு செய்த இவ்வார்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் பங்குபற்றியுள்ளனர்.

பானு காண்டில் இருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலம் செல்ல முற்பட்ட போது வன்முறை ஏற்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்து கலவரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் சிலர் காயமடைந்துள்ளனர். இதனையிட்டு பஷ்தூன் தஹபுஷ் அமைப்பு கவலையடைவதாக அந்த அமைப்பின் உறுப்பினர் காசி முஹம்மட் தாஹிர்; குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச செய்திகள்

# காசாவின் கான் யூனிஸ் நகரத்தில் இருந்து இஸ்ரேலிய படை வாபஸ்: சடலங்கள் மீட்பு

## காசாவில் 'போலியோ தொற்று' பிரகடனம்

மத்திய காசாவில் புதிய வெளியேற்ற உத்தரவை பிறப்பித்த இஸ்ரேலியப் படை தெற்கு நகரான கான் யூனிஸில் இருந்து திடீரென்று வாபஸ் பெற்ற நிலையில் இடிபாடுகளுக்கு மத்தியில் பலஸ்தீனர்கள் அங்கு திரும்பியுள்ளனர்.

கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக கான் யூனிஸில் இஸ்ரேல் நடத்திய சரமாரித் தாக்குதல்களில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டு இரண்டு இலட்சம் வரையானோர் வெளியேற்றப்பட்ட நிலையிலேயே படையினார் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் இஸ்ரேல் வாபஸ் பெற்ற பகுதிகளில் இருந்த பல டஜன் உடல்களை மீட்க முடிந்திருப்பதாக காசா மருத்துவ பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் இங்கு தொடர்ந்து 200 பேர் வரை காணாமல்போயிருப்பதாக காசா சிவில் சேவை பிரிவு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் இந்தத் தாக்குதல்களால் கான் யூனிஸின் கிழக்குப் பகுதி மேலும் அழிவுகளை சந்தித்திருக்கும் நிலையில் மக்கள் கால் நடையாக அங்கு திரும்பும் வீடியோ காட்சிகளை அங்குள்ள ஊடகவியலாளர்கள் வெளியிட்டுள்ளனர். கான் யூனிஸில் இருந்து வெளியேறிய இஸ்ரேலியப் படையினர் மத்திய காசாவில் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

'இறைவனிடம் நம்பிக்கை வைத்து நான் திரும்பி வந்திருக்கிறேன். எனது பூமிக்காக நான் உயிர் வாழ்வேனா அல்லது இறப்பேனா என்று எனக்குத் தெரியவில்லை' என்று சுமார் ஐந்து கிலோமீற்றர் நடந்து கான் யூனிஸ் திரும்பிய அல் மஸ்ரி குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலிய இராணுவம் நகரின் பிரதான அடக்கஸ்தலமான பானி சுஹைலாவை அழித்திருப்பதாகவும், அருகில் இருக்கும் வீடுகள் மற்றும் வீதிகளை தகர்த்திருப்பதாகவும் அங்கு திரும்பியவர்கள் விபரித்துள்ளனர்.

பத்து மாதங்களை நெருங்கும் போரில் கிட்டத்தட்ட ஒட்டுமொத்த காசா பகுதியையும் இஸ்ரேலியப் படை கைப்பற்றியபோதும் அண்மைய வாரங்களில் முன்னர் கட்டுப்பாட்டை கொண்டு வந்ததாகக் கூறிய பகுதிகளில் மீண்டும் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளதோடு பலஸ்தீன போராளிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் மத்திய காசாவின் சிறு நகர் ஒன்றான டெயர் அல் பலாஹ்வில் இருந்து கடந்த திங்கட்கிழமை தொடக்கம் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி வருகின்றனர். இங்கிருந்து மக்களை வெளியேற இஸ்ரேல் கடந்த ஞாயிறன்று உத்தரவிட்டிருந்தது.

காசாவின் தென் முனை நகரான ரபா, வடக்கு மற்றும் மத்திய பகுதிகளிலும் நேற்று இஸ்ரேலின்



செல் தாக்குதல்கள் இடம்பெறதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காசாவின் வெறும் 14 வீதமான பகுதியே இஸ்ரேலின் வெளியேற்ற உத்தரவுக்கு உட்படாத பகுதிகளாக உள்ளன என்று பலஸ்தீனர்களுக்கான ஐ.நா. நிறுவனத்தின் தலைவர் பிலிப்பே லசரினி குறிப்பிட்டுள்ளது. காசாவில் உள்ள மக்கள் ஒருசில மணி நேர அவகாசத்தில் பல தடவைகள் வெளியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசாவில் பொது சுகாதார நெருக்கடி மோசமடைந்து வரும் சூழலில், அங்குள்ள கழிவு நீரில் போலியோ தொற்று கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் காசா சுகாதார அமைச்சு, போலியோ தொற்று பதிப்புக் குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அந்த அமைச்சு கடந்த திங்கட்கிழமை டெலிகிராமில் வெளியிட்ட அறிவிப்பில், 'இந்த நிலைமை காசா குடிருப்பாளர்கள் மற்றும் பிராந்திய நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பதோடு கடந்த ஒக்டோபர் தொடக்கம் இஸ்ரேலின் இனப்படுகொலை காரணமாக பொது சுகாதார அவசர நிலை மோசமடைவதற்கான சமிக்ஞையாக இது உள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மலம் வாய் வழியாக ஏற்படும் இந்தத் தொற்று நரம்பு மண்டலத்தில் ஊடுருவி பக்கவாதத்தை ஏற்படுத்தும். தடுப்புசி காரணமாக 1988 தொடக்கம் போலியோ சம்பவங்கள் உலகெங்கும் 99 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளன. இதனை முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் உலக சுகாதார அமைப்பின் செய்தித் தொடர்பாளர் கூறும்போது, 'காசாவில் கழிவுநீர் மாதிரிகளில் தொற்று நோய் இருப்பது அண்மையில் கண்டறியப்பட்டது. உலக சுகாதார அமைப்பு காசாவிற்கு 1 மில்லியன் போலியோ தடுப்பூசிகளை அனுப்பவுள்ளது. எனினும் தடுப்பூசிகள் குழந்தைகளைச் சென்றடைவதை உறுதி செய்ய போர் நிறுத்தம் தேவை' என்றார்.

எனினும் சர்வதேச மத்தியஸ்தர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய சுற்றுப் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் நீடித்து வரும் முன்மொழிவு ஒன்றில் பிரதமர் பெஞ்மின் நெதன்யாகுவின் இஸ்ரேலிய அரசு புதிய நிபந்தைகளை நுழைத்து போர் நிறுத்தம் ஒன்றை தடுத்து வருவதாக காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு எகிப்து மற்றும் கட்டார் மத்தியஸ்தத்தில் தொடர்ந்து முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. காசாவில் தொடர்ந்து 100க்கும் அதிகமான பணயக்கைதிகள் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்களை மீட்டுவர அழுத்தும் கொடுக்கும் வகையில் இஸ்ரேலில் பிரதமர் நெதன்யாகு அரசுக்கு எதிராக வாராந்தம் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ரோமில் புதிய சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற நிலையில் இஸ்ரேலிய அதிகாரிகள் அங்கிருந்து திரும்பியபோதும் அந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. உடன்பாடு ஒன்றை நெருங்கி இருப்பதாக இந்தப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணை வழங்கும் அமெரிக்கா தொடர்ந்து கூறி வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த மே மாதம் முன்வைத்த போர் நிறுத்தத் திட்டத்தின் அடிப்படையிலேயே தற்போது பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

எனினும் இஸ்ரேல் அளித்த பதில்களும் இதில் புதிய நிபந்தனைகளாக உள்ளடக்கப்பட்டிருப்பதாக ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது.

'புதிய நிபந்தனைகள் மற்றும் கோரிக்கைகளை அமைப்பதன் மூலம் உடன்படிக்கை ஒன்றை எட்டுவதை தள்ளிப்போடுவது, ஏமாற்றுவது மற்றும் தவிர்க்கும் மூலோபாயத்திற்கு நெதன்யாகு திரும்பி இருப்பதையே மத்தியஸ்தர்கள் வழங்கிய செய்தி தெளிவாகக் காட்டுகிறது' என்று ஹமாஸ் அமைப்பு திங்களன்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசா மக்கள் போர் நிறுத்தம் ஒன்று பற்றிய எதிர்பார்ப்பை இழந்துவிட்டார்கள் என்று டெயிர் நகரில் அடைக்கலம் பெற்றிருக்கும் காசா நகர குடியிருப்பாளரான 30 வயது அயா முஹமது குறிப்பிட்டுள்ளார். 'இது அனைத்தும் பொய்யானது. இங்கேயே இறந்து விடுவேன் என்று நான் நினைக்கிறேன். இங்கே முதலில் இறப்பது யார் என்று யாருக்கும் தெரியாது' என்று அவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 37 பேர் கொல்லப்பட்டு 73 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாக காசாவில் இஸ்ரேல் நடத்தி வரும் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 39,400 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 90,996 பேர் காயமடைந்துள்ளனர்.

காசா போரை ஒட்டி பிராந்தியத்தில் பதற்றம் நிலவி வரும் சூழலில் இஸ்ரேலின் லெபனான் எல்லையிலும் முழு அளவில் போர் வெடிக்கும் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. இஸ்ரேல் கட்டுப்பாட்டு கோலன் குன்றில் லெபனானில் இருந்து விழுந்த ரொக்கெட் குண்டினால் 12 சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கொல்லப்பட்டதற்கு அது பதில் தாக்குதலை நடத்த திட்டமிட்டு வருவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் தெற்கு லெபனானில் ஏழு இடங்கள் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதல்களில் குறைந்தது ஒரு ஹிஸ்புல்லா போராளி கொல்லப்பட்டுள்ளார். கடந்த திங்கட்கிழமை மாலை தொடக்கம் இஸ்ரேலிய போர் விமானங்கள் மற்றும் பீரங்கிகள் சுமார் 10 ஹிஸ்புல்லா இலக்குகளை தாக்கியதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜுலை மாதம் 31ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.